# முன்னேற்ற அறிக்கை
# 2022

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு

# செலவினத் தலைப்பு 193

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை.

2022 நவம்பர்

**வெளியீடு**

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு
7 ஆவது தளம், ‘‘மெஹெவர பியச’’
நாராஹேன்பிட்டி
கொழும்பு 05
தொலைபேசி : 011 2581991

# பொருளடக்கம்


பொருளடக்கம்........................................................................................ iii

அட்டவணைகளின் பட்டியல் ........................................................................ vi

வரைபடங்களின் பட்டியல்............................................................................ vii

விளக்கப்படங்களின் பட்டியல்......................................................................... viii

புகைப்படங்களின் பட்டியல் ........................................................................ ix

**முதலாம் அத்தியாயம் அறிமுகம்** ............................................................ 1

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு.......................................... 2

1.1 அறிமுகம்.................................................................................. 2
1.2 தொலைநோக்கு, செயற்பணி மற்றும் குறிக்கோள்கள்................................ 2
1.3 அமைச்சின் பணிகள் ...................................................................... 2
1.4 அமைச்சின் கீழுள்ள பிரிவுகள்............................................................. 3
1.4.1 தொழில் பிரிவின் கீழுள்ள பிரிவுகள் ................................................. 3
I. நிர்வாக மற்றும் தாபனப் பிரிவு.......................................................... 3
II. அபிவிருத்திப் பிரிவு...................................................................... 4
III. திட்டமிடல் மற்றும் கண்காணிப்புப் பிரிவு............................................ 5
IV. நிதிப் பிரிவு.............................................................................. 5
V. உள்ளக கணக்காய்வுப் பிரிவு............................................................ 5
1.4.2 வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பிரிவின் கீழுள்ள பிரிவுகள் .......................... 6
I. நிர்வாகப் பிரிவு.......................................................................... 6
II. அபிவிருத்திப் பிரிவு...................................................................... 6
III. திட்டமிடல் பிரிவு........................................................................ 7
IV. நிதிப் பிரிவு.............................................................................. 7
V. உள்ளக கணக்காய்வுப் பிரிவு............................................................ 7
1.5 அமைச்சின் கீழுள்ள நிறுவனங்கள் .................................................... 8
1.5.1 தொழில் திணைக்களம்.................................................................. 8
1.5.2 இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்................................... 10
1.5.3 மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம்.................................. 11
1.5.4 தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம்.................................................. 12
1.5.5 தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம்........................... 13
1.5.6 வேலையாளர் நட்டஈட்டு ஆணையாளர் அலுவலகம்.................................. 14
1.5.7 தேசிய உற்பத்தித்திறன் செயலகம்...................................................... 15
1.5.8 சிரம வாசனா நிதியம்.................................................................... 16
1.5.9 இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் தனியார் நிறுவனம்................... 16
1.6 அமைச்சுப் பதவியினரின் தொகுப்பு...................................................... 18

**இரண்டாம் அத்தியாயம்** ……………………………………………………………………………19

அமைச்சினால் அடையப்பட்டுள்ள முன்னேற்றம்…………………………………………………..…20

அமைச்சினால் அடையப்பட்டுள்ள முன்னேற்றம்…………………………………………………….…20

2.1 தொழிலாளர்களின் தொழில் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான சட்டக் கட்டமைப்பை வலுவூட்டுதல்……………………………………………………………………………………..21

2.2 வெளிநாட்டு வேலைவாய்ப்புகளை ஊக்குவிப்பதற்குத் தேவையான சட்ட மற்றும் கொள்கைக் கட்டமைப்பை வலுவூட்டுதல்……………………………………………………………...24

2.3 தொழிலாளர் படையணியை வலுவூட்டுதல் மற்றும் சர்வதேச தொழில் நியமங்களைப் பேணுதல்……………………………………………………………………………………...25

2.4 சர்வதேச ஒத்துழைப்பின் ஊடாக புலம்பெயர் தொழிலாளர்களை வலுவூட்டுதல்……………………………………………………………………………………..28

2.5 புலம்பெயர் தொழிலாளர்களையும் அவர்களின் குடும்ப அங்கத்தவர்களையும் பாதுகாத்தல், நலனோம்பல் மற்றும் வலுவூட்டுதல்…………………………………………………….….33

2.6 பொருளாதார அபிவிருத்திக்காக தொழில்துறை அமைதியைப் பேணுதல்……………………41

2.7 தொழில் நியமங்களைப் பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துதல் ……………………………...45

2.8 தொழிலாளர்களின் தொழில்சார் பாதுகாப்பிற்காக கண்ணியமான பணிச்சூழலை உறுதிப்படுத்துதல்……………………………………………………………………………...48

2.9 தொழிலாளர்களின் தொழில்சார் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள்……………………………………………………………………...….49

2.10 சேவையில் ஈடுபடும் பெண்களினதும் இளம் ஆட்களினதும் உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் குழந்தைத் தொழிலாளர் முறையை மறுதலித்தல்…………………….……………..…..51

2.11 தொழிலாளர்களின் சமூகப் பாதுகாப்பு…………………………………………….……..53

2.12 தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான சட்டப் பாதுகாப்பு……………………57

2.13 தகவல் தொடர்பாடல் நடவடிக்கைகள்……………………………………………………..59

2.14 தொழில் திணைக்களத்தின் மனித வள அபிவிருத்தி……………………………………...60

2.15 தொழில் திணைக்களத்தின் உட்கட்டமைப்பு வசதி அபிவிருத்தி……………………………..61

2.16 திணைக்களத்தின் பணிகளை மேற்பார்வையின் மூலம் இலக்குகளை நோக்கி வழிநடாத்துதல்…………………………………………………………………………...61

2.17 வெளிநாட்டு வேலைவாய்ப்புத் துறையின் நிர்வாகம் மற்றும் ஒழுங்குபடுத்தல்………………...62

2.18 வெளிநாட்டு வேலைவாய்ப்புத் துறையின் மேம்பாடு ………………………………………….64

2.19 தொழில்சார் வழிகாட்டல், உழைப்புச் சந்தை பற்றிய தகவல்களைப் பேணிவருதல் மற்றும் பொது வேலைவாய்ப்புச் சேவை நடவடிக்கைகள்…………………………………………..65

2.20 மிகச் சிறந்த தொழில் உறவுகளுக்காக முத்தரப்பு பங்காளர்களை விழிப்புணர்வூட்டுதல்……………………………………………………………..…....69

2.21 தொழில்சார் விபத்துகளுக்காக நட்டஈடு செலுத்துதல்……………………….…………71

2.22 அரச மற்றும் தனியார் துறையின் உற்பத்தித்திறனை மேம்படுத்துதல்………………………74

2.23 தொழிலாளர் சமுதாயத்தினருக்கு நலனோம்பல் நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்………………………………………………………….………...75

2.24 வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்காக தொழிலாளர்களை ஆற்றுப்படுத்துதல்………................78

2.25 கண்ணியமான பணி நிகழ்ச்சித்திட்டம்……………………………………………..……80

2.26 திட்டமிடல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகள்……………………………..…..80

2.27 நிருவாக மற்றும் தாபன செயற்பாடுகள்……………………………………………………….81

2.28 அமைச்சின் நிதிசார் முன்னேற்றம்…………………………………………………………..81

2.29 விசேட நிகழ்ச்சித்திட்டங்கள்………………………………………………………..…83

**மூன்றாம் அத்தியாயம்** ………………………………………………………………………...90

அமைச்சின் எதிர்காலத் திட்டங்கள் மற்றும் செயற்பாடுகள்……………………………..……91

# அட்டவணைகளின் பட்டியல்


| | | |
|---|---|---|
| அட்டவணை 1-1 | அமைச்சுப் பதவியினரின் தொகுப்பு | 18 |
| அட்டவணை 2-1 | புலம்பெயர் தொழிலாளர்களுக்காக நடத்தப்பட்ட நலனோம்பல் நிகழ்ச்சித்திட்டங்கள் - இ.வெ.வே.ப | 38 |
| அட்டவணை 2-2 | புலம்பெயர் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்காக புத்தகங்களையும் உபகரணங்களையும் பகர்ந்தளித்தல் - இ.வெ.வே.ப | 40 |
| அட்டவணை 2-3 | பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் - இ.வெ.வே.ப | 40 |
| அட்டவணை 2-4 | 2022.01.01. முதல் 2022.09.30 வரை மேற்கொள்ளப்பட்ட விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் - தொ.திணை | 41 |
| அட்டவணை 2-5 | ஆகக் குறைந்த சம்பளங்களை இற்றைப்படுத்திய சம்பளச் சபைகள் - தொ.திணை | 46 |
| அட்டவணை 2-6 | நீதிமன்றங்களின் பிரகாரம் வழக்குகளின் செயலாற்றுகை – 2022.01.01 முதல் 2022.09.30 வரை –தொ.திணை | 57 |
| அட்டவணை 2-7 | 2022.01.01 முதல் 2022.09.30 வரை தொழில் திணைக்களத்தினால் அலுவலர்களுக்காக ஒழுங்கு செய்யப்பட்டு நடத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | 61 |
| அட்டவணை 2-8 | 2022.01.01 முதல் 2022.09.30 வரை தொழில் திணைக்களத்தினால் வெளி பயிற்சி நிறுவனங்களின் பயிற்சிகளுக்காக அலுவலர்களுக்கு நிதி ஒதுக்கீடுகள் வழங்கப்படுதல் | 61 |
| அட்டவணை 2-9 | உரிமம் பெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கான அனுமதிப்பத்திரங்களை வழங்குதல், வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்கான கோரிக்கைகள் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்காக பதிவு செய்தல் - இ.வெ.வே.ப | 62 |
| அட்டவணை 2-10 | உரிமம் பெற்ற முகவர் நிறுவனங்கள்/ உரிமம் பெற்றிராத ஏனைய தரப்பினர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் -இ.வெ.வே.ப | 63 |
| அட்டவணை 2-11 | மனித வியாபாரத்திற்கு எதிரான செயற்பாடுகள் மற்றும் புலம்பெயர் தொழிலாளர்களிடமிருந்து அல்லது அவர்கள் சார்பாக கிடைக்கும் முறைப்பாடுகளைத் தீர்த்தல் - இ.வெ.வே.ப | 63 |
| அட்டவணை 2-12 | தொழில் வங்கி ஊடாக தொழில் அபேட்சகர்களைப் பதிவு செய்தல் - இ.வெ.வே.ப | 64 |
| அட்டவணை 2-13 | இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தினால் வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்காக ஆட்சேர்க்கப்படுதல் - இ.வெ.வே.ப | 65 |
| அட்டவணை 2.14 | வெளிநாட்டு வேலைவாய்ப்பு மேம்பாட்டு நிகழ்ச்சிகளை நடாத்துதல் - இ.வெ.வே.ப | 65 |
| அட்டவணை 2.15 | தொழில்சார் வழிகாட்டல் நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம் - மனி.மற்றும் வே.திணை | 66 |
| அட்டவணை 2-16 | பொது வேலைவாய்ப்புச் சேவை நடவடிக்கைகளின் முன்னேற்றம் - மனி.மற்றும் வே.திணை | 68 |
| அட்டவணை 2-17 | தேசிய தொழில் கற்கைகள் நிறுவகத்தின் முன்னேற்றம் | 70 |
| அட்டவணை 2-18 | தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் - தே.தொ.பா. மற்றும் சு.நி | 71 |
| அட்டவணை 2-19 | நட்டஈடு செலுத்தல் நடவடிக்கைகளின் முன்னேற்றம் - வே.நட்டஈட்டு.ஆணை.அலு | 73 |
| அட்டவணை 2-20 | நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம் - தே.உ.செ | 74 |
| அட்டவணை 2-21 | சிரம வாசனா நிதியத்தினால் பாடசாலைப் புத்தகங்களும் உபகரணங்களும் வழங்கப்படுதல் | 76 |
| அட்டவணை 2-.22 | சிரம வாசனா நிதியத்தினால் வழங்கப்பட்ட சட்ட உதவிகளின் அளவு | 77 |
| அட்டவணை 2-23 | இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் (தனியார்) நிறுவனத்திற்குக் கிடைத்துள்ள வேலைவாய்ப்புகள் | 79 |
| அட்டவணை 2-24 | கண்ணியமான பணி நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்துதல் | 80 |

| | | |
|---|---|---|
| அட்டவணை 2-25 | நிறுவன செயற்பாடுகளின் முன்னேற்றம் | 81 |
| அட்டவணை 2-26 | திறைசேரி ஒதுக்கீடுகளைப் பயன்படுத்துவதன் முன்னேற்றம் | 82 |


## வரைபடங்களின் பட்டியல்


| | | |
|---|---|---|
| வரைபடம் 2-1 | “ஸ்ரமிக சுரெகும” இன் கீழ் பதிவு செய்யப்படுதல் | 34 |
| வரைபடம் 2-2 | அபிவிருத்தி உத்தியோகத்தர்களால் தயாரிக்கப்பட்ட குடும்ப அபிவிருத்தி மற்றும் பாதுகாப்புத் திட்டங்கள் | 35 |
| வரைபடம் 2-3 | 2022.01.01. முதல் 2022.09.30 வரை தொழில் பிணக்குகள் மற்றும் நியதிச் சட்ட மீறல்கள் பற்றிய முறைப்பாடுகள் கிடைக்கப்படுதல் மற்றும் தீர்க்கப்படுதல் – தொ.திணை | 44 |
| வரைபடம் 2-4 | 2022.01.01. முதல் 2022.09.30 வரை ஊழியர் சேமலாப நிதியத்தின் அனுகூலங்களைப் பெற்றவர்களின் எண்ணிக்கை – தொ.திணை | 55 |
| வரைபடம் 2-5 | ஊழியர் சேமலாப நிதியத்தின் அனுகூலங்களைச் செலுத்துவதற்காக எடுக்கப்பட்ட காலம் – 2017 ஆம் ஆண்டு தொடக்கம் 2022 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டு வரை – தொ.திணை | 56 |
| வரைபடம் 2-6 | 2022.01.01. முதல் 2022.09.30 வரை நீதிவான் நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழங்குகள் மற்றும் தீர்க்கப்பட்டுள்ள வழக்குகள் – தொ.திணை | 58 |
| வரைபடம் 2-7 | தேசிய தொழில் கற்கைகள் நிறுவகத்தின் பயிற்சி நடவடிக்கைகளின் வருமானம | 69 |
| வரைபடம் 2-8 | நடத்தப்பட்ட பாடநெறிகளின் பிரகாரம் பயிற்சி நடவடிக்கைகளின் மொத்த வருமானம் தே.தொ.க.நி | 69 |
| வரைபடம் 2-9 | பதிவாகிய மரணத்தை ஏற்படுத்தும் விபத்துகளின் எண்ணிக்கை | 72 |
| வரைபடம் 2-10 | பதிவாகிய மரணத்தை ஏற்படுத்தாத விபத்துகளின் எண்ணிக்கை | 73 |
| வரைபடம் 2-11 | வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட நபர்களின் எண்ணிக்கை – இ.வெ.வே.மு.த.நி | 78 |

**விளக்கப்படங்களின் பட்டியல்**


| | | |
|---|---|---|
| விளக்கப்படம் 1-1 | தொழில் திணைக்களத்தின் கட்டமைப்பு | 9 |
| விளக்கப்படம் 1-2 | இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் கட்டமைப்பு | 11 |
| விளக்கப்படம் 2-1 | இலங்கையின் தொழில் சந்தை பற்றிய தகவல்கள் 2021 | 20 |
| விளக்கப்படம் 2-2 | தொழில் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொழில் பரிசோதனைகள் – தொ.திணை | 43 |
| விளக்கப்படம் 2-3 | வேலை பகிஷ்கரிப்புகள் பற்றிய தகவல்கள் | 45 |
| விளக்கப்படம் 2-4 | 05 நாள் வேலை வாரத்திற்காக அங்கீகாரம் வழங்கப்படுதல் – தொ.திணை | 47 |
| விளக்கப்படம் 2-5 | கூட்டு ஒப்பந்தங்களின் சட்ட ரீதியான செல்லுப்படித் தன்மையை பரிசோதித்தல் – தொ.திணை | 47 |
| விளக்கப்படம் 2-6 | சம்பளத்திலிருந்து கழிப்பதற்காக கிடைக்கும் கோரிக்கைகளுக்கு அனுமதியளிக்கப்படுதல் – தொ.திணை | 47 |
| விளக்கப்படம் 2-7 | சட்டங்கள் தொடர்பில் பொது மக்கள் மற்றும் பல்வேறுபட்ட நிறுவனங்களால் மேற்கொள்ளப்படுகின்ற விசாரணைகளுக்கு தெளிவுபடுத்தல்களையும் பொருள்கோடல்களையும் வழங்குதல் – தொ.திணை | 48 |
| விளக்கப்படம் 2-8 | ஆபத்து அற்ற பணிச் சூழலை உறுதிப்படுத்துவதற்கான செயற்பாடுகளின் முன்னேற்றம் – தொ.திணை | 49 |
| விளக்கப்படம் 2-9 | தொழில்சார் நலவியல் செயற்பாடுகளின் முன்னேற்றம் – தொ.திணை | 50 |
| விளக்கப்படம் 2-10 | குழந்தைத் தொழிலாளர்கள் பற்றிய முறைப்பாடுகளை விசாரித்தல் – தொ.திணை | 51 |
| விளக்கப்படம் 2-11 | பெண்களை இரவு நேரங்களில் சேவையில் ஈடுபடுத்துதல் சம்பந்தமான முறைப்பாடுகள் மீதான விசாரணைகள் – தொ.திணை | 52 |
| விளக்கப்படம் 2-12 | பெண்களை இரவு நேர சேவையில் ஈடுபடுத்துவதற்காக அனுமதி வழங்குதல் – தொ.திணை | 52 |
| விளக்கப்படம் 2-13 | ஊழியர் சேமலாப நிதியத்திற்கான விண்ணப்பப்படிவங்களை ஒப்படைக்கும் நடவடிக்கைகள் – தொ.திணை | 55 |
| விளக்கப்படம் 2-14 | அறிவித்தல்களை அனுப்புவதன் முன்னேற்றம் – ஊ.சே.நி | 57 |

## புகைப்படங்களின் பட்டியல்


| | | |
|---|---|---|
| புகைப்படம் 2-1 | சர்வதேச தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடல | 27 |
| புகைப்படம் 2-2 | உடனான சந்திப்பு மலேசியாவின் உயர் ஆணையர் | 32 |
| புகைப்படம் 2-3 | புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கான புலமைப்பரிசில் உதவித்தொகை வழங்கப்படுதல் | 39 |
| புகைப்படம் 2-4 | புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் குழந்தைகளுக்கான பகல்நேர பராமரிப்பு நிலையங்களை நிறுவுவது பற்றிய கலந்துரையாடல் | 64 |
| புகைப்படம் 2-5 | தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய தேசிய மாநாடு | 72 |
| புகைப்படம் 2-6 | தேசிய உற்பத்தித்திறன் விருது வழங்கும் விழா - தென் மாகாணம் | 75 |
| புகைப்படம் 2-7 | குறைந்த வருமானம் கொண்ட ஊழியர்களின் பாடசாலைப் பிள்ளைகளுக்கான பாடசாலை உபகரணங்கள் வழங்கப்படுதல் | 77 |
| புகைப்படம் 2-8 | ஊழியர் சேமலாப நிதி விண்ணப்பங்களைக் கையளிப்பதற்காக நேரத்தை ஒதுக்கிக்கொள்ளும் முறைமையைத் தொடங்குதல் | 83 |
| புகைப்படம் 2-9 | புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தை ஆரம்பித்தல் | 86 |

# முதலாம் அத்தியாயம்
# அறிமுகம்

# தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு

## 1.1 அறிமுகம்

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ரீதியில் தொழில் சந்தைக்குப் பொருத்தமான பயிற்சிபெற்ற ஊழியர்களை ஆற்றுப்படுத்துதல், வேலைவாய்ப்புகளில் ஈடுபடுத்துதல், அவர்களின் தொழில் உரிமைகளைப் பாதுகாத்தல், தொழில் பாதுகாப்பினை உறுதிப்படுத்துதல் மற்றும் நாட்டில் தொழில்துறை அமைதியை ஏற்படுத்துவதன் ஊடாக பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களித்தல் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் பிரதான செயற்பணியாகும். இப்பணியினை நிறைவேற்றிக் கொள்ளும்போது தனித்துவமான செயற்பாடுகள் பலவற்றின் ஊடாக தொழிற் படையினருக்கு தனிச்சிறப்பான சேவையை வழங்கும் பொறுப்பினை இவ் அமைச்சு கொண்டுள்ளது. இப்பணியினை நிறைவேற்றும் போது நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் மற்றும் இலங்கையினால் உறுதிப்படுத்தப்பட்டுள்ள சர்வதேச சமவாயங்களின் மீது 2022.07.22 ஆம் திகதிய 2289/43 ஆம் இலக்கமுடைய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் அமைச்சின் நிகழ்ச்சிகள் வரிசைப்படுத்தப்பட்டுள்ளன.

## 1.2 தொலைநோக்கு, செயற்பணி மற்றும் குறிக்கோள்கள்

**தொலைநோக்கு**

திருப்திமிகு உற்பத்தித்திறன் கொண்ட தொழிலணி

**செயற்பணி**

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொழில் சந்தைக்கு திறமையான மனித வளத்தை வழங்குதல் மற்றும் தொழில்துறை அமைதி, ஒத்துழைப்பு, சமூகப்பாதுகாப்பு, வேலையாட்களின் உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் ஆக்கத்திறனை மேம்படுத்துவதனூடாக சமூகப் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களித்தல்

## 1.3 அமைச்சின் பணிகள்

1. அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற கொள்கைகளின் மீது அடிப்படையாக அமைந்து தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஆகிய விடயங்களுக்கு உரிய கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை வகுத்தல், நடைமுறைப்படுத்துதல், பின்னாய்வு செய்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்.

2. தொழில் வாய்ப்புகளுக்காக புலம்பெயர்தல் பற்றிய இலங்கையின் தேசியக் கொள்கையும் தேசிய மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புக் கொள்கையையும் நடைமுறைப்படுத்துதல்.

3. சர்வதேச நியமங்களுக்கு அமைவாக தொழில் உறவுகள், நியமங்கள், ஊழியர் நிர்வாகம், நலனோம்பல் மற்றும் சுகாதாரம் தொடர்பாக கொள்கைகளைத் தயாரித்தலும் நடைமுறைப்படுத்தலும்.

4. சர்வதேச தொழிலாளர் அமைப்பு மற்றும் சர்வதேச சமூகப் பாதுகாப்பு அமைப்புகளுடன் பரஸ்பர ஒத்துழைப்பைப் பேணுதல்.

5. ஊழியர் சேமலாப நிதியம், தனிப்பட்ட சேமலாப நிதியங்கள் மற்றும் தனிப்பட்ட இளைப்பாறல் முறைகளை நிர்வாகம் செய்தல் மற்றும் ஒழுங்குபடுத்துதல்.

6. தொழில் உறவுகள் மற்றும் கைத்தொழில் பிணக்குகளைத் தீர்த்தல்

7. தொழில் உறவுகளுக்கான சட்டதிட்டங்களை வகுத்தல் மற்றும் ஒழுங்குபடுத்தல்களுக்கான செயற்பாடுகள்.

8. தொழிற்சங்கங்களைப் பதிவு செய்தல் மற்றும் அரச, தனியார் துறைகளின் சகல தொழிற்சங்க நடவடிக்கைகளையும் நாட்டின் அபிவிருத்திக்காக பயன்படுத்துவதற்குத் தேவையான சாதகமான நடவடிக்கைகளை அறிமுகப்படுத்துதல் மற்றும் நடைமுறைப்படுத்துதல்.

9. தேசிய உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்காக கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களைத் தயாரித்தலும் நடைமுறைப்படுத்தலும்.

10. வெளிநாட்டு வேலை வாய்ப்புகளை அதிகரித்தல், ஊக்குவித்தல் மற்றும் அத் தொழில் வாய்ப்புகளுக்குத் தேவையான திறன்களை மேம்படுத்தும் நிறுவனங்களுடன் பணியாற்றுதல்.

11. வெளிநாடுகளில் பணி புரியும் தொழிலாளர்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் செயன்முறைகளை அறிமுகம் செய்தல்.

12. வெளிநாடுகளில் பணிபுரிகின்ற தொழிலாளர்களுக்கும் வெளிநாடுகளில் வாழ்கின்ற இலங்கையர்களுக்கும் அந்நியச் செலாவணியை இலங்கையில் சேமிப்பதற்கும் முதலீடு செய்வதற்கும் விசேட வசதிகளை வழங்குதல்.

13. வெளிநாடுகளில் வேலைவாய்ப்புகளில் ஈடுபட்டு நாட்டுக்கு வருகை தருகின்ற நபர்களுக்கு தொழில் முயற்சிகளை ஆரம்பிப்பதற்கு விசேட நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.

14. புலம்பெயர் தொழிலாளர்களின் தொழில்சார் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்குதல், பாதுகாப்பு மற்றும் நலனோம்பல் நடவடிக்கைகளைப் பேணிவருதல்.

15. வெளிநாடுகளில் பல்வேறுபட்ட விபத்துகளுக்கு உள்ளாகின்றவர்களுக்கு உரித்தான நட்டஈடுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயன்முறையை வலுப்படுத்துவதற்குத் தேவையான சட்ட மறுசீரமைப்புகளை அறிமுகம் செய்தல்.

16. வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனங்களை ஒழுங்குறுத்துதல்.

17. அமைச்சின் விடயப் பரப்புக்குள் வருகின்ற பொதுச் சேவைகளை வினைத்திறனாகவும் மக்கள் நேயமாகவும் வழங்குதல்.

18. தொழில் திணைக்களம், மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம், தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம், தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம், வேலையாளர் நட்டஈட்டு ஆணையாளர் அலுவலகம், தேசிய உற்பத்தித்திறன் செயலகம், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் தனியார் நிறுவனம் மற்றும் சிரம வாசனா நிதியம் ஆகிய நிறுவனங்களுக்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ள ஏனைய அனைத்து விடயங்களுக்குமுரிய நடவடிக்கைகள் மற்றும் நிறுவனங்களை மேற்பார்வை செய்தல்.

## 1.4 அமைச்சின் கீழுள்ள பிரிவுகள்

பணியை மிகவும் வினைத்திறன்மிக்க வகையில் நிறைவேற்றுவதற்காக அமைச்சானது தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு என்ற வகையில் இரண்டு பிரிவுகளைக் கொண்டமைந்துள்ளது.

### 1.4.1 தொழில் பிரிவின் கீழுள்ள பிரிவுகள்

#### I. நிர்வாக மற்றும் தாபனப் பிரிவு

- அமைச்சின் நிர்வாகம், முகாமைத்துவம், பொதுவான பராமரிப்பு, பயிற்சியளித்தல் மற்றும் அமைச்சினையும் அமைச்சின் கீழ் இயங்கி வருகின்ற நிறுவனங்களையும்

இணைப்பாக்கம் செய்தல் மற்றும் மனிதவள முகாமைத்துவம் மற்றும் அது சார்ந்த கடமைகள் இதன்கீழ் இடம்பெறுகின்றன. அதன் பிரகாரம்,

- அமைச்சுக்கு இணைக்கப்பட்டுள்ள சகல அரச ஊழியர்களினதும் கௌரவ அமைச்சரின் உதவி பணியாட்டொகுதியினரதும் தனிப்பட்ட கடிதக் கோப்புகளைப் பேணி வருதல் மற்றும் அது சார்ந்த ஏனைய நிறுவன நடவடிக்கைகள் மற்றும் பணியாட்டொகுதிகளின் தகவல்களை இற்றைப்படுத்தி பேணி வருதல்.
- அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்களில் சேவையாற்றுகின்ற அலுவலர்கள் சம்பந்தமாக அமைச்சினால் மேற்கொள்ளப்பட வேண்டிய நிறுவன நடவடிக்கைகள்.
- அமைச்சின் பொருட்டு அமைச்சரவை விஞ்ஞாபனங்களைத் தயாரித்தல் மற்றும் அமைச்சரவைத் தீர்மானங்கள் தொடர்பில் செயலாற்றுதல் இந்த பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுவதோடு அதன் கீழ் வலுவிலுள்ள தொழில் சட்டங்களை இற்றைப்படுத்துதல் மற்றும் புதிய சட்டங்களை விதிப்பதன் மூலம் தொழில்துறை ஒத்துழைப்பினை ஏற்படுத்துவதற்கு கொள்கை ரீதியான பங்களிப்பினை வழங்குதல்.
- ஆலோசனைக் குழுக்கள், பொது மனுக் குழு ஆகியவற்றினால் கோரப்படுகின்ற விடயங்களுக்கு பதில் வழங்குதல் மற்றும் பாராளுமன்ற வினாக்களுக்கு பதிலளித்தல் மேற்கொள்ளப்படுகின்றன. ஜனாதிபதி செயலகம் மற்றும் பிரதமர் அலுவலகத்தினால் அனுப்பப்படுகின்ற பொதுமக்களின் முறைப்பாடுகளும் நேரடியாக கிடைக்கின்ற மக்களின் முறைப்பாடுகளும் உரிய பிரிவுகளுக்கு ஆற்றுப்படுத்தப்படுகின்றன.
- அமைச்சின் வாகன நிர்வாகம், தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல், பயிற்சி நடவடிக்கைகள், மூலதன பொருட்கள் மற்றும் உபகரணங்களின் முகாமைத்துவம், மேலதிக நேரக் கொடுப்பனவுகள், விடுமுறை நாள் சம்பளம், அக்ரஹாரா காப்புறுதி மற்றும் இடர் உதவிக் கடன் அங்கீகரிக்கப்படுதல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

## II. அபிவிருத்திப் பிரிவு

அபிவிருத்திப் பிரிவு ஆனது தொழில் மற்றும் வெளிநாட்டு உறவுகள் மற்றும் அபிவிருத்தி ஆகிய அலகுகளைக் கொண்டமைந்துள்ளது. சர்வதேச தொழிலாளர் அமைப்பின் உறுப்பு நாடாக இலங்கையினால் அந்த அமைப்புடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டுள்ள கடப்பாட்டினை, சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட சமவாயங்கள் மற்றும் பரிந்துரைகளின் கீழ் இந்நாட்டில் தொழிலாளர் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் தொழில்துறையில் காணப்படுகின்ற பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குமாக பயன்படுத்துவதற்கான பொறுப்பு இவ் அமைச்சினால் நிறைவேற்றப்படுகிறது.

- இலங்கையினால் உறுதிப்படுத்தப்பட்டுள்ள சர்வதேச தொழிலாளர் அமைப்பின் தொழில் பட்டயங்கள் இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படுவதன் முன்னேற்றத்தை உரிய காலப்பகுதியில் சர்வதேச தொழிலாளர் அமைப்புக்கு முன்வைத்தல்.
- இலங்கை தொழில்துறை தொடர்பில் அடைந்துள்ள முன்னேற்றத்தின் அடிப்படையில் சர்வதேச சமுதாயத்தினரை விழிப்புணர்வூட்டுவதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- தொழில்துறை சார்ந்ததாக காணப்படுகின்ற பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு சர்வதேச தொழிலாளர் அமைப்பின் நிதி மற்றும் தொழில்நுட்ப ஆதரவைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்களைச் சேர்ந்த அலுவலர்களுக்கு வெளிநாட்டு பயிற்சிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- புதிய சட்டங்களை உருவாக்குதல் மற்றும் நடைமுறையிலுள்ள தொழில் சட்டங்களை காலத்துக்கு ஏற்ற வகையில் திருத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் ஆதரவளித்தல்.
- தொழில்துறை சார்ந்த பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை வழங்குவதற்காக பாட்டாளி மக்கள் வாழ்கின்ற பிரதேசங்களில் நடமாடும் சேவை நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்தல்.

### III. திட்டமிடல் மற்றும் கண்காணிப்புப் பிரிவு

அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள சகல நிறுவனங்களுக்குமான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை சரியான இலக்குகளின் ஊடாக நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான திட்டங்களைத் தயாரித்தல், அவற்றை நடைமுறைப்படுத்துதல், முன்னேற்ற மீளாய்வு மற்றும் பின்னாய்வு செய்தல் இதன் பிரதான பணியாக அமைவதோடு பின்வரும் செயற்பாடுகளும் நிறைவேற்றப்படுகின்றன.

- அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்தி இலக்குகளை உள்ளடங்கிய வருடாந்த செயற்பாட்டுத் திட்டத்தைத் தயாரித்து சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு ஆற்றுப்படுத்துதல். பூஜ்ஜிய அடிப்படையிலான வரவு செலவு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வருடாந்த செயற்பாட்டுத் திட்டத்தைத் தயாரித்தல், நடைமுறைப்படுத்துதல் மற்றும் ஒவ்வொரு மாதமும் முன்னேற்றத்தை மதிப்பீடு செய்வதன் மூலம் இலக்குகளை அடைவதைக் கண்காணித்தல் மற்றும் ஊக்குவித்தல்.
- தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கைகளின் படி ஜனாதிபதி செயலகம், நிதி அமைச்சு, கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களம் மற்றும் தேசிய திட்டமிடல் திணைக்களத்துடன் இணைப்பாக்கத்தினைப் பேணி வருதல் மற்றும் முன்னேற்ற அறிக்கைகளை மாதாந்தம் மற்றும் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை சமர்ப்பித்தல்.
- தொழில்துறையின் பல்வேறுபட்ட காலோசிதமான கருப்பொருள்களை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு ரீதியான கட்டுரைகளை உள்ளடக்கிய இதழ் ஒன்றை வருடாந்தம் வெளியிடுதல்.
- அமைச்சினால் அடையப்பட்டுள்ள முன்னேற்றத்தை உள்ளடக்கிய வருடாந்த செயலாற்றுகை அறிக்கை மற்றும் வரவு செலவுத்திட்ட குழுநிலை விவாதத்திற்காக முன்னேற்ற அறிக்கைகளைத் தயாரித்தல்.
- இலங்கை தொழிலாளர் சஞ்சிகையை வெளியிடுவதற்கான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுதல்.

### IV. நிதிப் பிரிவு

வருடாந்த வரவு செலவுத் திட்டத்தின் மூலம் அமைச்சுக்கு ஒதுக்கப்படும் நிதி ஏற்பாடுகளை அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு அமைவாக உரிய நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதன் பொருட்டு வினைத்திறன்மிக்க வகையிலும் ஆக்கவிளைவுடனும் பயன்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

### V. உள்ளக கணக்காய்வுப் பிரிவு

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(ஆ) மற்றும் (எ) பிரிவில் தரப்பட்டவாறு பிரதம கணக்கீட்டு அலுவலரின் பொறுப்பு ஆற்றப்படுகின்றது என்பதை உறுதிப்படுத்துவதற்கு அச் சட்டத்தின் 40 ஆம் பிரிவின்படி மேற்கொள்ளப்பட்டுள்ள நியமனங்கள் மற்றும் நிதி ஒழுங்குவிதி 113 மற்றும் 114 இன்படி உள்ளக கணக்காய்வுப் பிரிவுக்கு உரித்தளிக்கப்பட்டுள்ள தத்துவங்கள் மற்றும் கணக்காய்வு முகாமைத்துவ திணைக்களத்தின் 2019.01.12 ஆம் திகதியிடப்பட்ட 01/2019 ஆம் இலக்க சுற்றறிக்கையின் தேவைப்பாடுகளின் படி அமைச்சின் உள்ளக கணக்காய்வுச் செயற்பாடுகள் ஆற்றப்படுகின்றன.

அமைச்சின் தொழில் பிரிவு, அதன் கீழ் உள்ள திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களின் நிதி முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாடு மற்றும் அந் நிறுவனங்களின் ஆக்கத்திறன் ஆகிய விடயங்கள் தொடர்பில் காணப்படுகின்ற பலவீனங்கள், குறைபாடுகள் என்பவற்றை தவிர்த்துக் கொள்ளல் மற்றும் இலக்குகளை அடைவதற்காக தாபன விதிக்கோவை, நிதி ஒழுங்குவிதிகள், பெறுகை வழிகாட்டல்கள் மற்றும் அரசாங்கத்தினால் வெளியிடப்படுகின்ற சுற்றறிக்கைகளுக்கு இசைவாக்கம் அடைதல் தொடர்பான வழிகாட்டல்கள் வழங்கப்படுதல், அரச கொள்கைகள், நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்காக அமைச்சின் கீழ் வருகின்ற நிறுவனங்களில் காணப்படுகின்ற பிரச்சினைகளைக் குறைத்து உள்ளக கட்டுப்பாடுகளை பலப்படுத்துவதற்கு பங்களித்தல் மற்றும் முறையான நேர்மைமிக்க சேவைக்காக தொடர்ந்தும் ஆதரவளித்தல் இடம்பெறுகின்றன.

### 1.4.2 வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பிரிவின் கீழுள்ள பிரிவுகள்

#### I. நிர்வாக மற்றும் தாபனப் பிரிவு

அமைச்சின் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பிரிவுக்கான பிரதான பணிகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான வசதிகளை வழங்குவதற்காக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரிவின் சகல நிறுவன மற்றும் நிர்வாக நடவடிக்கைகளையும் நிறைவேற்றுவது இப்பிரிவின் பொறுப்பாகும்.

- வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பிரிவுக்கு இணைக்கப்பட்டுள்ள சகல அரச ஊழியர்களினதும் தனிப்பட்ட கடிதக் கோப்புகளைப் பேணி வருதல் மற்றும் அது சார்ந்த ஏனைய நிறுவன நடவடிக்கைகள் மற்றும் பணியாட்டொகுதிகளின் தகவல்களை இற்றைப்படுத்தி பேணி வருதல்.
- அமைச்சின் பொருட்டு அமைச்சரவை விஞ்ஞாபனங்களைத் தயாரித்தல் மற்றும் அமைச்சரவைத் தீர்மானங்கள் தொடர்பில் செயலாற்றுதல் இப் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுவதோடு ஆலோசனைக் குழுக்கள், பொது மனுக் குழு ஆகியவற்றினால் கோரப்படுகின்ற விடயங்களுக்கு பதில் வழங்குதல் மற்றும் பாராளுமன்ற வினாக்களுக்கு பதிலளித்தல் மேற்கொள்ளப்படுகின்றன. ஜனாதிபதி செயலகம் மற்றும் பிரதமர் அலுவலகத்தினால் அனுப்பப்படுகின்ற பொதுமக்களின் முறைப்பாடுகளும் நேரடியாக கிடைக்கின்ற மக்களின் முறைப்பாடுகளும் உரிய பிரிவுகளுக்கு ஆற்றுப்படுத்தப்படுகின்றன.
- பிரிவுக்கான வாகன நிர்வாகம், தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல், பயிற்சி நடவடிக்கைகள், மூலதன பொருட்கள் மற்றும் உபகரணங்களின் முகாமைத்துவம், மேலதிக நேரக் கொடுப்பனவுகள், விடுமுறை நாள் சம்பளம், அக்ரஹாரா காப்புறுதி மற்றும் இடர் உதவிக் கடன் அங்கீகரிக்கப்படுதல் போன்ற நடவடிக்கைகள் மற்றும் புலனாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.
- இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் மற்றும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் தனியார் நிறுவனம் ஆகிய நிறுவனங்களின் தாபன மற்றும் நிர்வாக நடவடிக்கைகள் பற்றிய பொறுப்பினைக் கொண்டுள்ளது.

#### II. அபிவிருத்திப் பிரிவு

அபிவிருத்திப் பிரிவானது இரண்டு உப பிரிவுகளின் கீழ் கடமைகளைப் பகிர்ந்து நிறைவேற்றுவதோடு வெளிநாட்டு உறவுகள் பிரிவு மற்றும் அபிவிருத்திப் பிரிவு என்பன அப் பிரிவுகள் ஆகும்.

புலம்பெயர் துறைக்குரிய சர்வதேச சமவாயங்கள் தொடர்பான நடவடிக்கைகள், வெளிநாட்டு அமைச்சு, ஐக்கிய நாடுகள் அமைப்பு மற்றம் ஏனைய நிறுவனங்களினால் இடைக்கிடை கோரப்படுகின்ற புலம்பெயர் துறை தொடர்பான பிரச்சினைகள், முன்மொழிவுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை வழங்குதல், புதிய புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்/உடன்பாடுகளை ஏற்படுத்திக் கொள்ளல், ஒப்பந்தங்களை இற்றைப்படுத்துதல், ஒப்பந்தங்களின் செயற்பாடு தொடர்பாக பின்னாய்வு செய்தல்/ஒருங்கிணைந்த குழுக் கூட்டங்களுக்கான நடவடிக்கைகள் மற்றும் வலய/ உலகளாவிய கருத்தாடல்களுடன் சம்பந்தப்பட்ட சகல நடவடிக்கைகளும் வெளிநாட்டு உறவுகள் பற்றிய பிரிவின் பிரதான பணிகளாகும்.

புலம்பெயர் துறைக்கான கட்டளைச் சட்டங்கள், ஒழுங்கு விதிகள், வழிகாட்டல்கள் மற்றும் கொள்கைகள் தயாரிக்கப்படுதல் மற்றும் பின்னாய்வு செய்யப்படுதல், அபிவிருத்தி செயற்பாடுகளுடன் சம்பந்தப்பட்ட அமைச்சுக்கான விடயப்பரப்புகள் தொடர்பாக அமைச்சரவை விஞ்ஞாபனங்களையும் அமைச்சரவை குறிப்புகளையும் தயாரித்தல், துறையில் இணைக்கப்பட்டுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் விடயம்சார் பயிற்சிகள் மற்றும் பயிற்றுவிப்பாளர்களைப் பயிற்றுவிப்பதற்கான சேர்மத்தைப் பேணி வருதல், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஊடாக மாவட்ட மற்றும் பிரதேச செயலக பிரிவு மட்டங்களில் நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் மற்றும் புலம்பெயர் பெண் தொழிலாளர்கள் சம்பந்தமான குடும்பப் பின்னணி அறிக்கைகள் தொடர்பில் மேன்முறையீட்டு குழுக்களை நடாத்துதல், குழுக்களின்

தீர்மானங்களைத் தெரிவித்து அனுப்புதல் மற்றும் பின்னாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் அபிவிருத்திப் பிரிவின் பிரதான பணிகளாகும்.

### III. திட்டமிடல் பிரிவு

வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பிரிவுக்கான ஒட்டுமொத்த திட்டமிடல், தொழிற்பாடுகள், மதிப்பீடுகள் மற்றும் அறிக்கையிடல் என்பன திட்டமிடல் பிரிவின் அடிப்படைப் பொறுப்புகளாகும்.

வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பிரிவுடன் இணைந்த நிறுவனங்களோடு ஒன்றிணைந்து அபிவிருத்தித் திட்டங்களையும் வருடாந்த செயற்பாட்டுத் திட்டங்களையும் தயாரித்தல், நடைமுறைப்படுத்துதல், மேற்பார்வை செய்தல், முன்னேற்ற மீளாய்வு மற்றும் பின்னாய்வு என்பன திட்டமிடல் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்ற பணிகளாகும்.

இப்பிரிவினால் மாவட்டச் செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்களுக்கு இணைக்கப்பட்டுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஊடாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் ஆதரவோடு மாவட்ட மற்றும் பிரதேச செயலக பிரிவு மட்டங்களில் நடைமுறைப்படுத்தப்படுகின்ற வெளிநாட்டு வேலை வாய்ப்புத் துறை சம்பந்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களைத் திட்டமிடுதல், மேற்பார்வை செய்தல் மற்றும் அறிக்கையிடல் நடவடிக்கைகளும் நிறைவேற்றப்படுகின்றன.

வெளிநாட்டு வேலை வாய்ப்பு விடயப் பரப்புக்கான அபிவிருத்தி கருத்திட்டங்களைத் தயாரித்தல், வருடாந்த செயலாற்றுகை அறிக்கை மற்றும் வரவு செலவுத்திட்ட குழுநிலை விவாதத்திற்காக முன்னேற்ற அறிக்கையைத் தயாரித்தல் திட்டமிடல் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்ற பணிகளுக்கு மத்தியில் முக்கியத்துவம் பெறுகின்றது.

### IV. நிதிப் பிரிவு

வருடாந்த வரவு செலவுத் திட்டத்தின் மூலம் அமைச்சுக்கு ஒதுக்கப்படும் நிதி ஒதுக்கீடுகளை அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு அமைவாக உரிய நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டு வினைத்திறன் மிக்க வகையிலும் ஆக்கவிளைவுடனும் பயன்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வது கணக்குப் பிரிவின் பிரதான பொறுப்பாகும். அததோடு கணக்காய்வு விசாரணைப் பதிவேடுகளை இற்றைப்படுத்தி பேணிவருதல் மற்றும் கணக்காய்வு விசாரணைகளுக்கான உரிய பதில்களை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்புதல் மேற்கொள்ளப்படுகின்றன.

2022 ஆம் ஆண்டு தொடக்கம் நாடுபூராகவும் சேவையாற்றுகின்ற அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான சம்பளம் செலுத்தல் அமைச்சினால் மத்திய மயப்படுத்தப்பட்டதாக மேற்கொள்ளப்படுகின்றது.

### V. உள்ளக கணக்காய்வு

கணக்காய்வு குழுக் கூட்டங்களை (காலாண்டு ரீதியில்) நடாத்துதல், வருடாந்த கணக்காய்வுத் திட்டங்களைத் தயாரித்தல், உள்ளக கணக்காய்வு விசாரணைகள் மற்றும் விசேட விசாரணைகள் பற்றிய அறிக்கைகள் மற்றும் களப் பரிசோதனைகளை மேற்கொள்ளுதல் மற்றும் சமர்ப்பித்தல், கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் தொடர்பான பொறுப்பினைக் கொண்டுள்ளது.

## 1.5 அமைச்சின் கீழுள்ள நிறுவனங்கள்

### 1.5.1 தொழில் திணைக்களம்

காலனித்துவ காலப்பகுதியில் பிரித்தானிய ஆட்சியாளர்கள் வர்த்தக பயிர்ச்செய்கை நடவடிக்கையின் கீழ் கோப்பி மற்றும் தேயிலை பயிர்ச் செய்கைக்காக இலங்கைக்கு அழைத்துவந்த இந்தியத் தொழிலாளர்களுக்கு நலனோம்பல்களை வழங்கும் நோக்கத்துடன் 1923 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க இந்திய குடிவரவு தொழிலாளர் கட்டளைச் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. அக் கட்டளைச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இந்திய குடிவரவு தொழிலாளர்களுக்கான கட்டுப்பாட்டாளர் திணைக்களம் தொழில் திணைக்களத்தின் ஆரம்பமாகும். தற்போது தொழில் திணைக்களமானது தொழிலாளர், தொழில் கொள்வோர் மற்றும் அரசாங்கம் ஆகிய முத்தரப்பு தொடர்பினை வலுவாக பேணி வருவதன் ஊடாக தேசிய பொருளாதாரத்தை வலுவூட்டும் பணியை நிறைவேற்றுகின்றது.

இலங்கையில் தனியார் துறை மற்றும் பகுதி அளவான அரச துறை ஊழியர்களின் தொழில்சார் உரிமைகளை உறுதிப்படுத்துதல், சமூகப் பாதுகாப்பினை ஏற்படுத்துதல் மற்றும் தொழிலாளர் தொழில் கொள்வோர் தொடர்புகளை மேம்படுத்துதல் சார்பாக இயங்கி வரும் முதன்மையான அரச நிறுவனம் தொழில் திணைக்களமாகும். தொழில் திணைக்களத்தினால் தொழில் என்னும் விடயத்திற்குரிய சட்டங்களை நடைமுறைப்படுத்துதல் மற்றும் தேவையான ஊக்குவிப்புகளை மேற்கொள்வதற்காக நாடளாவிய ரீதியில் தொழில் அலுவலகங்களைப் பேணி தமக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்பினை நிறைவேற்றுகின்றது.

**பிரதான பணிகள்**

I. தொழில் சட்டங்களை நடைமுறைப்படுத்துதல் மற்றும் சமூக சொல்லாடலை மேம்படுத்துவதன் மூலம் கைத்தொழில் பிணக்குகள் ஏற்படுவதைத் தடுத்தல் மற்றும் ஏற்பட்டுள்ள பிணக்குகளைத் தீர்த்தல்.

II. ஆக்கத்திறனுடன் சமகால பரிசோதனைகளை மேற்கொள்ளுதல் மற்றும் அதற்காக திணைக்களத்தின் அலுவலர்களுக்கு அவசியமான அறிவினை நிதமும் இற்றைப்படுத்துவதன் ஊடாக ஊழியர்களின் நியதிச்சட்ட ரீதியான உரிமைகளை உறுதிப்படுத்துதல்.

III. தொழிலாளர், தொழில் கொள்வோர் ஆகிய இரு தரப்பினரும் தொழில் சட்டங்கள் தொடர்பில் கொண்டுள்ள அறிவு மற்றும் புரிதலை விரிவுபடுத்துவதன் மூலம் தொழில்துறை அமைதியை உறுதிப்படுத்துதல்.

IV. தேசிய பொருளாதாரக் கட்டமைப்பின் மாற்றங்களின் பிரகாரம் பொருத்தமாக அமைகின்ற தொழில் நியமங்களை சர்வதேச நியமங்களின் பிரகாரம் தயாரித்து நடைமுறைப்படுத்துதல்.

V. ஊழியர் சேமலாப நிதியத்தை சிறப்பாக நிர்வகிப்பதன் மூலம் உரித்துடையவர்களுக்கு அனுகூலங்களை உரிய முறையில் வழங்குவதனை உறுதிப்படுத்துதல் மற்றும் அதே வகையில் அங்கீகரிக்கப்பட்ட தனிப்பட்ட சேமலாப நிதிகள் மற்றும் ஓய்வூதிய கொடுப்பனவு முறைகள் பற்றிய நிர்வாகம்.

VI. பெண்கள், இளம் ஆட்கள் மற்றும் சிறுவர்கள் பற்றிய தொழில் சட்டங்கள் உட்பட அனைத்து தொழில் சட்டங்களையும் சாதகமான முறையில் நடைமுறைப்படுத்துதல் மற்றும் குழந்தைத் தொழிலாளர் முறை மற்றும் ஆபத்தான குழந்தை தொழில்களை இல்லாதொழிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.

VII. வேலைத்தளத்தில் சுகாதார பாதுகாப்பு மற்றும் ஆபத்து இன்மை தொடர்பாக ஊழியர்களை விழிப்பூட்டுதல், சுகாதார பாதுகாப்பு மற்றும் ஆபத்து இன்மையை உறுதிப்படுத்துதல்.

VIII. மேற்படி பணிகள் தொடர்பில் தீர்மானங்களை மேற்கொள்வதற்குத் தேவையான தரவுகளை சேகரித்தல் மற்றும் பகுப்பாய்வு செய்தல்.

IX. இலங்கையினால் உறுதிப்படுத்தப்பட்டுள்ள சர்வதேச தொழிலாளர் அமைப்பின் சமவாயங்களை சட்டம் மற்றும் பயன்பாட்டின் மூலம் அமுலாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

**தொழில் திணைக்களத்தின் கட்டமைப்பு**




விளக்கப்படம் 1-1 தொழில் திணைக்களத்தின் கட்டமைப்பு

### 1.5.2 இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகமானது இலங்கை புலம்பெயர் தொழிலாளர்களை மையமாகக்கொண்டு 1994 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கம், 2009 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்கமுடைய சட்டங்களினால் திருத்தப்பட்ட 1985 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க பாராளுமன்ற சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட முதன்மையான நியதிச் சட்ட நிறுவனமாகும். வெளிநாட்டு வேலைவாய்ப்புத் துறையை நிர்வகித்தல் மற்றும் ஒழுங்குபடுத்துதல், இலங்கைக்கு வெளியில் வேலைவாய்ப்புகளில் ஈடுபட்டுள்ள இலங்கை ஊழியர்களினதும் அவர்களின் குடும்ப அங்கத்தவர்களினதும் பாதுகாப்பு மற்றும் நலனோம்பல் அத்துடன் இலங்கையர்களுக்காக நாட்டுக்கு வெளியில் தொழில் வாய்ப்புகளை ஊக்குவித்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல் தொடர்பில் பணியகம் பொறுப்பினைக் கொண்டுள்ளது. 1,179 நிரந்தர ஊழியர்களைக் கொண்டமைந்த இந்த நிறுவனம் இலங்கையின் வெளிநாட்டு வேலைவாய்ப்புத் துறையை பலப்படுத்தி இலங்கையின் தேசிய பொருளாதார முன்னேற்றத்திற்கு பங்களிப்பதற்காக தொடர்ந்தும் பணியாற்றி வருகின்றது.

**பிரதான பணிகள்**

I. வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனங்களை பேணிச் செல்வதற்காக உரிமங்களை வழங்குதல்.

II. வெளிநாட்டு வேலைவாய்ப்பு அபேட்சகர்களுக்கு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்.

III. வெளிநாட்டு வேலை வாய்ப்புகளுக்காகச் செல்லும் இலங்கையர்களை பணியகத்தில் பதிவு செய்தல்/வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்காக இலங்கையர்களை ஆட்சேர்ப்புச் செய்தல்.


IV. புலம்பெயர் தொழிலாளர்களினால் அல்லது அவர்களின் குடும்ப அங்கத்தவர்களினால் ஆற்றுப்படுத்தப்படுகின்ற முறைப்பாடுகளைத் தீர்த்தல்.

V. புலம்பெயர் தொழிலாளர்கள் மற்றும் அவர்களின் குடும்ப அங்கத்தவர்களுக்காக நலனோம்பல் வசதிகளை வழங்குதல்.

VI. வெளிநாட்டு வேலைவாய்ப்புத் துறை சார்ந்த சட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.

VII. இலங்கையர்களுக்காக வெளிநாட்டு வேலை வாய்ப்புகளை மேம்படுத்துதல்.

**இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் கட்டமைப்பு**




விளக்கப்படம் 1-2 இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் கட்டமைப்பு.

### 1.5.3 மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம்

இலங்கையில் மனித வளத்தை அபிவிருத்தி செய்து இளம் சமுதாயத்தினருக்கு மத்தியில் வேலைவாய்ப்பின்மையை இல்லாதொழித்து அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்ளல், தொழிற் படையின் பண்புத் தரத்தை மேம்படுத்துதல், தொழில்சார் வழிகாட்டல் மற்றும் தொழில் உருவாக்கத்தின் ஊடாக தேசிய பொருளாதாரத்திற்கு இளம் சமுதாயத்தினரின் பங்களிப்பினைப் பெற்றுக்கொள்ளல் ஆகிய நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக 2010.02.12 ஆம் திகதிய 1640/34 ஆம் இலக்கமுடைய அதிவிசேட வர்த்தமானியின் மூலம் 2010.01.01 ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம் தாபிக்கப்பட்டது.

**பிரதான பணிகள்**

I. தொழில்சார் வழிகாட்டல் நடவடிக்கைகள்

II. தொழில் சந்தை பற்றிய தகவல்களை சேகரித்தல், பகுப்பாய்வு செய்தல் மற்றும் பகிர்ந்தளித்தல்

III. பொது வேலைவாய்ப்பு சேவை நடவடிக்கைகள்

IV. சர்வதேச தொடர்புகள்

V. மனிதவள அபிவிருத்தி சம்மந்தப்பட்ட நடவடிக்கைகள்

### 1.5.4 தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம்

தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம் 2017 செப்டம்பர் மாதம் 11 ஆம் திகதி தாபிக்கப்பட்டதோடு 2010 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தேசிய தொழில் கற்கைகள் நிறுவகச் சட்டத்தின் மூலம் செயற்படுத்தப்பட்டது. இந்த நிறுவகம் முத்தரப்பு பங்காளர்களான தொழில் கொள்வோர், தொழிலாளர் மற்றும் அரச ஊழியர்களைக் கொண்டமைந்த கட்டுப்பாட்டு சபை ஒன்றின் மூலம் நிர்வகிக்கப்படுகின்றது. தொழில் கட்டளைச் சட்டங்கள், சட்ட விதிகள், ஒழுங்கு விதிகள் தொடர்பில் விழிப்புணர்வு பெற்ற ஆக்கத்திறனுடன்கூடிய பலமான தொழிற் படையை உருவாக்குவதற்குத் தேவையான பயிற்சி மற்றும் கல்வி நடவடிக்கைகளைத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்துவது இந்த நிறுவகத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது.

தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம் அதன் நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக தொழில் சட்டம் மற்றும் தொழில் உறவுகள், மனிதவள முகாமைத்துவம் மற்றும் வேலைத்தள ஆக்கத்திறன் ஆகிய மூன்று பிரதான விடயத் துறைகளின் அடிப்படையில் பாடநெறிகளை நடத்துகின்றது. இந்த விடயத் துறைகள் மூன்று உள்ளகப் பிரிவுகள் ஊடாக நடைமுறைபடுத்தப்படுவதோடு பயிற்சி மற்றும் செயலமர்வுகள், குறுகியகால பாடநெறிகள், சான்றிதழ் மற்றும் டிப்ளோமா பாடநெறிகள் என்ற வகையில் பல பிரிவுகளின் கீழ் இடம்பெறுகின்றன.

**நோக்கங்கள்**

I. உள் நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களோடு ஒத்துழைப்புடன் தொழில் கற்கை நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் மற்றும் அபிவிருத்திச் செயன்முறைக்கு உயிரோட்டமான பங்காளர்களாக ஊழியர்களின் நலனை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

II. தொழில் கற்கை பற்றிய கருத்தரங்குகள், செயலமர்வுகள், கூட்டங்கள் நடத்தப்படுதல் மற்றும் சஞ்சிகைகள், வார இதழ்கள் மற்றும் புத்தகங்களை வெளியிடுதல்.

III. தொழில் கல்வி தொடர்பான ஆராய்ச்சிகள், ஆய்வுகளை நடாத்துதல் மற்றும் பாடநெறிகளை ஒழுங்கு செய்தல்.

IV. நூலக மற்றும் தகவல் சேவைகளைத் தாபித்தல் மற்றும் பராமரித்தல்

V. ஒத்த நோக்கங்களைக் கொண்டுள்ள உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்கள், அமைப்புகள், சங்கங்கள் மற்றும் கழகங்களுடன் நெருக்கமான தொடர்புகளைப் பேணிவருதல்.

VI. பல்கலைக்கழகங்கள் மற்றும் அவற்றுடன் இணைந்த நிறுவனங்களின் ஆதரவோடு தொழில் கற்கைகள் பற்றிய டிப்ளோமா பாடநெறிகள் உள்ளிட்ட பாடநெறிகளை நடாத்துதல் மற்றும் தேவையான சந்தர்ப்பங்களில் சான்றிதழ் மற்றும் டிப்ளோமாக்களை வழங்குதல்.

VII. தொழில்துறை அமைதி பேணப்படுவதை நோக்கமாகக் கொண்ட செயற்பாடுகளில் ஈடுபடுதல்.

### 1.5.5 தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம்

2009 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய நிறுவகச் சட்டத்தின் மூலம் அப்போதைய தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சின் ஒருங்கிணைந்த நிறுவனமாக தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம் தாபிக்கப்பட்டது. இந்த நாட்டில் சிறந்த சுகாதார மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளின் மூலம் தொழில்சார் விபத்துகளையும் தொழில்சார் நோய்களையும் தவிர்த்தல் மற்றும் சரியான பாதுகாப்புக் கொள்கைகளையும் முறைகளையும் பின்பற்றுவதன் ஊடாக ஆரோக்கியமான பணிச் சூழலை சகல தொழிலாளர்களுக்கும் பெற்றுக்கொடுப்பதற்கு இந்த நிறுவனம் பணியாற்றுவதோடு இத்தகைய பயிற்சியின் ஊடாக அனுகூலங்களை பெற்றுக் கொள்ளக்கூடிய தொழிலாளர்கள், தொழில் கொள்வோர் மற்றும் எவரேனும் ஆட்களுக்குத் தேவையான கல்வியும் இந்த நிறுவனத்தினால் வழங்கப்படுகின்றது.

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தினால் நடத்தப்படுகின்ற பாடநெறிகள்

I. தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய டிப்ளோமா பாடநெறி

II. தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய சான்றிதழ் பாடநெறி

III. பெருந்தோட்டத்துறையில் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய உயர் சான்றிதழ் பாடநெறி

IV. கொதிகலன் இயக்குபவர்களை பயிற்றுவித்தல்

V. தொழில்துறைகள் வேலை ஆய்வு நிகழ்ச்சித்திட்டம்

VI. கைத்தொழில் துறையில் தாதியர்களைப் பயிற்றுவித்தல்

VII. வைத்தியசாலை பணியாளர்களுக்கான தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்

VIII. அலுவலக பணியாளர்களுக்கான தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்

IX. ஆய்வுக்கூடங்களில் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்

X. இரசாயனப் பொருட்களை பாதுகாப்பாகக் கையாளுதல்

XI. உணவு வகைகளைக் கையால்பவர்களுக்கான தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்

XII. மனவழுத்த முகாமைத்துவ பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்.

### 1.5.6 வேலையாளர் நட்டுஈட்டு ஆணையாளர் அலுவலகம்

சேவையில் ஈடுபட்டுள்ள போது இடம்பெறுகின்ற விபத்துகள் தொடர்பில் நட்ட ஈடுகளைப் பெற்றுக்கொள்வதற்காக 1934 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க வேலையாளர் நட்ட ஈட்டு கட்டளைச்சட்டம் இயற்றப்பட்டுள்ளது. சிற்சில சந்தர்ப்பங்களில் இச்சட்டத்தில் சில திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு இறுதித் திருத்தம் 2022 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. வேலையாளர் நட்டஈட்டு நீதிமன்றம் மாவட்ட நீதிபதி மற்றும் நீதவானின் அதிகாரங்களோடு ஒட்டுமொத்த நாடும் உள்வாங்கப்படும் வகையில் 14 சுற்றுலா நீதிமன்றங்களைக் கொண்டமைந்துள்ளது. நீதிச் சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படுகின்ற நீதித்துறை உத்தியோகத்தர்களான வேலையாளர் நட்டஈட்டு ஆணையாளர், மேலதிக வேலையாளர் நட்டஈட்டு ஆணையாளர் மற்றும் பிரதி வேலையாளர் நட்டஈட்டு ஆணையாளர் ஆகிய 03 பதவிகளையும், இலங்கை கணக்காளர் சேவையின் I ஆம் வகுப்பு பதவி ஒன்றையும் இலங்கை நிர்வாக சேவையின் பதவி ஒன்றையும் உள்ளிட்டதாக 43 பதவிகளைக் கொண்டமைந்துள்ளது.

சேவையில் ஈடுபட்டுள்ளபோது இடம்பெறுகின்ற விபத்துகளினால் காயங்களுக்கு உள்ளாகின்ற தொழிலாளர்களுக்கும் தொழிலின் தன்மை காரணமாக ஏற்பட்ட நோய்களினால் பாதிக்கப்பட்டுள்ள தொழிலாளர்களுக்கும் சேவையில் ஈடுபட்டுள்ளபோது ஏற்படுகின்ற விபத்துகளினால் மரணமடைகின்ற தொழிலாளர்களில் தங்கி வாழ்வோருக்கும் நட்ட ஈடுகளை அறவிட்டுக் கொடுப்பது பிரதான நோக்கமாகும். வேலையாளர் நட்டஈட்டு நீதிமன்ற செயன்முறைக்காக குற்றவியல் நடவடிக்கை முறைக் கோவை, சிவில் நடவடிக்கை முறைக் கோவை மற்றும் சாட்சிகள் கட்டளைச்சட்டம் ஏற்புடையதாக்கிக் கொள்ளப்படுவதோடு மேன்முறையீட்டு நடவடிக்கை முறையானது மாவட்ட நீதிமன்றத்திற்கு ஒத்ததாகும்.

**பிரதான பணிகள்**

I. அரச மற்றும் தனியார் துறை ஊழியர்களுக்கு சேவையில் ஈடுபட்டுள்ளபோது ஏற்படுகின்ற விபத்துகள், தொழில்சார் நோய்வாய்கள் மற்றும் மரணத்தின் போதெனில் அவர்களில் தங்கி வாழ்வோருக்கு நட்டஈடுகளை அறவிட்டு வழங்கும் நடவடிக்கைகள் (2022 ஆம் ஆண்டில் 10 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ள இறுதி திருத்தத்தின் பிரகாரம் வழங்கப்படக்கூடிய உச்சமட்ட நட்டஈட்டுத் தொகை 2,000,000/=ரூபாவாகும்).

II. பராயமடையாதவர்கள் பூரண வயதை அடையும்வரை வேலையாளர் நட்டஈட்டு ஆணையாளரின் பொறுப்பில் தேசிய சேமிப்பு வங்கியில் கணக்குகளைப் பேணி வருதல் மற்றும் அவற்றுக்கான நிர்வாக நடவடிக்கைகள்.

III. தொழிலாளர்களுக்கு ஏற்படுகின்ற விபத்துகளின் போது தொழில் கொள்வோர் நட்டஈடு செலுத்தத் தவறியுள்ள சந்தர்ப்பங்களில் அவர்களின் அசையும் மற்றும் அசையா சொத்துக்களைத் தடை செய்து அவற்றை பகிரங்க ஏல விற்பனையில் விற்பனை செய்து நட்டஈட்டுத் தொகைகளை அறவிட்டுக் கொடுத்தல்.

IV. வேலையாளர் நட்டஈட்டுக் காப்புறுதி உரிமப் பத்திரங்களை வழங்குதல், புதுப்பித்தல், உரிமங்களை இரத்துச் செய்வதற்கான நடவடிக்கைகள்.

V. தொழிலாளர் ஒருவருக்கு விபத்து ஏற்படுகின்ற சந்தர்ப்பத்தில் அவ்விடத்திற்குச் சென்று சோதித்துப் பார்த்தல்.

VI. இலங்கையில் பதிவு செய்யப்பட்டுள்ள கப்பல்களின் மற்றும் விமானங்களின் ஊழியர்களுக்கு இலங்கைக்கு வெளியில் ஏற்படுகின்ற விபத்துகளுக்காக நட்டஈடுகளை அறவிட்டு வழங்குதல்.

### 1.5.7 தேசிய உற்பத்தித்திறன் செயலகம்

இலங்கையானது 1966 ஆம் ஆண்டில் ஆசிய உற்பத்தித்திறன் அமைப்பில் அங்கத்துவம் பெற்றுக் கொண்டதையடுத்து தேசிய உற்பத்தித்திறன் அமைப்பு (NPO) தாபிக்கப்பட்டதோடு இப்பணியினை மேலும் விரிவாக்குவதற்காக 1994 ஆம் ஆண்டு தேசிய உற்பத்தித்திறன் செயலகம் தாபிக்கப்பட்டது. இதன் மூலம் பல்வேறுபட்ட நிறுவனங்களுக்கு உற்பத்தித்திறன் பற்றிய எண்ணக்கருக்கள், கருவிகள் மற்றும் தொழில்நுட்பம் அறிமுகப்படுத்தப்பட்டன. அரசு கல்வி, சேவைகள் மற்றும் உற்பத்திகள், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகள் மற்றும் சமுதாயம் ஆகிய துறைகளை உற்பத்தித்திறன் எண்ணக்கரு ஊடாக வளர்ப்பதற்கு வருடாந்தம் பல்வேறுபட்ட நிகழ்ச்சித்திட்டங்களை நாடு தழுவிய ரீதியில் நடைமுறைப்படுத்துவதோடு ஆசிய உற்பத்தித்திறன் அமைப்பின் (APO) தொடர்ச்சியான ஆதரவின் மூலம்" அறிவை மையமாகக் கொண்ட சமூகம்" ஒன்றை உருவாக்குவதற்குத் தேவையான சூழல் உருவாகியுள்ளது.

**முதன்மைப் பணிகள்**

I. அரசு கல்வி, சேவைகள் மற்றும் உற்பத்திகள், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகள் மற்றும் சமுதாயம் ஆகிய துறைகளை இலக்காகக் கொண்டு ஆக்கத்திறன் மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.

II. உற்பத்தித்திறன் விடயங்களுக்குரிய பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்

- உற்பத்தித்திறன் டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டம்
- உற்பத்தித்திறன் சான்றிதழ் பாடநெறி நிகழ்ச்சித்திட்டம்
- உற்பத்தித்திறன் குறுகிய கால பயிற்சிப் பாடநெறி நிகழ்ச்சித்திட்டம்
- பயிற்றுவிப்பாளர்களைப் பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித்திட்டம்

II. நிறுவனங்களில் உற்பத்தித்திறன் மேம்பாடு தொடர்பாக ஆலோசனைச் சேவைகளை வழங்குதல்

IV. ஆசிய உற்பத்தித்திறன் சங்கத்துடன் இணைந்து பின்வரும் நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்

- பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயலமர்வுகளை நடாத்துதல்
- e learning நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்
- தொழில்நுட்ப நிபுணத்துவ சேவைகளை பெற்றுக்கொள்வதன் ஊடாக நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்
- மாதிரி கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்

V. "5S" சான்றிதழ் நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்துதல்

VI. ஊடக மற்றும் பிரச்சார நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.

VII. தேசிய உற்பத்தித்திறன் விருதுக்கான போட்டித்தொடர் மற்றும் விருது வழங்கும் விழா நடத்தப்படுதல்.

### 1.5.8 சிரம வாசனா நிதியம்

1998 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க (2019 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்ட) சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்ட சிரம வாசனா நிதியம் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் கீழுள்ள தொழிலாளர்களின் நலனோம்பலுக்காக ஆரம்பிக்கப்பட்ட ஒரு நிறுவனமாகும். சிரம வாசனா நிதியச் சட்டத்தில் காணப்படுகின்ற 6 குறிக்கோள்களின் அடிப்படையில் ஆரம்பத்திலிருந்து இதுவரை பல்வேறுபட்ட நலனோம்பல் நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டு இலங்கைத் தொழிலாளர்களின் மேம்பாட்டுக்காக செயற்பாடுகள் வகுக்கப்பட்டுள்ளன.

சிரம வாசனா நிதியத்தின் பிரதான வருமான வழி மூலம் தேசிய அபிவிருத்தி லொத்தர் சபையினால் சீட்டிழுக்கப்படுகின்ற *ஜாதிக்க சம்பத்த* லொத்தர் மூலம் கிடைக்கின்ற வருமானமாகும். இதற்கு மேலதிகமாக நிறுவனம் கொண்டுள்ள நிலையான வைப்புகள் மூலம் ஈட்டப்படுகின்ற வட்டி வருமானமும் உள்ளடங்களாக நிதியத்தினால் வருடாந்தம் திட்டமிடப்படுகின்ற நோக்கங்களுக்கு அமைவாக தொழிலாளர்களின் நலனோம்பலின் பொருட்டு முழு நாடும் உள்வாங்கப்படும் வகையில் பல்வேறுபட்ட நலனோம்பல் நிகழ்ச்சித்திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**நிதியத்தின் நோக்கங்கள்**

I. தொழிலாளர்களினதும் அவர்களில் தங்கி வாழ்வோரினதும் நலனோம்பலை மேம்படுத்துதல்

II. தொழிலாளர்கள் சேவையில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள் முன்னறிவித்தல் இன்றி மூடப்படுகின்ற சந்தர்ப்பத்தில் அத்தொழிலாளர்களுக்கு நிதி மற்றும் ஏனைய உதவிகளை வழங்குதல்.

III. அவசர சந்தர்ப்பங்களில் தொழிலாளர்களுக்கும் அவர்களில் தங்கி வாழ்வோருக்கும் மருத்துவ மற்றும் ஏனைய வசதிகளை வழங்குதல்.

IV. தொழிலாளர்களுக்கு எதிராக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள போது அவர்களுக்கு தற்காலிக உதவிகளை வழங்குதல்

V. பேரழிவு சந்தர்ப்பங்களில் தொழிலாளர்களுக்கும் அவர்களில் தங்கி வாழ்வோருக்கும் நிதி ரீதியான மற்றும் ஏனைய வசதிகளை வழங்குதல்.

VI. தொழிலாளர்களின் நலனோம்பலுக்காக சிறந்த சேவையை ஆற்றியுள்ள நபர்களுக்கு பரிசில்களை வழங்குதல்

VII. தொழில் ஆணையாளர் நாயகம், தொழில் நியாய சபை, நடுத்தீர்ப்பாளர் சபை அல்லது தொழில் நீதிமன்றம் அல்லது ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னிலையில் ஏதேனும் எழுத்திலான சட்ட ஏற்பாடுகளின் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ள அல்லது விசாரிக்கப்பட்டு வருகின்ற எவரேனும் தொழிலாளரின் சேவையை முடிவுறுத்துதல் சம்பந்தமான அல்லது தொழில் பிணக்கு தொடர்பான வழக்கு நடவடிக்கைகளுக்காக தொழிலாளர்களுக்கு சட்ட உதவிகளைப் பெறுவதற்காக நிதிசார் சலுகைகளை வழங்குதல்.

### 1.5.9 இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் தனியார் நிறுவனம்

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் தனியார் நிறுவனமானது அரசாங்கத்துக்குச் சொந்தமான ஏக வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனம் என்பதோடு வெளிநாட்டு வேலைவாய்ப்புத் துறையின் ஒழுங்குபடுத்தல் நிறுவனமான இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் துணை நிறுவனமாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் கீழ் 1996 அக்டோபர் மாதம் தொடக்கம் தாபிக்கப்பட்டு இயங்கி வருகின்ற ஒரு நிறுவனமாகும். 2013 ஆம் ஆண்டில் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனம் ISO9001:2008 எனும் தரச் சான்றிதழைப் பெற்றுள்ளது.

**பிரதான பணிகள்**

I. வேலைவாய்ப்புகளுக்கான தேவைகளைக் கண்டறிதல் மற்றும் அடிப்படை அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளல்.

II. வேலைவாய்ப்புத் தேவைகளுக்கான பிரசாரங்களுக்கு அனுமதி பெறுதல் மற்றும் பொருத்தமான விண்ணப்பதாரர்களை தேடிக்கொள்ளல்

III. தொழில் கொள்வோரின் தெரிவுக்காக விண்ணப்பங்களை அனுப்புதல், தொழில் வாய்ப்புகளுக்குத் தகுதியான விண்ணப்பதாரர்களைத் தெரிவு செய்வதற்காக நேர்முகப் பரீட்சைகளையும் தரப் பரிசோதனைகளையும் நடாத்துதல்.

IV. வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்காக அனுப்புவதற்கான சகல நிர்வாக நடவடிக்கைகளையும் வசதிகளை வழங்குவதையும் மேற்கொண்டு இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் இறுதி அனுமதியைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் வேலைவாய்ப்புகளுக்காக அவர்களை வெளிநாடுகளுக்கு அனுப்புதல்.

## 1.6 அமைச்சுப் பதவியினரின் தொகுப்பு

| | நிறுவனம் | சிரேஸ்ட மட்டம் | | மூன்றாம் மட்டம் | | இரண்டாவது மட்டம் | | ஆரம்ப மட்டம் | | மொத்தம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | சேவையில் ஈடுபட்டுள்ள எண்ணிக்கை | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | சேவையில் ஈடுபட்டுள்ள எண்ணிக்கை | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | சேவையில் ஈடுபட்டுள்ள எண்ணிக்கை | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | சேவையில் ஈடுபட்டுள்ள எண்ணிக்கை | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | சேவையில் ஈடுபட்டுள்ள எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கையின் சதவீதம் |
| 1 | தொழில் பிரிவு | 24 | 15 | 05 | 03 | 75 | 52 | 35 | 19 | 139 | 89 | 36% |
| 2 | தொழில் திணைக்களம் | 211 | 144 | 668 | 481 | 1,753 | 1,732 | 489 | 419 | 3,121 | 2,776 | 11% |
| 3 | மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம் | 20 | 15 | 627 | 601 | 627 | 601 | 15 | 10 | 667 | 626 | 6% |
| 4 | தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம் | 09 | 03 | 13 | 02 | 18 | 07 | 05 | 02 | 45 | 15 | 67% |
| 5 | தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம் | 07 | 02 | 03 | 02 | 10 | 06 | 05 | 25 | 15 | 10 | 33% |
| 6 | வேலையாளர் நட்டஈட்டு ஆணையாளர் அலுவலகம் | 05 | 02 | 02 | 01 | 31 | 31 | 05 | 02 | 43 | 36 | 16% |
| 7 | தேசிய உற்பத்தித்திறன் செயலகம் | 17 | 08 | 04 | 02 | 792 | 718 | 19 | 10 | 832 | 738 | 11% |
| 8 | சிரம வாசனா நிதியம் | 05 | 04 | - | - | 08 | 08 | 04 | 03 | 17 | 15 | 12% |
| 9 | வெளிநாட்டு வேலைவாயப்புப் பிரிவு | 13 | 10 | 01 | - | 1,031 | 1,006 | 23 | 15 | 1,068 | 1,031 | 4% |
| 10 | இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பிரிவு | 137 | 108 | 197 | 175 | 692 | 661 | 251 | 231 | 1,277 | 1,175 | 8% |
| 11 | இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் தனியார் நிறுவனம் | 4 | 4 | 9 | 7 | 10 | 5 | 7 | 8 | 30 | 24 | 20% |
| | மொத்தம் | **452** | **315** | **1,529** | **1,274** | **5,047** | **4,827** | **858** | **744** | **7,254** | **6,535** | **10%** |

அட்டவணை 1-1 அமைச்சின் பதவியினரின் தொகுப்பு

# இரண்டாம் அத்தியாயம்

# அமைச்சினால் அடையப்பட்டுள்ள முன்னேற்றம்

# அமைச்சினால் அடையப்பட்டுள்ள முன்னேற்றம்

பாட்டாளி மக்களின் உரிமைகளைப் பாதுகாத்தல், அவர்களின் சேவைக்கான பாதுகாப்பினை வழங்குதல் மற்றும் நாட்டில் தொழில்துறை அமைதியை ஏற்படுத்துதல் மற்றும் வெளிநாட்டு தொழில் சந்தைக்கு திறமையான தொழிலாளர்களை ஆற்றுப்படுத்துதல் ஆகிய துறைகளின் கீழ் காணப்படுகின்ற பணிகளை நிறைவேற்றுவதற்காக இந்த அமைச்சினால் நிகழ்ச்சித்திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

இந்த நாட்டின் தொழிற் படையணி 8.5 மில்லியன் என்பதோடு இதில் 8.1 மில்லியன் பேர் வேலைவாய்ப்புகளில் ஈடுபட்டுள்ளனர். இவர்களுள் அரச ஊழியர்கள், தமது சொந்த தொழில் முயற்சிகளில் ஈடுபடுகின்றவர்கள் மற்றும் குடும்பத்தின் தொழில் முயற்சிகளுக்கு பங்களிப்பு நல்கின்றவர்கள் தவிர தனியார் மற்றும் பகுதியளவான அரச துறையில் சேவையில் ஈடுபட்டுள்ள 3.4 மில்லியன் தொழிலாளர்களின் தொழில்சார் உரிமைகள், தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தை உறுதிப்படுத்தும் பொறிமுறையை நடைமுறைப்படுத்துவதன் மூலம் நாட்டில் தொழில்துறை அமைதியைப் பேணி வருதல் மற்றும் அதனூடாக நாட்டின் சமூக பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிக்கும் பொறுப்பினை இந்த அமைச்சு கொண்டுள்ளது.

அத்தோடு, வேலைவாய்ப்புகளுக்காக புலம்பெயர்வதன் மூலம் நன்மைகளைப் பெறுகின்ற பெரும்பாலான உலக நாடுகளுக்கு மத்தியில் இலங்கையும் முன்னணி வகிக்கின்றது. நாட்டின் மொத்த அந்நியச் செலாவணி ஈட்டல்களுள் வெளிநாட்டு வேலைவாய்ப்புகளின் மூலம் கிடைக்கின்ற பணவனுப்பல்கள் அதிக பங்களிப்பை வழங்குகின்றன. 2021 ஆம் ஆண்டில் 1,087 பில்லியன் ரூபா வெளிநாட்டு பணவனுப்பல்கள் இந்நாட்டுக்கு கிடைத்துள்ளதோடு அது மொத்த தேசிய உற்பத்தியில் 6% ஆன பங்களிப்பாகும். 2021 ஆம் ஆண்டில் 121,795 நபர்களுள் 41,130 பெண்களும் 80,665 ஆண்களும் வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்காக சென்றுள்ளனர். இந்த நிலைமையில் இலங்கையின் பொருளாதாரத்திற்கு புலம்பெயர் தொழிலாளர்களின் பங்களிப்பினை ஏற்றுக்கொண்டு புலம்பெயர் தொழிலாளர்களின் பணவனுப்பல்களை உச்ச மட்டத்திற்கு கொண்டுவருவதற்கும் பயிற்சி பெறாத ஊழியர்களுக்குப் பதிலாக பயிற்சி பெற்ற ஊழியர்களை வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்கும் அரசாங்கம் பயனுள்ள வகையில் செயற்படுத்துவதற்காக பல பொறிமுறைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் ஆரம்பித்துள்ளது.

அமைச்சு மற்றும் இணைந்த நிறுவனங்களினால் தமது நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக நிறைவேற்றவேண்டிய செயற்பாடுகளில் 2022 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 30 ஆம் திகதியில் அடையப்பட்டுள்ள முன்னேற்றம் பற்றிய சுருக்கம் இவ்வத்தியாயத்தில் உள்ளடக்குகின்றது.




விளக்கப்படம் 2-1: இலங்கையின் தொழில் சந்தை பற்றிய தகவல்கள் 2021

Source: Annual Report, 2021, central bank of Sri Lanka

## 2.1 தொழிலாளர்களின் தொழில் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான சட்டக் கட்டமைப்பை வலுவூட்டுதல்

இலங்கையில் முதலீட்டு நேய சூழலை உருவாக்குவதற்காகவும் நாட்டின் எதிர்கால முன்னேற்றத்தை அடையக்கூடிய வகையிலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட தேசிய மற்றும் சர்வதேச சமூக, பொருளாதார நிலைமைகளுக்கும் தொழில் பட்டயங்கள் மற்றும் நியமங்களுக்கும் ஏற்புடையதாக அமையக் கூடிய வகையில் சட்ட ஏற்பாடுகளை வகுத்தமைப்பது இந்த அமைச்சு கொண்டுள்ள சமகால பொறுப்பாகும். இன்றளவில் இலங்கையில் தொழிலாளர்களின் உரிமைகள் மற்றும் நலனோம்பலை உறுதிப்படுத்துவதற்காக 50 கட்டளைச் சட்டங்களும் ஒழுங்கு விதிகளும் நடைமுறையில் உள்ளன. தொழில் திணைக்களம் ஆரம்பத்திலிருந்து இந்த சட்ட விதிகளை இயற்றியுள்ளன. தற்கால மற்றும் எதிர்கால சவால்களுக்கு முகங் கொடுப்பதற்காகவும் பாட்டாளி மக்களின் உரிமைகளை உறுதிப்படுத்துவதற்காகவும் சட்டங்களுக்கு இடையில் காணப்படுகின்ற சிக்கல் தன்மைகளை நீக்கி எளிமைப்படுத்தி சகல தரப்பினருக்கும் அனுகூலங்களை உறுதிப்படுத்துவதற்காக உரிய சட்டங்களையும் கட்டளைச் சட்டங்களையும் திருத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

1. **சேவையில் ஈடுபட்டுள்ள வேளையில் இடம்பெறுகின்ற விபத்தொன்றின் போது வேலையாட்கள் நட்டஈட்டு கட்டளைச் சட்டத்தின் கீழ் செலுத்தப்படுகின்ற ஆகக்கூடிய நட்ட ஈட்டுத் தொகையை அதிகரித்தல்.**

   சேவையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும்போது இடம்பெறுகின்ற விபத்திற்காக வழங்கப்பட்ட நட்டஈட்டுத் தொகை 550,000/- ரூபாவாக காணப்பட்டது. ஆகக்கூடிய நட்டஈட்டுத் தொகையை 2 மில்லியன் ரூபா வரை அதிகரிப்பதற்கும் ஏனைய சந்தர்ப்பங்களை அதற்கு விகிதப்படியாக அதிகரிப்பதற்கும் 2022 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க வேலையாட்கள் நட்டஈடு (திருத்தச்) சட்டம் 2022.03.22 ஆம் திகதி பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

2. **தொழில் வழக்கு விசாரணைகளைத் துரிதப்படுத்துவதற்காக நீதவான் நீதிமன்றங்கள் மற்றும் தொழில் நியாய சபைகளுக்கு ஒருங்கியலும் நியாயாதிக்கத்தை வழங்குதல்.**

   தொழில் சட்டங்களும் ஊழியர் சேமலாப நிதிய ஏற்பாடுகளும் மீறப்படும்போது நிவாரணங்களைப் பெற்றுக்கொள்வதற்காக நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ய வேண்டும் என்பதோடு இதன் போது ஏற்படுகின்ற தாமதங்களினால் ஊழியர்களுக்கு உரித்தான பணிக்கொடை, ஊழியர் சேமலாப நிதி மற்றும் நிலுவை சம்பளம் போன்ற நியதிச்சட்ட உரித்துக்களைப் பெற்றுக்கொடுப்பதற்காக 5 - 6 வருடங்கள் வரை நீண்ட காலம் காத்திருக்க வேண்டி ஏற்பட்டது. இதற்குத் தீர்வாக கைத்தொழில் பிணக்குகளைத் தீர்ப்பதற்காக மட்டும் வலுப்பெறும் வகையில் மேலதிக நீதவான்களுக்கான அதிகாரங்கள் தொழில் நியாய சபைகளின் தலைவர்களுக்கு வழங்குவதற்காக 2022 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க கைத்தொழில் பிணக்குகள் (சிறப்பேற்பாடுகள் ஏற்பாடுகள்) சட்டம் 2022.03.10 ஆம் திகதி பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

3. **தொழில் நியாய சபைகளின் முன் சட்டத்தரணிகள் அல்லாத தொழிலாளர்களின் பிரதிநிதிகளுக்கு முன்னிலையாவதற்கு அதிகாரமளிக்கப்படுதல்.**

   தொழில் கொள்வோரால் அநீதியான முறையில் சேவையிலிருந்து நீக்குதல் தொடர்பில் தொழிலாளர்களினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகளில் தொழிலாளர்கள் சார்பாக முன்னிலையாவதற்கான இயலுமை சட்டத்தரணிகளுக்கும் தொழிற்சங்க பிரதிநிதிகளுக்கும் மட்டுமே காணப்பட்டது. எவரேனும் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கும், நடுத்தீர்ப்பாளருக்கும் தொழில் நியாய சபையில், தொழில் நீதி மன்றத்தில் அல்லது தொழில் ஆணையாளர் ஊடாக சட்டத்தரணி ஒருவருக்கு அல்லது வேறொரு பிரதிநிதிக்கு தொழிலாளர்கள் சார்பாக முன்னிலையாவதற்கான அதிகாரம் வழங்குவதற்காக 2022 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க கைத்தொழில் பிணக்குகள்(திருத்தச்) சட்டம் 2022.09.16 ஆம் திகதி பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

4. **நடுத்தீர்ப்புக் கட்டளைகள் மற்றும் தொழில் நீதிமன்ற கட்டளைகளுக்கு எதிராக ரிட் மனுக்கள், மீள் நோக்குகள் (மறுசீராய்வுகள்) மற்றும் மேன்முறையீடுகள் செய்யப்படும்போது பிணை வைப்புச் செய்வதற்கான ஏற்பாடுகளைக் கொண்டுவருதல்**

அநாவசியமான மேன் முறையீடுகளைத் தவிர்ப்பதற்காக கைத்தொழில் பிணக்குகள் சட்டத்தின் கீழ் வழங்கப்படுகின்ற கட்டளைகள் மற்றும் தீர்ப்புகளுக்கு எதிரான மேன்முறையீடுகள், மீள் நோக்குகள் மற்றும் ரிட் மனுக்கள் தாக்கல் செய்யப்படும் போது பிணைத் தொகை வைப்புச் செய்யப்படவேண்டிய வகையில் கைத்தொழில் பிணக்குகள் சட்டத்தைத் திருத்துதல். இதற்காக 2022.09.16 ஆம் திகதி 2022 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க கைத்தொழில் பிணக்குகள் (திருத்தம்) சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

5. **தொழில் ஆணையாளர் நாயகத்தின் கட்டளைக்கு எதிராக ரிட் மனுக்கள் மற்றும் நீதவான் நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு எதிராக மீள் நோக்குள் (மறுசீராய்வுகள்) மற்றும் மேன்முறையீடுகள் தாக்கல் செய்யப்படும் போது பிணை வைப்பதற்கான ஏற்பாடுகளைக் கொண்டுவருதல்.**

அநாாவசியமான மேன்முறையீடுகளைத் தவிர்ப்பதற்காக தொழில் ஆணையாளர் நாயகத்திடம் பிணை வைப்பு செய்யப்பட்டதன் பின்னர் மட்டும் நீதிமன்ற செயன்முறையை ஆரம்பிக்கக் கூடிய வகையில் 2022.09.16 ஆம் திகதி 2022 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க வேலையாட்களின் தொழிலை முடிவுறுத்தல்(சிறப்பேற்பாடுகள்) (திருத்தம்) சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

6. **ஒழுக்காற்று விசாரணை நடாத்தி தீர்மானத்தை வழங்க வேண்டிய காலப்பகுதியை குறித்துரைத்தல்**

முறைகேடான செயற்பாடு காரணமாக தொழில் கொள்வோரால் பணித் தடை செய்யப்படுதல் அல்லது வேறு வகையிலான ஒழுக்காற்று விசாரணைக்கு உட்பட்டுள்ள தனியார்துறை ஊழியர்கள் தொடர்பாக மேற்கொள்ளப்படுகின்ற ஒழுக்காற்று நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்காக இறுதி ஒழுக்காற்று தீர்மானத்தை வழங்கவேண்டிய காலப்பகுதியை விதிப்பதற்கு 1950 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க கைத்தொழில் பிணக்குகள் சட்டம் திருத்தப்படுகின்றது.

இறுதி ஒழுக்காற்று தீர்மானத்தை வழங்குவதற்கு நீண்ட காலம் எடுக்கப்படுவதன் மூலம் தொழிலாளர்களுக்கும் அவர்களில் தங்கி வாழ்வோருக்கும் பாரிய பாதிப்பு ஏற்படுகின்றது. ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இறுதி ஒழுக்காற்று தீர்மானத்தை வழங்குவதற்காக காலச் சட்டகம் நிர்ணயிக்கப்பட வேண்டும். எனவே, ஊழியர் ஒருவரின் வேலை தடைசெய்யப்பட்ட சந்தர்ப்பத்தில் அன்று தொடக்கம் 06 மாதங்களுக்குள் ஒழுக்காற்று விசாரணையொன்றை நடத்தி இறுதி ஒழுக்காற்று கட்டளையை வழங்குவதற்கும் உரிய குற்றச்சாட்டு நிதி மோசடியாக அமையாத பட்சத்தில் வேலை தடைசெய்யப்பட்ட காலப்பகுதியில் ஊழியருக்கு அரைச் சம்பளம் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் சட்ட ஏற்பாடுகளை உள்ளடக்கி கைத்தொழிற் பிணக்குகள் சட்டத்தை திருத்துவதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது. சட்ட வரைஞரால் தயாரிக்கப்பட்ட அடிப்படை வரைவு தொடர்பில் தொழில் ஆணையாளர் நாயகத்தின் அவதானிப்புகள் வழங்கப்பட்டுள்ளதோடு இறுதி வரைபு மற்றும் சட்டமா அதிபரின் சான்றிதழ் கிடைக்கப் பெற்றதன் பின்னர் சட்டமூலத்தை வர்த்தமானியில் வெளியிடுவதற்கும் பாராளுமன்றத்தின் அங்கீகாரத்திற்காக முன் வைப்பதற்கும் அமைச்சரவையின் அங்கீகாரத்தை மீளப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

7. **தொழில்சார் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் நலனோம்பல் தொடர்பில் புதிய சட்டம் ஒன்றை அறிமுகப்படுத்துதல்.**

கைத்தொழிற்சாலைகள் கட்டளைச் சட்டத்தில் தற்போது காணப்படுகின்ற சட்ட ஏற்பாடுகள் ஊழியர்களின் சுகாதாரம் மற்றும் நலனோம்பல் என்பவற்றை பாதுகாப்பதற்குப் போதுமானதல்ல. சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமங்கள் தொடர்பில் கவனம்

செலுத்தி சேவை நிலையங்களில் ஊழியர்களின் சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் நலனோம்பல் பாதுகாக்கப்படும் நிலைமையை ஏற்படுத்துவதற்காக புதிய சட்டங்களை அறிமுகப்படுத்த வேண்டியது காலத்தின் தேவையாகும். அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட குழுவினால் கைத் தொழிற்சாலைகள் கட்டளைச்சட்டம் தொடர்பான இடைக்கால அறிக்கை முன்வைக்கப்பட்டதோடு அது தொடர்பில் அமைச்சரவைக்கு அறிக்கையிட வேண்டும்.

**8. சமகால தேவைகளின் படி 1954 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க கடைகள் மற்றும் அலுவலக ஊழியர்கள் சட்டத்தைத் திருத்துதல்**

விசேட கட்டளைகளின் மீது வரம்புகள் தளர்த்தப்பட்டுள்ள கடைகள் மற்றும் அலுவலக ஊழியர்கள் சட்டத்தின் கீழ் வருகின்ற விமான நிலையம், வதிவிட ஹோட்டல்கள், உணவு விடுதிகள் (இரவு 10 மணி) ஆகிய வியாபார நிலையங்கள் தவிர ஏனைய நிறுவனங்களில் இரவு 8 மணியின் பின்னர் பெண்களை சேவையில் ஈடுபடுத்துவதற்கு தொழில் கொள்வோருக்கு உரிமை கிடையாது. அது தொடர்பில் தகவல் தொழில்நுட்பம் தொடர்பான அறிவினை அடிப்படையாகக்கொண்ட செயன்முறை முகாமைத்துவம் (Knowledge Process Outsourcing (KPO)) மற்றும் வியாபார செயன்முறை முகாமைத்துவம் (Business Process Outsourcing (BPO)) வியாபாரங்கள் சர்வதேசரீதியில் தொழிற்படுவதனால் அந்த காலஎல்லை சட்டங்களின் பிரகாரம் தொழில் முயற்சிகளைப் பேணுவது கடினம் என்பதால் அந்தத் துறைகளில் சேவையில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் உரிமைகள் பாதுகாக்கப்படும் வகையில் (குறிப்பாக பெண் தொழிலாளர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும் வகையில்) கடைகள் மற்றும் அலுவலக ஊழியர்கள் சட்டத்தை திருத்துவதன் ஊடாக உரிய சேவை நிபந்தனைகள் பற்றிய எல்லைகள் தளர்த்தப்படுதல் வேண்டும். உரிய துறைகளின் தொழில் முயற்சியாளர்கள் மற்றும் தொழில் கொள்வோர்களினதும் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவராலயத்தினதும் (ICTA) விதப்புரைகளை கருத்தில் கொண்டு தயாரிக்கப்பட்ட வரைவு நகல் சட்ட வரைஞருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

**9. 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தை திருத்துதல்**

ஊழியர் நலனோம்பலுக்கும் தற்போதைய சமூக பொருளாதார நிலைமைக்கும் ஏற்றவகையில் ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தை திருத்த வேண்டும். ஒரு ஊழியர் சுய விருப்ப ஓய்வூதிய திட்டத்தின் கீழ் அல்லது தற்கால வேலை உலக தேவைகளின் மீது 55 வயது பூர்த்தியாவதற்கு முன்னர் ஓய்வு பெறும் போது ஊழியர் சேமலாப நிதியத்தின் அனுகூலங்களைப் பெறுவதற்கான ஏற்பாடுகளை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

**10. 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடைச் சட்டத்தை திருத்துதல்**

ஊழியர் நலனோம்பலுக்கும் தற்போதைய சமூக பொருளாதார நிலைமைக்கும் ஏற்றவகையில் பணிக்கொடை சட்டத்தை திருத்த வேண்டும்.

**11. வேலையாட்களுக்கான நட்டஈடு வழங்கப்படுதல் தொடர்பான பணியை துரிதப்படுத்துவதற்காக வேலையாட்கள் நட்டஈட்டு ஆணையாளர் மற்றும் தொழில் நியாய சபைகளுக்கு ஒருங்கியலும் நியாயாதிக்கத்தை வழங்குதல்**

சேவை நிலையத்தில் இடம்பெற்ற விபத்துகளுக்கு நட்ட ஈடு வழங்கும் செயன்முறையை துரிதப்படுத்துவதற்காக நட்ட ஈடு செலுத்துவதற்குரிய வழக்குகளை விசாரிப்பதற்கு வேலையாட்கள் நட்டஈட்டு ஆணையாளர் மற்றும் தொழில் நியாய சபைகளுக்கு ஒருங்கியலும் நியாயாதிக்கத்தை வழங்குவதற்கு 1934 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க வேலையாட்கள் நட்டஈடு கட்டளைச்சட்டம் மற்றும் 1950 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க கைத்தொழில் பிணக்குகள் சட்டம் என்பவற்றை திருத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. அமைச்சரவை விஞ்ஞாபனத்துடன் திருத்தப்பட்ட சட்டமூலங்கள் தயாரிக்கப்பட்டுள்ளதோடு

அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்ததன் பின்னர் அடுத்தகட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

**12. தொழில் சட்டங்களின் மூலம் வீட்டுப் பணியாளர்களை உள்வாங்குதல்**

சம்பளச் சபைகள் கட்டளைச்சட்டம், ஊழியர் சேமலாப நிதியச் சட்டம், ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சட்டம், மகப்பேறு நன்மைகள் சட்டம், பணிக்கொடை சட்டம் ஆகிய சட்டங்களின் மூலம் வீட்டுப் பணியாளர்கள் உள்வாங்கப்படும் வகையில் சட்ட ஏற்பாடுகளை உருவாக்குவதற்காக தொடர்புடைய தரப்பினருடன் கலந்துரையாடப்படுகின்றது.

**13. காப்புறுதி விற்பனையாளர்களுக்கு ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின் காப்பினை வழங்குதல்**

இதற்காக சம்மந்தப்பட்ட தரப்பினர்களுடன் அடிப்படைக் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டுள்ளதோடு தொழில் திணைக்களத்தினால் வரைவு நகல் தயாரிக்கப்பட்டுள்ளது.

**14. காலத்தின் தேவைகளுக்கு அமைய 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சம்பள சபைகள் கட்டளைச் சட்டத்தை திருத்துதல்**

இதற்காக சம்மந்தப்பட்ட தரப்பினர்களுடன் அடிப்படைக் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டுள்ளதோடு தொழில் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்ட வரைவு நகல் தேசிய தொழிலாளர் ஆலோசனை குழுவிற்கு அனுப்பப்பட உள்ளது.

## 2.2 வெளிநாட்டு வேலைவாய்ப்புகளை ஊக்குவிப்பதற்குத் தேவையான சட்ட மற்றும் கொள்கைக் கட்டமைப்பை வலுவூட்டுதல்

- **வேலைவாய்ப்புகளுக்காக புலம்பெயர்தல் பற்றிய இலங்கையின் தேசியக் கொள்கையை இற்றைப்படுத்துதல் மற்றும் விடையப் பரப்பினை விரிவாக்குதல்**

அனைத்துத் தரப்பினர்களினதும் பங்கேற்புடன் இற்றைப்படுத்தப்பட்ட வேலை வாய்ப்புகளுக்காக புலம்பெயர்தல் பற்றிய இலங்கையின் தேசியக் கொள்கை மற்றும் செயற்பாட்டுத் திட்டம் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் அமைச்சரால் அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் அது தொடர்பில் அமைச்சரவையினால் வழங்கப்பட்டுள்ள தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஆலோசனைகளின் பிரகாரம் தேசியக் கொள்கை மற்றும் செயற்பாட்டுத் திட்டம் மேற்கொண்டும் திருத்தப்படும் நடவடிக்கைகள் இன்றளவில் இடம்பெற்றுவருகின்றன.

- **1985 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியக சட்டத்தை திருத்துதல்**

இந்த அமைச்சினதும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தினதும் உத்தியோகத்தர்களின் பங்கேற்புடன் உத்தேச திருத்தங்கள் இனங்காணப்பட்டுள்ளதோடு உரிய திருத்தங்கள் அமைச்சரவையின் அங்கீகாரத்திற்காக அனுப்புவதன் பொருட்டு தயாரிக்கப்பட்டுள்ளன.

- **வெளிநாட்டு வேலைவாய்ப்புகளில் ஈடுபட்டுள்ள இலங்கையர்களுக்கு முழுமையான இலத்திரனியல் வாகனங்களை இறக்குமதி செய்வதற்காக அனுமதிப்பத்திரம் வழங்குதல்.**

வெளிநாடுகளில் வேலைவாய்ப்புகளில் ஈடுபட்டுள்ள இலங்கையர்கள் நமது அந்நியச் செலாவணி ஈட்டல்களை நாட்டுக்கு அனுப்புவதன் மூலம் தேசிய பொருளாதாரத்திற்கு வழங்கும் பங்களிப்பினை மதிப்பிடுவதற்காக அவர்களை ஊக்குவிக்கும் ஒரு திட்டமாக இந்நாட்டு வங்கி முறைமையின் ஊடாக அந்நியச் செலாவணியை நாட்டுக்கு அனுப்புகின்ற வெளிநாடுகளில் பணிபுரிகின்ற இலங்கையர்களுக்கு முழுமையான இலத்திரனியல் வாகனங்களை இறக்குமதி செய்யக்கூடிய

வகையில் கௌரவ தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்ட 2022.06.17 ஆம் திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கும் அதற்கு இடை நேர்விளைவான அமைச்சரவைக் குறிப்புக்கும் அமைய 2022.08.16 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த அனுகூலங்களைப் பெற்றுக்கொள்வதற்கான தகுதியைப் பெறுவதற்கு வெளிநாடுகளில் தொழில் வாய்ப்புகளில் ஈடுபட்டுள்ள இலங்கையர்கள் இந்நாட்டுக்கு வங்கி முறைமையின் ஊடாக அனுப்பியுள்ள வெளிநாட்டுப் பணத்தில் ஆகக்குறைந்தது 50% இலங்கை ரூபாவாக மாற்றிக்கொண்டிருத்தல் வேண்டும்.

## 2.3 தொழிலாளர் படையணியை வலுவூட்டுதல் மற்றும் சர்வதேச தொழில் நியமங்களைப் பேணுதல்

சர்வதேச தொழிலாளர் அமைப்புடன் அவ் அமைப்பின் ஓர் உறுப்பு நாடு என்ற வகையில் இலங்கை ஏற்படுத்திக் கொண்டுள்ள கடப்பாட்டினை சர்வதேசரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட சமவாயங்கள் மற்றும் பரிந்துரைகளின் கீழ் இந்த நாட்டில் தொழில் உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் தொழில் துறையில் காணப்படுகின்ற சிக்கல்களை தீர்ப்பததன் பொருட்டு பயன்படுத்துவதற்கான பொறுப்பினை இந்த அமைச்சு நிறைவேற்றுகின்றது.

தொழில் துறை சம்பந்தமான சர்வதேச தொழிலாளர் அமைப்பு மற்றும் ஏனைய பலதரப்பு முகவராலயங்களுக்காக உறுப்பு நாடு என்ற வகையில் இலங்கையின் கடப்பாடு மற்றும் பொறுப்புகள் நிறைவேற்றப்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்துதல் மற்றும் தொழில் கொள்கைகளைத் தயாரித்தல், தேசிய மட்டத்தில் சமூக கலந்துரையாடல்களை ஏற்படுத்துதல் மற்றும் மனிதவள அபிவிருத்திக்காக சர்வதேச ஆதரவைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. இந்த இலக்குகளை அடைவதற்கு 2022 ஆம் ஆண்டின் முதல் மூன்று காலாண்டுகளில் பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### 2.3.1 தொழிற் படையை பலப்படுத்துதல் மற்றும் பாதுகாத்தல்

I. முத்தரப்பு பிரதிநிதித்துவத்துடன் கூடிய தேசிய தொழில் ஆலோசனை குழுக் கூட்டத்தில் (NLAC) வசதி வழங்குனராக செயற்படுதல். 2022 ஆம் ஆண்டில் மூன்று கூட்டங்களை நடத்தியதன் மூலம் பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- தொழிற் படையில் பெண்களின் பங்கேற்பினை அதிகரிப்பதற்காக கடைகள் மற்றும் அலுவலக ஊழியர்கள் சட்டத்தை திருத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டது.
- ஊழியர் சேமலாப நிதியத்தில் 30% உரித்துக்களைப் பெற்றுக்கொள்வதற்காக பின்பற்றப்படுகின்ற நிர்வாக செயல்முறையைத் தளர்த்துவதற்கு முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டன.
- வரவு செலவுத்திட்ட நிவாரண கொடுப்பனவுகள் இரண்டை உள்ளடக்கி ஆகக்குறைந்த சம்பளத்தை 21,000/- ரூபா வரை அதிகரிப்பதற்கு முன்மொழியப்பட்டது.
- 1,000/- ரூபா நாளாந்த சம்பளம் செலுத்தப்படுதல் தொடர்பான தோட்டப்புற மக்களின் பிரச்சினையை தொழிற்சங்கத் தலைவர்கள் முன்வைத்ததோடு அது தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

II. தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக தொழில் சந்தையில் ஏற்பட்டுள்ள சிக்கல்களை இனங்கண்டு அவற்றுக்குத் தீர்வு காண்பதற்காக முத்தரப்பு பிரதிநிதித்துவத்துடன் குழு ஒன்றை நியமித்து அதற்கான நடவடிக்கைகளை ஒழுங்கு செய்தல் மற்றும் கௌரவ

தொழில் அமைச்சரின் பங்கேற்புடன் கலந்துரையாடல் ஒன்றை நடாத்துதல் மற்றும் அதன்போது சமூகப் பாதுகாப்பு மற்றும் தொழில் வாய்ப்பு அற்றவர்களுக்கு காப்புறுதி வசதிகளை வழங்குவதற்காக முன்மொழிவுகளை முன்வைப்பதற்கு தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு, பொதுத் திறைசேரி, இலங்கை மத்திய வங்கி, சர்வதேச தொழிலாளர் அமைப்பு மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் என்பன பிரதிநிதித்துவம் செய்யப்படுகின்ற வகையில் குழுவொன்றைத் தாபிப்பதற்கு தொழில் அமைச்சரால் ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

III. தொழில்துறை சார்ந்த கட்டளைச் சட்டங்கள், கொள்கைகள் திருத்தப்படுதல் மற்றும் புதிய சட்டங்கள் ஆரம்பிக்கப்படுதல் பற்றிய விடயங்கள், போக்குகள், தொழில் சட்டங்கள் மற்றும் கொள்கைகள் தொடர்பில் அமைச்சுக் குழுக் கூட்டங்களை நடாத்துதல்

அ. கடைகள் மற்றும் அலுவலக ஊழியர்கள் சட்டத்தை திருத்துவதற்காக 02 கலந்துரையாடல்கள் நடத்தப்படுதல்.

- அறிவுச் செயன்முறையை வெளியிலிருந்து பெற்றுக்கொள்ளும் நிறுவனங்கள் (KPO), வியாபாரச் செயன்முறையை வெளியிலிருந்து பெற்றுக்கொள்ளும் நிறுவனங்கள் (BPO) மற்றும் ஏனைய நாடுகளில் அமைந்துள்ள வர்த்தக நிறுவனங்கள் மற்றும் கணக்கு நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அலுவலகங்கள் போன்ற நிறுவனங்களில் சேவையில் ஈடுபட்டுள்ள பெண் தொழிலாளர்களுக்கு இரவு நேரங்களில் சேவையில ஈடுபடுவதற்கு வாய்ப்பு வழங்குதல்.
- இரவு நேரங்களில் சேவையில் ஈடுபடுத்தப்படுகின்ற பெண்களுக்காக போக்குவரத்து வசதிகள், பாதுகாப்பு மற்றும் சேவை புரியும் நிலையத்திற்கான பொது வசதிகளை வழங்குவதற்கான கட்டளைகளை ஆக்குவதற்கான அதிகாரத்தை வழங்குதல்.
- நிறைவேற்றப்படுகின்ற சமமான சேவை அல்லது வேலைக்காக பால் பாகுபாடுகள் இன்றி சமமான சம்பளம் செலுத்துவதற்கு தொழில் கொள்வோருக்குக் கட்டளையிடுதல்.

**ஆ. தேசிய குறைந்தபட்ச வேதனச் சட்டம் சம்பந்தமாக 03 கலந்துரையாடல்களை நடாத்துதல்**

- தேசிய குறைந்தபட்ச வேதனத்தை 21,000/- ரூபா வரை அதிகரிப்பதற்கு தொழில் கொள்வோர் இணங்கி உள்ளதனால் இத்தீர்மானத்தை தேசிய தொழில் ஆலோசனைச் சபைக்கு சமர்ப்பிக்க முடியும் என்பதோடு அதன் பெறுபேறுகளின் பிரகாரம் அடுத்த கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
- தேசிய குறைந்தபட்ச வேதனத்தை பயனுள்ள வகையில் நடைமுறைப்படுத்துவதற்காக உத்தேசிக்கப்பட்ட திருத்தங்களுக்கு வரவு செலவுத்திட்ட சலுகைக் கொடுப்பனவு சட்டங்கள் இரண்டையும் உள்ளடக்க துணைக்குழு உடன்படுதல்.
- சர்வதேச தொழிலாளர் அமைப்பின் தொழில்நுட்ப ஆதரவோடு தேசிய குறைந்தபட்ச வேதனங்களை சீராக்கல் செய்வதற்காக பொறிமுறை ஒன்றை ஏற்படுத்துவதன் இயலுமை தொடர்பில் ஆய்வு செய்வதற்கு துணைக்குழு பரிந்துரைத்தல்.

IV. **குழந்தை தொழிலாளர் முறையை மறுதலித்தல் பற்றிய தேசிய குழுவிற்கான (NSCECL) கூட்டங்களை நடாத்துதல் மற்றும் அதற்குரிய அனைத்து நடவடிக்கைகளையும் இணைப்பாக்கம் செய்தல்.**

- இதன்போது குழந்தைத் தொழிலாளர் முறையை இல்லாதொழிப்பதன் பொருட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள, தற்போது காணப்படுகின்றதும் முன்னர் காணப்பட்டதுமான செயற்பாடுகள் தொடர்பில் அறிக்கைகளைச் சமர்ப்பிக்குமாறும் செயற்பாட்டுத் திட்டத்தை தயாரிப்பதற்காக முன்மொழிவுகளை வழங்குமாறும் குறிப்பிட்ட அறிக்கைகள் கிடைத்ததன்

பின்னர் தொழில் திணைக்களத்தின் சிறுவர் மற்றும் மகளிர் பிரிவினால் செயற்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்படுவதற்கான செயன்முறை ஆரம்பிக்கப்படுவதற்கு திட்டமிடப்பட்டது. மேலும் தெரிவுசெய்யப்பட்ட மாவட்டங்களில் குழந்தை தொழிலாளர்கள் இல்லாத வலயங்களை உருவாக்குவதற்காகவும் கலந்துரையாடி செயற்பாட்டுத் திட்டத்தைத் தயாரிப்பதற்கும் தொழில் திணைக்களம் தீர்மானித்தது.



புகைப்படம் 2-1 சர்வதேச தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடல

### 2.3.2 சர்வதேச தொழில் நியமங்களைப் பேணிவருதல்

I. சர்வதேச தொழிலாளர் அமைப்பின் உறுப்புரை இலக்கம் 22 இன் கீழ் 2022 ஆம் ஆண்டுக்காக 06 சமவாயங்களுக்காக அறிக்கைகளைத் தயாரித்தல்.

II. சர்வதேச தொழிலாளர் அமைப்பின் உறுப்புரை இலக்கம் 19 இன் கீழ் காணப்படுகின்ற உறுதிப்படுத்தப்படாத சமவாயங்களுக்காக அறிக்கைகளைத் தயாரித்தல்.

III. EU GSP+ சலுகையைப் பெற்றுக்கொள்வது தொடர்பாக காணப்படுகின்ற சிக்கல்களைத் தீர்ப்பதற்கான அறிக்கையைத் தயாரித்தல் மற்றும் GSP + வரிச்சலுகை தொடர்பில் மேற்பார்வை செய்வதற்காக நியமிக்கப்பட்ட முத்தரப்பு குழுவின் கூட்டங்களை நடாத்துதல் மற்றும் அதுதொடர்பான சகல நடவடிக்கைகளையும் ஒழுங்கு செய்தல் மற்றும் பங்கேற்றல்.

IV. வருடாந்தம் ஜெனிவாவில் நடத்தப்படுகின்ற சர்வதேச தொழிலாளர் மாநாட்டிற்கு முத்தரப்பு பிரதிநிதிகளைப் பங்கேற்கச் செய்வதற்கான சகல நடவடிக்கைகளையும் இணைப்பாக்கம் செய்தல் மற்றும் பின்னாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல். அதன்படி 2022.05.27 முதல் 2022.06.11 ஆம் திகதி வரை இலத்திரனியல் இணையவழி ஊடாக 08 அரச பிரதிநிதிகளும், தொழில்கொள்வோர்களது ஒரு பிரதிநிதியும், 07 தொழிற்சங்க பிரதிநிதிகளும் மாநாட்டில் பங்கேற்றனர்.

V. இலங்கைக்கும் வெளிநாடுகளுக்கும் இடையில் தொழில் துறை சம்பந்தமாக சமூகப்பாதுகாப்பு, கல்வி சம்பந்தமாக எதிர்காலத்தில் ஏற்படுத்திக்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ள புரிந்துணர்வு

ஒப்பந்தங்கள் மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்ட அனைத்து நிகழ்ச்சித் திட்டங்களுக்குமுரியதாக பணியாற்றுதல்.

- இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் சமூகப்பாதுகாப்பு ஒப்பந்தத்திற்கான அமைச்சரவை விஞ்ஞாபனத்தைத் தயாரித்தல் மற்றும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை கைச்சாத்திடுவதற்கான நடவடிக்கைகளை வகுத்தல்.
- ஜப்பானின் எஹிமி மாநிலத்திற்கும் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பிரிவுக்கும் இடையில் ஒப்பமிடப்படவுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தம் தொடர்பான அமைச்சரவை விஞ்ஞாபனத்தை தயாரித்தல்.

VI. சர்வதேச தொழிலாளர் அமைப்பின் தொழில்நுட்ப ஆதரவுடன் நடைமுறைப்படுத்தப்படுகின்ற கருத்திட்டங்கள் மற்றும் செயலமர்வுகள் தொடர்பான அனைத்து இணைப்பாக்க நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுதல்.

VII. வருடாந்தம் அனுப்பப்பட வேண்டிய தொழிலாளர் புள்ளிவிபர ஆவணங்கள் பற்றிய வினாக்கொத்துக்கான பதில்களை சர்வதேச தொழிலாளர் அமைப்புக்கு வழங்குதல்.

VIII. ஒருங்குசேர்வதற்கான சுதந்திரத்திற்கு உள்ள உரிமையை மீறுதல் மற்றம் சர்வதேச தொழிலாளர் அமைப்பின் உறுப்புரை இலக்கம் 87 உடன் பயனுள்ள வகையில் இசைவாக்கம் அடைவதை உறுதிப்படுத்த இலங்கை அரசு தவறுதல் என்ற தலைப்பில் தொழிற்சங்கங்களினால் சர்வதேச தொழிலாளர் அமைப்பிற்கு முன்வைக்கப்பட்ட முறைப்பாடு தொடர்பில் சம்பந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து தகவல்களைப் பெற்று சர்வதேச தொழிலாளர் அமைப்பிற்கு இரண்டு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படுதல்.

IX. மரபுரீதியான அடிமைத்தனம், கடன்பட்ட நிலை, பலாத்கார ஊழியம், பாலியல் அடிமைத்தனம், பால்ய திருமணங்கள், அடிமைத்தன திருமணங்கள் போன்ற சமகால அடிமைத்தனத்திற்கான காரணங்கள் மற்றும் விளைவுகள் தொடர்பாக அறிக்கையிடுவதற்காக ஐக்கிய நாடுகளின் விசேட அறிக்கையாளர் டொமோயா ஒபகொட்டா அவர்களின் இலங்கைக்கான விஜயம் தொடர்பில் அறிக்கைகளை வழங்குதல்.

X. சர்வதேச சமூகப் பாதுகாப்புச் சங்கத்தின் வருடாந்த தகவல்களை இற்றைப்படுத்துதல்.

XI. வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு மற்றும் ஏனைய அரசாங்க அமைச்சுகளுக்கு தொழில்துறையின் புதிய போக்குகள் பற்றிய அறிக்கைகளை வழங்குதல்.

XII. தொழில்நுட்ப ஆதரவினை வழங்குவது சார்பாக இலங்கைக்கு வருகை தருகின்ற சர்வதேச தொழிலாளர் அமைப்பின் அலுவலர்களுக்கான விசா கோரிக்கைக் கடிதங்களை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சுக்குச் சமர்ப்பித்தல்.

XIII. சர்வதேச தொழிலாளர் அமைப்பில் நிறைவேற்றிக் கொள்ளப்பட்ட சமவாயங்கள் மற்றும் பரிந்துரைகளை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

## 2.4 சர்வதேச ஒத்துழைப்பின் ஊடாக புலம்பெயர் தொழிலாளர்களை வலுவூட்டுதல்

### 2.4.1 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்/உடன்படிக்கைகள்

வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பிரிவின் மேம்பாடு, மனித ஆற்றல்களை விருத்தி செய்தல், சர்வதேச சமூகப் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டங்கள், பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், சட்ட நடவடிக்கைகள் மற்றும் பரஸ்பர உறவுகளை முன்னேற்றுவதற்காக இலங்கை அரசு நாடுகளுடன் பல ஒப்பந்தங்களைக்

கைச்சாத்திட்டுள்ளது. தற்போது அவ்வாறான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்/ உடன்படிக்கைகள் பத்தொன்பது (19) செயற்பாட்டு ரீதியில் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

- **புதிய புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்/ உடன்பாடுகள்**

  இலங்கை அரசு, பிரித்தானியா மற்றும் வட அயர்லாந்து அரசு என்பவற்றுக்கு இடையில் சுகாதார சேவை ஒத்துழைப்பு பற்றிய புரிந்துணர்வு ஒப்பந்தம் 2022 ஜனவரி மாதம் 18 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டது.

- **வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் ஊடாக பின்வரும் நாடுகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை/உடன்படிக்கைகளைக் கைச்சாத்திடுவதற்கு வரைவு நகல்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டுள்ளன.**

| | | |
|---|---|---|
| மோல்ட்டா குடியரசு | - | மனிதவலுத் துறை |
| ருமேனியா | - | வேலைவாய்ப்பு மற்றும் மனிதவலுத் துறை |
| லக்சம்பர்க் | - | வேலைவாய்ப்பு மற்றும் மனிதவலுத் துறை |
| இத்தாலி | - | புலம்பெயர்வு மற்றும் நகர்வு பங்காண்மை |

- **வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் தொடர்பாக சேரிட நாடுகளுடன் தற்போது காணப்படுகின்ற புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்/இருதரப்பு உடன்பாடுகளை மீளாய்வு செய்தல்.**

  பின்வரும் உடன்படிக்கைகள்/புரிந்துணர்வு ஒப்பந்தங்களை மீளாய்வு செய்தல் பற்றிய தகவல்கள் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சினூடாக சம்பந்தப்பட்ட அரசுகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| சீசெல்ஸ் அரசு | - | மனிதவலுத்துறை |
| குவைத் அரசு | - | தொழிலாளர் வேலை வாய்ப்புகள் மற்றும் மனித வலு மேம்பாட்டுத் துறை |
| கொரிய குடியரசு | - | வேலைவாய்ப்பு அனுமதிப்பத்திர முறையின் கீழ் ஊழியர்களை அனுப்புதல் மற்றும் பெற்றுக்கொள்ளல் |
| மலேசியா | - | ஊழியர்களை ஆட்சேர்ப்புச் செய்தல், சேவையில் ஈடுபடுத்துதல் மற்றும் மீண்டும் வரவழைத்தல். இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தை கைச்சாத்திடுவதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் தற்போது கிடைத்துள்ளதோடு விரைவில் அது ஒப்பமிடப்படவுள்ளது. |

- **ஒருங்கிணைந்த குழுக் கூட்டங்கள்**

  இலங்கை மற்றும் ஐக்கிய அரபு எமிர் இராஜ்ஜியம் என்பவற்றுக்கு இடையில் இலங்கை மனிதவலு சேவை அமர்த்தல்களை ஒழுங்குறுத்தும் ஒப்பந்தத்தின் கீழான முதலாவது ஒருங்கிணைந்த குழுக் கூட்டம் 2022 ஏப்ரல் மாதம் 06 ஆம் திகதி இணையவழி தொழில்நுட்பத்தின் ஊடாக நடத்தப்பட்டது.

  இக்கூட்டத்தில் இலங்கை தொழிலாளர்கள் ஐக்கிய அரபு எமிர் இராஜ்ஜியத்தில் தொழில் வாய்ப்புகளுக்காக ஆட்சேர்ப்புச் செய்யப்படும் போதும் தொழில்களில் ஈடுபடும் போதும் முகம் கொடுக்கும் பிரச்சினைகள், ஊழியர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் மற்றும் பிணக்குகளைத் தீர்க்கும் முறையியல்கள் மற்றும் பொறிமுறைகள், ஒவ்வொரு தரப்பினரின்

வகிபங்கு, மற்றும் பொறுப்புகளை பொருள்கோடல் செய்கின்ற இரு நாட்டின் தனியார் நிறுவனங்களுக்கு மத்தியில் ஆட்சேர்ப்பு ஒப்பந்தம் ஒன்றை மேம்படுத்துவதற்கான ஒத்துழைப்பு நடவடிக்கை முறைகள் மற்றும் ஐக்கிய அரபு எமிர் இராஜ்ஜியத்தில் தொழில் பிணக்குகளுக்குத் தீர்வுகளை வழங்குவதற்காக நடைமுறைப்படுத்தப்படும் முறையியல் தொடர்பாக சுருக்கமான மீளாய்வும் முன்வைக்கப்பட்டது.

### 2.4.2 உலகலாவிய/வலய ரீதியான மன்றங்கள்

#### கொழும்பு செயன்முறை

இலங்கை தலைமைத்துவம் வகிக்கின்ற திறன்களையும் தகைமைகளையும் இனங்காணும் செயன்முறைகள் தொடர்பான ஏழாவது கருப்பொருள் செயற் குழுக் கூட்டம் மற்றும் பாக்கிஸ்தான் தலைமைத்துவம் வகிக்கின்ற இலாபகரமான, துரித மற்றும் பாதுகாப்பான பணவனுப்பல்களை மேம்படுத்துவது பற்றிய ஆறாவது தொனிப்பொருள் செயற் குழுக்கூட்டம் மற்றும் அதற்கு நிகராக ஆற்றல் விருத்தி செயலமர்வு 2022.06.21 ஆம் திகதி தொடக்கம் 23 ஆம் திகதி வரை தாய்லாந்தில் நடத்தப்பட்டது.

புலம்பெயர் உரிமைகளைப் பாதுகாக்கும் அதே வேளையில் புலம்பெயர் தொழிலாளர்கள், அவர்களது குடும்பங்கள் மற்றும் பிறப்பிடமான நாடுகளுக்கு வெளிநாட்டு வேலைவாய்ப்பின் வளர்ச்சியின் தாக்கத்தை அதிகரிப்பதுடன், ஆசியாவில் ஒழுங்கமைக்கப்பட்ட தொழிலாளர் புலம்பெயர்வின் நன்மைகளை மேம்படுத்துவது இதன் நோக்கமாகும்.

இலங்கை அரசாங்கத்தின் தலைமையில் நடைபெற்ற திறன்கள் மற்றும் தகைமை அங்கீகார செயல்முறைகள் தொடர்பான ஏழாவது கருப்பொருள் செயற்குழு கூட்டத்தில், கொழும்பு செயல்முறைக்கான உறுப்பு நாடுகளின் வம்சாவளிகொண்ட தொழிலாளர்களின் நாடுகளுக்கு வெளியே வேலை தேடும் தொழிலாளர்களின் திறன் மட்டத்தை உயர்த்துவதற்கான அதன் அர்ப்பணிப்புகளை அது ஏற்றுக்கொண்டுள்ளது.

பாக்கிஸ்தான் அரசாங்கத்தின் தலைமையில், இலாபகரமான, வேகமான மற்றும் பாதுகாப்பான பணவனுப்பல்களை மேம்படுத்துவதற்கான ஆறாவது கருப்பொருள் செயற்குழுக் கூட்டத்தில் புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கான முறையான பணம் அனுப்பும் வழிகளை அணுகுவதை மேம்படுத்துதல், அவர்களின் நிதிச் சேவைகளுக்கான அணுகலை மேம்படுத்துதல் மற்றும் புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கும் அவர்களது குடும்பங்களுக்கும் பணவனுப்பல்களை திறம்பட பயன்படுத்துதலை பலப்படுத்துவதற்காக கூட்டின் நோக்கம் மீண்டும் உறுதிபடுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து, கொழும்பு செயல்முறை உறுப்பு நாடுகளின் (CPMS) பிரதிநிதிகளுக்காக, தேர்ந்தெடுக்கப்பட்ட தொழிலாளர் இடம்பெயர்வு மற்றும் நிர்வாகப் பிரச்சினைகளை மையமாகக் கொண்ட ஆற்றல் விருத்தி செயலமர்வு நடத்தப்பட்டது.

நெறிமுறை ஆட்சேர்ப்பு முறையை உருவாக்குவதற்கான கொழும்பு செயல்முறை (CP) கருப்பொருள் செயற்குழுவின் ஒன்பதாவது கூட்டம் 2022.08.24 மற்றும் 25 ஆகிய இரு திகதிகளில் பங்களாதேசின் டாக்காவில் நடைபெற்றது. அதன்போது தெற்கு, கிழக்கு மற்றும் தென்கிழக்கு ஆசியா முழுவதும் ஆரோக்கியமான தொழில் மற்றும் பாதுகாப்பான புலம்பெயர்வு ஆகியவற்றை உறுதி செய்வதற்காக நியாயமான மற்றும் நெறிமுறையான ஆட்சேர்ப்பை ஊக்குவிக்க ஒத்துழைப்பின் அவசியத்தை அது வலியுறுத்தியது. இந்தக் கூட்டத்தின் போது, ஆட்சேர்ப்புத் துறையானது, பணியாளர் ஊதிய மாதிரியிலிருந்து தொழில்கொள்வோர் ஊதிய மாதிரியாக மாற்றுவதற்கான இலக்குகளை மேற்கொண்டும் முன்னெடுத்துச் செல்வதற்காக அவர்களின் நான்கு ஆண்டு பணித் திட்டம், முறைசாரற்ற ஆட்சேர்ப்புச் செயற்பாட்டு ஒழுங்குபடுத்தல் சட்டகங்களின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளதை உறுதிப்படுத்தல் மற்றும் நெறிமுறையான ஆட்சேர்ப்புகளுக்குத் தேவையான தகவல்களுடன் புலம்பெயர்ந்த தொழிலாளர்களை ஆயத்தப்படுத்துவது குறித்து உறுப்பு நாடுகள் கலந்துரையாடின.

- **அபுதாபி உரையாடல்**

அபுதாபி உரையாடலின் ஆலோசனைக் குழுக் கூட்டம் 2022 ஏப்ரல் 05 ஆம் திகதி இணையவழி ஊடாக நடத்தப்பட்டதோடு இலங்கையைப் பிரதிநிதித்துவம் செய்து அதிகாரிகள் பங்கேற்றனர். அபுதாபி உரையாடலுக்குத் தலைமை தாங்கும் பாகிஸ்தானால் அங்கீகரிக்கப்பட்ட 2022-2023 ஆம் ஆண்டிற்கான 6வது அமைச்சரவை ஆலோசனையில் அடையாளம் காணப்பட்ட முன்னுரிமைகளை நிவர்த்தி செய்வதற்காக முன்மொழியப்பட்ட அபுதாபி உரையாடல் ஆராய்ச்சித் திட்டம் குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டது. செயற்பாட்டுத் திட்டத்தை செயல்படுத்துவது குறித்து கலந்துரையாடுவதற்கு ஆலோசனைக் குழுவிற்கு ஒரு வாய்ப்பை இந்த கூட்டம் வழங்குகிறது.

- **பாதுகாப்பான, முறையான மற்றும் முறைசார்ந்த புலம்பெயர்வுக்கான உலகளாவிய சமவாயம் (GCM)**

GCM ஐ செயல்படுத்துவதற்கான தேசியத் திட்டம் தொடர்பான தொழில்நுட்பக் குழுக் கூட்டம் 2022.02.24 ஆம் திகதி தொடர்புடைய அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் ஐக்கிய நாடுகள் சபைக்குச் சொந்தமான நிறுவனங்களின் பங்கேற்புடன் இந்த அமைச்சில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தின் முதன்மை நோக்கம், GCM வருடாந்த அறிக்கையில் உள்ளடங்கியுள்ள நோக்கங்களுக்கு மத்தியில் அதிக முன்னுரிமை அளிக்கப்பட வேண்டிய நோக்கங்களைக் கண்டறிவதாகும்.

இதன் இரண்டாவது தொழில்நுட்பக் குழுக் கூட்டம் 2022.08.30 ஆம்திகதி நடத்தப்பட்டதோடு அதன் முதன்மை நோக்கமானது, GCM தேசிய செயற்பாட்டுத் திட்டத்தைத் தயாரிப்பதற்காக தொடர்புடைய நிறுவனங்களிடமிருந்து அழைக்கப்பட்ட அவதானிப்புகளை செல்லுபடியாக்குவதாகும்.

2022 மே மாதம் நியூயோர்க்கில் GCM மற்றும் IMRF (International Migration Review Forum) நடைமுறைப்படுத்தப்படுதல் பற்றிய தேசியத் திட்டம் தொடர்பிலான இலங்கையின் அறிக்கை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சிடம் சமர்ப்பிக்கப்பட்டது. GCM ஐ செயல்படுத்துவது குறித்த ஆசிய-வளைகுடா நாடுகளின் உரையாடல் (Asia-Gulf Countries Dialogue on the Implementation of the GCM) 2022 செப்டம்பர் 13 முதல் 15 வரை கத்தாரின் தோஹாவில் நடைபெற்றது.




புகைப்படம் 2-2 உடனான சந்திப்பு மலேசியாவின் உயர் ஆணையர்

- **இலங்கையர்களுக்கு பாதுகாப்பான மற்றும் நிலையான தொழிலாளர் புலம்பெயர்வு - கட்டம் IV**

தொழில் மற்றும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் வழிகாட்டுதலின் கீழ் இலங்கைக்கான சுவிஸ் தூதரகத்துடன் இணைந்து செயல்படுத்தப்படும் "இலங்கையர்களுக்கு பாதுகாப்பான மற்றும் நிலையான தொழிலாளர் புலம்பெயர்வு" எனும் கருத்திட்டம் தற்போது அதன் நான்காவது கட்டத்தில் உள்ளது. இலங்கை புலம்பெயர் தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களின் நல்வாழ்வை வலுப்படுத்துவதே இந்த திட்டத்தின் முதன்மையான நோக்கமாகும். சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ILO) மற்றும் IESC ஆகியன இத்திட்டத்தின் தேசிய பங்குதாரர்களாகவும், அனுராதபுரம் மாவட்டத்தில் உள்ள SAFE நிறுவனம், புத்தளம் மாவட்டத்தில் VOICE நிறுவனம், வவுனியா மாவட்டத்தில் FIRM நிறுவனம், கண்டி மாவட்டத்தில் SAMADANA நிறுவனம் மற்றும் குருநாகல் மாவட்டத்தில் CHRCD நிறுவனம் மாவட்ட அளவிலான பங்குதாரர்களாகவும் பணியாற்றுகின்றன. மூன்றாம் காலாண்டு இறுதி வரை இந்த மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்ட கருத்திட்டங்களின் நிதி முன்னேற்றம் 64.3 மில்லியனாகும்.

### 2.4.3 வெளிநாட்டு வேலைவாய்ப்புத் துறையின் மேம்பாடு

**• வெளிநாட்டு வேலைவாய்ப்பை இலக்காகக் கொண்ட திறமையான வெளிநாட்டு வேலைவாய்ப்புப் படையை உருவாக்குதல்.**

புதிய தொழில்நுட்ப அறிவு மற்றும் திறன்களைக் கொண்ட திறமையான தொழிலாளர்களை வெளிநாட்டு தொழில் சந்தைக்கு அனுப்பும் முக்கிய நோக்கத்துடன், பாரம்பரிய வெளிநாட்டு தொழில் சந்தைகளைக் கொண்ட நாடுகளுக்கு மேலதிகமாக புதிய தொழில் சந்தைகளுக்கும்

தொழிலாளர்களை அனுப்புதல் மற்றும் இதுவரை இலங்கைப் பணியாளர்களைக் கொண்டிராத நாடுகளுக்கு தொழிலாளர்களை அனுப்பும் நோக்கில் வெளிநாட்டு வேலைகளுக்குச் செல்லவிருக்கும் நபர்களை அடையாளம் காணும் நடவடிக்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பிரிவின் கீழ் மாவட்ட மற்றும் பிரதேச செயலக அலுவலகங்களுக்கு நியமிக்கப்பட்டுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்டது.

தற்போதைய வெளிநாட்டு வேலை வாய்ப்புகள், அதற்குத் தேவையான தகுதிகள், தொழில்முறை பயிற்சித் தேவைகள், அந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்ய உதவும் நிறுவனங்கள் மற்றும் பாடநெறிகள் போன்ற அடிப்படை விழிப்புணர்வு மற்றும் வழிகாட்டுதல்களை வழங்குவதற்கான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மேற்படி தகவல்களை அடிப்படையாகக் கொண்டு இனங்காணப்பட்ட ஆட்களை இலக்காகக் கொண்டு நடத்துதப்பட்டன. அதன்படி, 24 மாவட்டங்களில் 3900 பயனாளிகளை இலக்காகக் கொண்டு 96 நிகழ்ச்சித்திட்டங்கள் ரூ. 719,260.00 செலவில் மேற்கொள்ளப்பட்டன.

இந்த முதற்கட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடாத்திய பின்னர் அமைச்சுக்கு அனுப்பப்பட்ட தகவல்களின்படி,

- தொழில்சார் பயிற்சியைக் கொண்ட வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்கு விண்ணப்பிக்க விரும்பும் நபர்களின் தகவல்கள் உரிமம் பெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனங்களுக்கு பொருத்தமான வேலை வாய்ப்புக்கு ஆற்றுப்படுத்துவதன் பொருட்டு வழங்குவதற்காக SLBEFக்கு அனுப்பப்பட்டுள்ளன.

- தொழிற்பயிற்சி தேவைப்படும் நபர்களின் தகவல்கள் கல்வி அமைச்சின் கீழ் உள்ள தொழிற்பயிற்சி அதிகாரசபை மற்றும் தேசிய பயிலுநர் மற்றும் பயிற்சி அதிகாரசபையால் நடத்தப்படும் பயிற்சி நிகழ்ச்சிகளில் இணைத்துக்கொள்வதற்காக அனுப்பப்பட்டுள்ளன.

இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம், தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், தேசிய இளைஞர் படையணி மற்றும் தேசிய பயிலுநர் மற்றும் தொழிற்பயிற்சி அதிகாரசபை, இலங்கையின் தொழிற்பயிற்சி அதிகாரசபை (தொழில் பயிற்சி நிலையங்கள் ஊடாக), தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சி திணைக்களம் ஆகிய நிறுவனங்களின் மாகாண மற்றும் மாவட்ட அலுவலகங்களின் ஆதரவுடன் நடத்தப்பட்டுள்ளன. அத்துடன் எதிர்காலத்தில் தேவையின் அடிப்படையில் நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கப்படுகின்றது.

## 2.5 புலம்பெயர் தொழிலாளர்களையும் அவர்களின் குடும்ப அங்கத்தவர்களையும் பாதுகாத்தல், நலனோம்பல் மற்றும் வலுவூட்டுதல்

### 2.5.1 வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பிரிவினால் நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்

- **புலம்பெயர் தொழிலாளர்களுக்காக சமூகப் பாதுகாப்பு திட்டமொன்றை உருவாக்குதல்**


2020 பெப்ரவரி 27ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானத்திற்கு இணங்க, இலங்கை புலம்பெயர் தொழிலாளர்களுக்கான பங்களிப்பு சமூகப் பாதுகாப்பு நிதியத்தை நிறுவுவதற்கான பரிந்துரைகளுடன் கூடிய அறிக்கையைத் தயாரிப்பதற்காக கௌரவ அமைச்சரினால் விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டது. சமூகப் பாதுகாப்பு நிதியத்தை நடைமுறைப்படுத்துவதற்கான வழிமுறைகள் அடங்கிய அறிக்கையை இந்தக் குழு அமைச்சிடம் சமர்ப்பித்துள்ளதுடன், பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தை அறிக்கை பரிந்துரைத்துள்ளது. அதன்படி, இந்த அறிக்கை அமைச்சரவையின் அங்கீகாரத்திற்காக அனுப்பி வைக்கப்பட உள்ளது.

- **குடும்பப் பின்னணி அறிக்கைகளை வழங்குதல்**

புலம்பெயர்ந்த பெண்களின் சிறு வயது குழந்தைகளுக்கு பாதுகாப்பு வழங்கும் நோக்கத்துடன் “வேலைக்காக வெளிநாடு செல்ல எதிர்பார்க்கும் பெண்களின் சிறு வயது குழந்தைகளுக்கான பராமரிப்பு ஏற்பாடுகள் பற்றிய அறிக்கைகளைப் பெறுதல்” எனும் தலைப்பில் அமைச்சின் சுற்றறிக்கை இலக்கம் 01/2022 மற்றும் 2022.07.12 ஆம் திகதி கொண்ட புதிய சுற்றறிக்கை வெளியிடப்பட்டது. 54,271 குடும்பப் பின்னணி அறிக்கைகள் பரிந்துரைக்கப்பட்டுள்ளதோடு 2022 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் 1,732 அறிக்கைகளுக்காகவும், இரண்டாம் காலாண்டில் 6,340 அறிக்கைகளுக்காகவும் பரிந்துரைகள் வழங்கப்பட்டுள்ளதுடன் 2022 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் (இந்த காலகட்டத்தில் குடும்பப் பின்னணி அறிக்கைகள் புதிய சுற்றறிக்கையின்படி வழங்கப்பட்டன) சரியாக கிடைத்த ஆவணங்களாக (DR) ஆற்றுப்படுத்தல்கள் 46,199 காணப்பட்டன.

- **“ஸ்ரமிக சுரெகும” (தொழிலாளர் பாதுகாப்பு) நிழ்ச்சித்திட்டம்**

புலம்பெயர் தொழிலாளர்களின் பாதுகாப்பு மற்றும் நலனோம்பல் நோக்குடன் 2016 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டத்தின் கீழ் பிரதேச செயலக பிரிவு மட்டத்தில் புலம்பெயர்ந்த தொழிலாளர் குடும்பங்களின் பதிவு மேற்கொள்ளப்படுகிறது. பதிவு செய்யப்பட்ட புலம்பெயர்ந்த தொழிலாளர் குடும்பங்களின் பொருளாதார நிலையை உயர்த்தும் நோக்கத்துடன், ”குடும்ப மேம்பாட்டுத் திட்டங்கள்” மற்றும் புலம்பெயர்ந்த குடும்பங்களின் சமூக ரீதியாக பாதிக்கப்படக்கூடிய குழந்தைகளை இலக்காகக் கொண்ட ”கவனிப்புத் திட்டங்கள்” ஆகியவை தயாரிக்கப்பட்டு செயல்படுத்தப்படுகின்றன. இதன் கீழ், 2022 செப்டம்பர் 30 ஆம் திகதியில் பதிவு செய்யப்பட்ட புலம்பெயர்ந்த தொழிலாளர் குடும்பங்களின் எண்ணிக்கை 18,232 ஆகும். (பெணகள் 14,687, ஆண்கள் 3,545).





வரைபடம் 2.1 “ஸ்ரமிக சுரெகும” இன் கீழ் பதிவு செய்யப்படுதல்

- **குடும்ப மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் பராமரிப்புத் திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் செயல்படுத்துதல்**

பிரதேச செயலக அலுவலகங்களுடன் இணைந்த அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் மேற்பார்வை மற்றும் வழிகாட்டலின் படி, தொழிலாளர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் குடும்பங்களை இலக்காகக் கொண்டு 2022 செப்டெம்பர் 30 ஆம் திகதியில் 2857 குடும்ப அபிவிருத்தித் திட்டங்களும் 450 பராமரிப்புத் திட்டங்களும் தயாரிக்கப்பட்டுள்ளன.

இது தவிர, வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தினால் நடைமுறைபடுத்தப்படுகின்ற புலம்பெயர்ந்த குடும்பங்களின் பிள்ளைகளுக்கு கல்விக்கான புலமைப்பரிசில்கள் வழங்கப்படுதல், பாடசாலை உபகரணங்கள் வழங்கப்படுதல், திரும்பிய தொழிலாளர்களுக்கு சுய தொழில் கடன் வழங்கப்படுதல், மாற்றுத்திறனாளிகளுக்கு சுய தொழில் மற்றும் வீட்டுக் கடன் வழங்கப்படுதல், தொழில் பயிற்சி திட்டங்களுக்கு ஆற்றுப்படுத்தப்படுதல் மற்றும் மருத்துவ பிணி ஆய்வுகள் நடத்தப்படுதல் போன்ற நிகழ்ச்சித்திட்டங்களுக்கு ஆற்றுப்படுத்தப்படும் பணிகள் அபிவிருத்தி உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்படுகின்றன.




வரைபடம் 2-2 அபிவிருத்தி உத்தியோகத்தர்களால் தயாரிக்கப்பட்ட குடும்ப அபிவிருத்தி மற்றும் பாதுகாப்புத் திட்டங்கள்

- **விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல்**

அமைச்சுடன் இணைந்த அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் புலம்பெயர்ந்த சமுதாயத்தை இலக்காகக் கொண்டு பிரதேச மட்டத்தில் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருவதோடு

2022 ஜனவரி 01 முதல் செப்டம்பர் 30 வரை நாடு முழுவதும் பின்வரும் துறைகளில் 3,810 விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளன.

- பாதுகாப்பான புலம்பெயர்வு
- மீள் சமூகமயமாக்க நிகழ்ச்சித்திட்டம்
- சுயதொழில் திறன் மேம்பாடு மற்றும் தொழில்சார் வழிகாட்டல்கள்
- சிறுவர் பாதுகாப்பு
- போதைப்பொருள் தடுப்பு
- பால்நிலை அடிப்படையிலான துன்புறுத்தல்களைத் தடுப்பது தொடர்பான விழிப்புணர்வை வழங்குதல்
- மனித கடத்தலுக்கு ஆளாகாமல் இருப்பது பற்றிய விழிப்புணர்வு

- **வெளிநாட்டு வேலைகளை முடித்துவிட்டு அல்லது கோவிட் தொற்றுநோய் காரணமாக இந்த நாட்டிற்கு வந்தவர்களை பொருளாதார மற்றும் சமூக ரீதியில் வலுவூட்டல்**

இந்த நிகழ்ச்சித் திட்டம் 2021 ஆம் ஆண்டில் போலவே 2022 ஆம் ஆண்டிலும் நடத்தப்பட்டது. இதன்படி, சுயதொழில் அல்லது பிற வருமானம் ஈட்டும் நடவடிக்கைகளில் ஈடுபட எதிர்பார்க்கும் நபர்களை மாவட்ட மற்றும் பிரதேச மட்டத்தில் அடையாளம் காண்பது மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களுடன் இணைக்கப்பட்டுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தரால் (வெளிநாட்டு வேலைவாய்ப்பு) மேற்கொள்ளப்பட்டது. அதன்படி, பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில், 2022 முதல் காலாண்டில், 21 மாவட்டங்களில் 4,008 பயனாளிகளை இலக்காகக் கொண்டு, சுயதொழில் கருத்திட்டங்களை செயல்படுத்தத் தேவையான அறிவு மற்றும் தொழில்முயற்சி அறிவை வழங்குவதற்கான 205 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் உள்நாட்டு நிதி 1.403 மி.ரூபா செலவில் நடத்தப்பட்டுள்ளன.

இந்தப் பயிற்சி நிகழ்ச்சிகளில் கலந்து கொண்ட பயனாளிகளில் சுயதொழில்களைப் பேணிவருவதற்கான உபகரணங்கள் தேவைப்படுபவர்கள் இனங்காணப்பட்டு, அவர்கள் தொடர்பான தகவல்கள் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்திடம், அந்த நிறுவனத்தினால் நடைமுறைபடுத்தப்படுகின்ற சுயதொழில் உபகரணங்களை வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்துடன் இணைத்துக்கொள்வதற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. மேலும், இந்த நிகழ்ச்சித்திட்டத்தை 2022 ஆம் ஆண்டின் நான்காவது காலாண்டிலும் நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கப்படுகிறது.

- **வெளிநாட்டு வேலைவாய்ப்புகளில் ஈடுபட்டு இலங்கைக்கு வந்த நபர்கள் / அவர்களது குடும்ப உறுப்பினர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட சமுதாயத்தின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கான கருத்திட்டம்.**

கோவிட்-19 தொற்றுநோய் காரணமாக வேலையிழந்து பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்ட புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு மூலோபாய தலையீட்டின் அவசியத்தை உணர்ந்து, தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம், புலம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பு (IOM), சர்வதேச தெமாழிலாளர் அமைப்புடன் (ILO) இணைந்து புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கான தேசிய கோவிட் 19 பதிற்செயற்பாட்டுத் திட்டம் ஒன்றைத் தயாரித்தது. இத்திட்டத்தை செயல்படுத்த பல்வேறு பங்குதாரர்களின் ஆதரவை அமைச்சு எதிர்பார்த்தது.

அதன்படி, புலம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பு மற்றும் சர்வதேச தொழிலாளர் அமைப்பு ஆகியவற்றின் தலையீட்டில் ஜப்பானிய அரசின் நிதிப் பங்களிப்பில் 9 மாவட்டங்களில் 20 வேலைத்திட்டங்கள் கொண்ட விசேட கருத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. இக் கருத்திட்டங்களின்

கீழ் இதுவரை 5 தையல் நிலையங்கள், 01 காளான் செய்கை கருத்திட்டம், 01 தச்சுத் தொழில் தொடர்பான கருத்திட்டம், 01 தும்புக் கைத்தொழில் கருத்திட்டம் மற்றும் 01 சேதன பசளை உற்பத்திக் கருத்திட்டம் என்ற வகையில் 9 கருத்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டு சமூகத்திடம் கையளிக்கப்பட்டுள்ளன. முடிக்கப்பட்ட கருத்திட்டங்களின் மொத்தப் பெறுமதி சுமார் 42.8 மி.ரூபா என்பதோடு மீதமுள்ள கருத்திட்டங்கள் இறுதிக் கட்டத்தில் உள்ளன.

- **சுயதொழில் / வாழ்வாதார கருத்திட்டங்களில் ஈடுபட எதிர்பார்க்கும் புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் குடும்பங்களின் உறுப்பினர்களுக்கு சேவைகளை வழங்குதல்**

புலம்பெயர்ந்த தொழிலாளர்களால் இலங்கைக்கு அனுப்பப்படும் பணத்தைப் பயன்படுத்தி சுயதொழில்/வாழ்வாதார கருத்திட்டங்களில் ஈடுபடுவதற்கு எதிர்பார்க்கும், இதற்காக தொழில்நுட்ப அறிவு / வழிகாட்டல் தேவைப்படும் "தொழிலாளர் பாதுகாப்பின்" கீழ் பதிவுசெய்யப்பட்ட புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் குடும்பங்களின் உறுப்பினர்களைக் கண்டறிந்த பின்னர், இந்த குழுவினரை இலக்காகக் கொண்டு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. இதற்காக 10 மாவட்டங்களைச் சேர்ந்த 1,170 புலம்பெயர் குடும்ப உறுப்பினர்களின் தகவல்கள் பெறப்பட்டுள்ளன. அத் தகவல்களின் அடிப்படையில் எதிர்காலத்தில் மாவட்ட மட்டத்திலோ, பிரதேச செயலகப் பிரிவுகளை இணைத்து அல்லது பிரதேச செயலகப் பிரிவு மட்டத்திலோ நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துவதற்கான ஒதுக்கீடுகளை விடுவிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

- **புலம்பெயர்ந்த தொழிலாளர் குடும்பங்களில் பாடசாலைக் கல்வியைப் பூர்த்தி செய்துள்ள பிள்ளைகளுக்கு தொழில்நுட்ப அல்லது தொழில் பயிற்சி அளிப்பதில் ஆதரவு**

புலம்பெயர்ந்த தொழிலாளர் குடும்பங்களில் பாடசாலைக் கல்வியைப் பூர்த்தி செய்து, உள்நாட்டு/வெளிநாட்டு வேலைக்குச் செல்லும் எதிர்பார்ப்புடன் கைத்தொழில் அல்லது தொழில்சார் பயிற்சியைப் பெற எதிர்பார்க்கின்ற போதிலும் அதற்கென பொருளாதாரத்தில் சிரமம் உள்ளவர்களின் பிள்ளைகளுக்கு ஆதரவளிப்பதற்காக பிரதேச செயலக மட்டத்தில் தரவுகளும் தகவல்களும் சேகரிக்கப்பட்டன.

இதுவரை 05 மாவட்டங்களுக்கு உரியதாக (அம்பாந்தோட்டை, நுவரேலியா, புத்தளம், பொலன்னறுவை மற்றும் இரத்தினபுரி) 374 பிள்ளைகளின் தகவல்கள் கிடைத்துள்ளதோடு கல்வியமைச்சின் கீழ் காணப்படுகின்ற தொழில் பயிற்சி நிறுவகத்திற்கும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்திற்கும் அந்த நிறுவனங்களினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களில் இப் பிள்ளைகளையும் இணைத்துக் கொள்ளுமாறு அறிவித்து தகவல்கள் அனுப்பப்பட்டுள்ளதோடு மேலதிகமாக மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்களுக்கு ஏற்புடையதாக தொழில் பயிற்சி தேவைப்படும் பிள்ளைகளை இனங்கண்டு அத் தகவல்களையும் அமைச்சிற்கு அனுப்பிவைக்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

### 2.5.2 இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தால் நடைமுறைப்படுத்தப்படும் நிகழ்ச்சித்திட்டங்கள்

புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களைப் பாதுகாத்து, வலுவூட்டுவதற்காக வெளிநாட்டு வேலைவாய்ப்பு செயல்முறையின் மூன்று கட்டங்களிலும் அதாவது, புலம்பெயர்வுக்கு முந்தைய கட்டம் (தீர்மானம் மேற்கொள்ளல், புலம்பெயர்வுக்கு முந்தைய பயிற்சி மற்றும் புறப்படுதல் உட்பட),சேவையில் ஈடுபடும் கட்டம் (வேலைகளில் உள்ள தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்கள் உள்வாங்கப்படும் வகையில்) மற்றும் திரும்பி வருதல் மற்றும் மீள் சமூகமயமாகும் கட்டம் (சமூகமயமாக்கல், ஏற்றுக்கொள்ளல் மற்றும் பாராட்டுதல், கவனிப்பு உட்பட) ஆகிய கட்டங்களில் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் அதன் வகிபங்கை நிறைவேற்றுகின்றது. இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தனது தொழிற்பாட்டுச் செயன்முறையின் ஊடாக இந்த நோக்கங்களை அடைவதற்காக செயற்படுகின்றது.

## 1. நலனோம்பல் செயற்பாடுகள்

அட்டவணை 2-1 புலம்பெயர் தொழிலாளர்களுக்காக நடத்தப்பட்ட நலனோம்பல் நிகழ்ச்சித்திட்டங்கள் - இ.வெ.வே.ப

| | விபரம் | 2022 (சன – செப்) இலக்குகள் | | 2022 (சன – செப்) உண்மையான | |
|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | தொகை (மி.ரூ) | எண்ணிக்கை | தொகை (மி.ரூ) |
| 01 | புலம்பெயர் தொழிலாளர்களுக்காக காப்புறுதி தவணைகளைச் செலுத்துதல் | 195,000 | 233.76 | 199,400 | 219.818 |
| 02 | புலம்பெயர் தொழிலாளர்களுக்காக காப்புறுதி நட்டஈடுகளைச் செலுத்துதல் (திருப்பி வரவழைத்தல், மருத்துவச் செலவுகள், மரண நட்டஈடுகளுக்கான செலவுகள் உட்பட) | கோரிக்கைகளின் படி | | 435 | 80.299 |
| 03 | புலம்பெயர் தொழிலாளர்களுக்காக வீடமைப்புக் கடன் வட்டி சலுகைகளை வழங்குதல் | 100 | 0.5 | 4 | 0.051 |
| 04 | உதவி தேவைப்படும் புலம்பெயர் தொழிலாளர்களுக்கு உணவு பானங்கள், போக்குவரத்து வசதிகள், தங்குமிட வசதிகள் மற்றும் மருத்துவ சிகிச்சைகளை வழங்குதல் | 4,591 | 1.08 | 1,878 | 1.421 |
| 05 | பல்வேறு சிரமங்களுக்கு உள்ளாகிய புலம்பெயர் தொழிலாளர்களை மீண்டும் நாட்டுக்கு அழைத்து வருதல் | 450 | 5.25 | 1,168 | 1.39 |
| 06 | ஊழியர் நலனோம்பல் நிதியத்தின் கீழ் நிவாரணங்களை வழங்குதல் | 105 | 26 | 49 | 11.6 |
| 07 | பேணி வருகின்ற சுயதொழில் வாய்ப்புகளை முன்னேற்றுவதற்காக தொழிலாளர்களுக்குத் தேவையான உபகரணங்கள்/ பொருட்களை வழங்குதல் | 300 | 15.12 | 122 | 4.942 |
| 08 | புலம்பெயர் தொழிலாளர்களுக்கும் அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்கும் மருத்துவ சிகிச்சைகளுக்காக உதவி அளித்தல் | 30 | 1.112 | 08 | 0.124 |
| 09 | புலம் பெயர்ந்த தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு பாடசாலை உபகரணங்களை வழங்குதல் | 935 | 5.7 | 732 | 3.433 |
| 10 | புலம்பெயர் தொழிலாளர்களின் விசேட தேவைகளைக் கொண்டுள்ள பிள்ளைகளுக்குத் தேவையான ஆதரவினை வழங்குதல் | 15 | 5.1 | 8 | 0.118 |

| | விபரம் | 2022 (சன – செப்) இலக்குகள் | | 2022 (சன – செப்) உண்மையான | |
|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | தொகை (மி.ரூ) | எண்ணிக்கை | தொகை (மி.ரூ) |
| 11 | அங்கவீனமுற்ற புலம்பெயர் தொழிலாளர்களின் அங்கவீனத் தன்மைக்கு ஏற்றவாறு வீடுகளை நிர்மாணித்தல்/ திருத்துவதற்காக நிதி மற்றும் தொழில்நுட்ப ஆதரவினை வழங்குதல் | 4 | 4 | 04 | 0.813 |
| 12 | வெளிநாடுகளில் மரணிக்கின்ற புலம்பெயர் தொழிலாளர்கள் சார்பாக நிவாரணங்களை வழங்குதல்<br><br>- சடலங்களை கொண்டு வருவதற்காக ஊழியர் நலனோம்பல் நிதியத்தின் ஊடாக ஆதரவளித்தல் | 15 | 3.24 | பணியகத்தின் செலவில் சடலங்கள் நாட்டுக்கு கொண்டுவரப்படவில்லை | |
| | - மரணச் சடங்குகளுக்கான செலவுகளை ஏற்றல் | 60 | 7 | 154 | 6.27 |



புகைப்படம் 2-3 புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கான புலமைப்பரிசில் உதவித்தொகை வழங்கப்படுதல்

## 2. புலம்பெயர் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு பாடசாலை உபகரணங்களை பகர்ந்தளித்தல்

அட்டவணை 2-2 புலம்பெயர் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்காக புத்தகங்களையும் உபகரணங்களையும் பகர்ந்தளித்தல் - இ.வெ.வே.ப

| | விபரம் | பயனாளி மாணவர்கணின் எண்ணிக்கை 2022 (சன – செப்) | செலவு (ரூ.மி) |
|---|---|---|---|
| 01 | 5 ஆம் தரம் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியெய்த மாணவர்கள் | 805 | 0.973 |
| 02 | க.பொ.த.(சாதாரண தரம்) பரீட்சையில் சித்தியெய்த மாணவர்கள் | 1,540 | |
| 03 | க.பொ.த.(உயர் தரம்) பரீட்சையில் சித்தியெய்த மாணவர்கள் | 302 | |
| | **மொத்தம்** | **2,647** | |

2022 ஆம் ஆண்டில் 2,647 பிள்ளைகளுக்காக வழங்கப்பட்ட புலமைப்பரிசில்கள் 2020 ஆம் ஆண்டிற்கு உரியவையாகும். அந்த வருடம் நாட்டில் ஏற்பட்டிருந்த நிலைமை காரணமாக (கோவிட் தொற்றுநோய் நிலைமை) இப்பிள்ளைகளில் 2,633 பேருக்கான புலமைப்பரிசில் உதவித்தொகை 64.73 மில்லியன் ரூபா 2021 ஆம் ஆண்டில் வங்கியில் வைப்புச் செய்யப்பட்டுள்ளது. எஞ்சிய 14 பிள்ளைகளுக்கான 0.44 மில்லியன் ரூபா பெறுமதியான புலமைப்பரிசில் பணம் 2022 ஆம் ஆண்டில் வங்கியில் வைப்புச் செய்யப்பட்டுள்ளதோடு புலமைப்பரிசில் வழங்கும் விழா செலவினங்களாக 0.533 மில்லியன் ரூபா 2022 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டில் இருந்து செலுத்தப்பட்டுள்ளது.

## 3. புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் ஆற்றல்கள் மற்றும் திறன்களை வளர்ப்பதற்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் பிற தொடர்புடைய பயிற்சிகள்

அட்டவணை 2-3 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் - இ.வெ.வே.ப

| நிகழ்ச்சித்திட்டம் | 2022 (சன - செப்) இலக்குகள் | | 2022 (சன - செப் ) உண்மையான | |
|---|---|---|---|---|
| | நடத்தப்பட்ட நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை | ஆட்களின் எண்ணிக்கை | நடத்தப்பட்ட நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை | ஆட்களின் எண்ணிக்கை |
| வீட்டுத் துறையில் வீடு பராமரிப்பு உதவியாளர் பயிற்சி - மத்திய கிழக்கு | 110 | 1,360 | 395 | 22,670 |
| கிழக்கு ஆசிய மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கான வீட்டுத் துறையில் வீடு பராமரிப்பு உதவியாளர் பயிற்சி | 36 | 410 | 26 | 1,063 |
| பராமரிப்பாளர் பயிற்சி (தேசிய தொழில்சார் தகைமை மட்டம் III) | 24 | 880 | 61 | 4,023 |
| வீட்டுத் துறை வீடு பராமரிப்புப் பயிற்சித் திட்டம் (IFE) | 27 | 860 | 46 | 1,226 |

| | | | | |
|---|---|---|---|---|
| வீடுகளில் அல்லாத வேலைகளுக்குச் செல்லும் தொழிலாளர்களுக்கான பயிற்சி | 470 | 12,500 | 1,200 | 32,723 |
| புலம்பெயர்வுக்கு முந்தைய பயிற்சி - தென் கொரியா | 30 | 1,500 | 29 | 711 |
| புலம்பெயர்வுக்கு முந்தைய பயிற்சி – ஜப்பான் | 29 | 905 | 08 | 79 |
| மொழிப்பயற்சி(ஜப்பான்/ஆங்கிலம்) | 63 | 1,700 | 104 | 4,718 |

## 2.6 பொருளாதார அபிவிருத்திக்காக தொழில்துறை அமைதியைப் பேணுதல்

தொழில் திணைக்களத்தின் தொலைநோக்கு ஆனது சர்வதேச அளவில் போட்டிப் பொருளாதாரத்திற்காக நீடித்த தொழில்துறை அமைதியுடன் கூடிய நாட்டை உருவாக்குவதற்கு பங்களிப்பதாக இருப்பதால், தொழில்துறை அமைதியைப் பேணுவது தொழில் திணைக்களத்தின் அடிப்படை மற்றும் அத்தியாவசியமான பணியாகும்.

இந்த நோக்கத்திற்காக, தொழிலாளர் தொழில்கொள்வோர் ஆகிய இரு தரப்பினரிடையே உரையாடலைப் பேணுதல், ஒருங்கிணைந்த தொழிலாளர் விசாரணைகளை நடத்துதல், சட்டப்பூர்வ உரிமைகள் இழப்பு பற்றிய முறைப்பாடுகளைத் தீர்ப்பது மற்றும் தொழில் பிணக்குகளைத் தீர்ப்பது, தொழிலாளர்களின் தொழில்சார் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக நீதிமன்ற நடவடிக்கைகளை மேற்கொள்வது ஆகிய நான்கு பிரதான செயல்பாடுகளின் கீழ் தொழில் திணைக்களம் செயல்படுகிறது.

### 2.6.1 தொழிலாளர் தொழில்கொள்வோர் ஆகிய இரு தரப்பினரிடையே உரையாடலைப் பேணுதல்

தனியார் மற்றும் பகுதியளவான பொதுத் துறை நிறுவனங்களின் தொழிலாளர் தொழில்கொள்வோர் ஆகிய இரு தரப்பினரிடையே தொழில்துறை அமைதியை நிலைநாட்டும் பணிச்சூழலை உருவாக்க, அத்துறைகளுக்கான நிறுவனங்களைச் சேர்ந்த தொழிலாளர் தொழில்கொள்வோர் ஆகிய இரு தரப்பினரை தொழிலாளர் சட்டங்கள் குறித்து விழிப்புணர்வூட்டுவதற்கான நிகழ்ச்சிகளையும் தங்கள் கடமைகளைச் செய்யும்போது தொழிலாளர் சட்டங்களைப் பற்றி அறிந்திருக்க வேண்டிய ஏனைய அரச நிறுவனங்களின் அதிகாரிகளுக்கான விழிப்பூட்டல் நிகழ்ச்சிகளையும் தொழில் திணைக்களம் ஏற்பாடு செய்து நடத்தியது.

அட்டவணை 2 -4: 2022.01.01 முதல் 2022.09.30 வரை மேற்கொள்ளப்பட்ட விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் - தொ.திணை

| நிகழ்ச்சித்திட்டத்தின் தன்மை | நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர் | நடத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | பங்கேற்றவர்களின் எண்ணிக்கை / பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| **சமூக உரையாடல் மேம்பாடு** | மனிதவள அபிவிருத்திப் பிரிவினால் நடத்தப்பட்ட சமூக உரையாடல் மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்கள் | 78 | 5,381 |
| | மாவட்ட மற்றும் உப தொழில் அலுவலகங்களால் நடத்தப்பட்ட சமூக உரையாடல் மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்கள் | 25 | 700 |
| | வலய சமூக மேடை நிகழ்ச்சித்திட்டங்கள் | 04 | 165 |

| | | | |
|---|---|---|---|
| **கைத்தொழில் பாதுகாப்பு மேம்பாடு** | மாவட்ட தொழிற்சாலை பரிசோதக பொறியாளர் அலுவலகங்கள் மூலம் பிரதேச ரீதியில் நடத்தப்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் விரிவுரைகள் | 63 | 2,559 |
| **தொழில்சார் சுகாதார மேம்பாடு** | தொழில்சார் நலவியல் பிரிவினால் நடத்தப்பட்ட தொழில்கொள்வோர், தொழிலாளர்கள் மற்றும் மருத்துவ மாணவர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் | 178 | 2,217 |
| **பெண்கள் மற்றும் இளம் ஆட்களின் தொழில்சார் உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழித்தல்** | பெண்கள் மற்றும் சிறுவர்கள் தொடர்பான தொழிலாளர் சட்டங்கள் குறித்து தனியார் துறையின் பெண் தொழிலாளர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் | 11 | 500 |
| | குழந்தைத் தொழிலாளர்கள் தொடர்பில் நன்னடத்தை அலுவலர்கள், தொழில் அலுவலர்கள் மற்றும் பொலீஸ் அதிகாரிகளின் ஒருங்கிணைப்புக்கான நிகழ்ச்சித்திட்டம் | 01 | 50 |
| | குழந்தைத் தொழிலாளர்கள் தொடர்பில் மாவட்ட அலுவலக மட்டத்தில் சகல பிரதேச செயலகங்களையும் சேர்ந்த சிறுவர் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சிறுவர் கழகங்களைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள், சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர்கள், பாடசாலை சிறுவர் பாதுகாப்புக் குழு உத்தியோகத்தர்கள், இளைஞர் சேவைகள், சமுதாய அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் கிராம உத்தியோகத்தர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் | 32 | 1,600 |
| **மொத்தம்** | | **392** | **13,172** |

### 2.6.2 தொழில் பரிசோதனைகளை நடத்துதல்

பணியிடங்களில் ஊழியர்களின் நியதிச்சட்ட உரிமைகளைப் பாதுகாப்பதற்காக விதிக்கப்பட்டுள்ள சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் முறையாக செயல்படுத்தப்படுகின்றனவா என்பதை ஆய்வு செய்து, தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் முதலாளிகளுக்கும் ஊழியர்களுக்கும் இடையில் பிரச்சினைகள் ஏற்படுவதைக் கட்டுப்படுத்தி நட்புறவான தொடர்பினை ஏற்படுத்துவதற்காக

2022 சனவரி தொடக்கம் செப்டெம்பர் வரை தொழில் திணைக்கள அதிகாரிகள் நடத்திய பரிசோதனைகள் பற்றிய விவரங்கள் பின்வருமாறு.

மாவட்ட மற்றும் உபதொழில் அலுவலகங்களில் தொழில் அலுவலர்களால் நடத்தப்பட்ட தொழில் பரிசோதனைகளின் எண்ணிக்கை = 40,715





விளக்கப்படம் 2.2 :தொழில் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொழில் பரிசோதனைகள் – தொ.திணை

மாவட்ட மற்றும் உப தொழில் அலுவலகங்களின் தொழில் அலுவலர்களால் பரிசோதனைகளின் பின்னர் முன்வைக்கப்படும் பரிசோதனை அறிக்கைகளின் ஊடாக பெற்றுத்தரப்படும் தகவல்களை மிகவும் விபரமாக பெற்றுக்கொள்ளல் மற்றும் அவற்றின் தரத்தை மேம்படுத்துதல் ஆகிய நோக்கத்துடன் தொழில் பரிசோதனை அறிக்கையைத் திருத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் 2022 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது.

### 2.6.3 நியதிச்சட்ட உரிமைகளை மீறுதல் பற்றிய முறைப்பாடுகளைத் தீர்த்தல் மற்றும் தொழில் பிணக்குகளைத் தீர்த்தல்

தொழில் திணைக்களத்தின் தலைமை அலுவலகத்திற்கும் மாவட்ட மற்றும் உப அலுவலகங்களுக்கும் தொழிலாளர்கள் அல்லது தொழிற்சங்கங்களால் மேற்கொள்ளப்பட்ட நியதிச் சட்ட மீறல்கள் மற்றும் தொழில் பிணக்குகள் தொடர்பாக கிடைத்த முறைப்பாடுகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அத்தோடு திணைக்களத்தின் ஒரு பிரிவு அல்லது தொழில் அலுவலகத்தினால் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடு பற்றிய விசாரணை அல்லது நிறுவன பிரிசோதனை தொடர்பில் திருப்தியடையாத ஒருவர் முறையான விசாரணையொன்றைப் பெற்றுக்கொள்வதற்காக தொழில் ஆணையாளர் நாயகத்திற்கு செயயப்படும் கோரிக்கைகள் தேவைக்கு ஏற்ப மீண்டும் விசாரிக்கப்பட்டன.


அனைத்து அலுவலகங்கள் மற்றும் பிரிவுகளினால் முறைப்பாடுகளை ஒருமனதாகத் தீர்ப்பதற்கும், முறைப்பாடுகளைத் தீர்ப்பதற்கான செயல்முறையை விரைவுபடுத்துவதற்கும், தொழில் திணைக்களத்திற்குக் கிடைக்கும் முறைப்பாடுகளை/மனுக்களை தீர்ப்பதற்கும் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடவடிக்கைமுறை (Standard Operating Procedure (SOP) in settlement of labour disputes / complaints) தயாரிக்கப்பட்டது. 2021 நவம்பர் முதல் அனைத்து தொழில் அலுவலகங்களும் இதனைப் பயன்படுத்தி முறைப்பாடுகளை விரைவாகத் தீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்கின்றன. 2022 செப்டெம்பர் மாதமளவில், பெறப்பட்ட முறைப்பாடுகளில் சராசரியாக 88% மேற்படி ஏற்றுக்கொள்ளப்பட்ட நடவடிக்கைமுறையைப் பயன்படுத்தி தீர்க்கப்பட்டுள்ளன.




வரைபடம் 2.3: 2022.01.01. முதல் 2022.09.30 வரை தொழில் பிணக்குகள் மற்றும் நியதிச் சட்ட மீறல்கள் பற்றிய முறைப்பாடுகள் கிடைக்கப்படுதல் மற்றும் தீர்க்கப்படுதல் – தொ.திணை

### 2.6.4 வேலை பகிஷ்கரிப்புகளில் உரிய தலையீடுகளை மேற்கொள்ளல்

ஒரு தொழில் பிணக்கு வேலை பகிஷ்கரிப்பு வரை வளர்ச்சியடையக்கூடிய நிலைமைகள் அவதானிக்கப்படுகின்ற உடனேயே தொழில் திணைக்கள உத்தியோகத்தர்கள் அந்த நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதோடு வேலை பகிஷ்கரிப்பு இடம்பெறும் பட்சத்தில் அதில் தலையிட்டுத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பார்கள். 2022 ஆம் ஆண்டின் முதல் மூன்று காலண்டுகளில் பதிவாகிய வேலை பகிஷ்கரிப்புகள் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.




விளக்கப்படம் 2.3: வேலை பகிஷ்கரிப்புகள் பற்றிய தகவல்கள்

### 2.6.5 கூட்டு ஒப்பந்தங்களுக்காக தொழில்கொள்வோர் தொழிலாளர் ஆகிய இரு தரப்பினரையும் தூண்டுதல்

தொழில் பிணக்குகளைத் தீர்க்கும் போது கூட்டு ஒப்பந்தங்களுக்கு வருவதன் மூலம் தொழில் கொள்வோர் தொழிலாளர் ஆகிய இரு தரப்பினருக்கும் நிரந்தர தீர்வு கிடைக்கப்படுவது மட்டுமன்றி தொழில் சட்டவிதிகளின் மூலம் வழங்கப்பட்டுள்ள உரிமைகளுக்கு மேலதிகமான சிறப்புரிமைகளையும் பெற்றுக் கொள்வதற்கு வாய்ப்புக் கிடைக்கின்றது. எனவே, கூட்டு ஒப்பந்தங்கள் தொடர்பில் சமூக உரையாடல்கள் ஊடாக தூண்டுதலை ஏற்படுத்துவதற்கு தொழில் திணைக்களம் நிதமும் முயற்சிக்கின்றது. அதன்படி 2022 ஜனவரி மாதம் தொடக்கம் செப்டெம்பர் மாதம் வரையிலான காலப்பகுதியில் வர்த்தமான பத்திரிகையில் வெளியிடப்பட்ட 16 கூட்டு ஒப்பந்தங்கள் உள்ளடங்களாக 2022.09.30 ஆம் திகதியில் நடைமுறையிலுள்ள கூட்டு ஒப்பந்தங்களின் எண்ணிக்கை 187 ஆகும்.

### 2.6.6 நடுத்தீர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்

பிரதேச அலுவலகங்களினால் அல்லது தலைமையகத்தின் கைத்தொழில் உறவுகள் பிரிவினால் நடவடிக்கை எடுக்கப்பட்ட போதிலும் தீர்க்கப்பட முடியாத தொழில் பிணக்குகள் கட்டாய நடுத்தீர்ப்புக்கு அல்லது தொழில் நீதிமன்றத்திற்கு ஆற்றுப்படுத்தப்படுவதோடு 2022 ஜனவரி மாதம் தொடக்கம் செப்டெம்பர் மாதம் வரையிலான காலப்பகுதியில் கட்டாய நடுத்தீர்ப்புக்கு 51 ஆற்றுப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு 34 தீர்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

### 2.6.7 தொழிற்சங்கங்களைப் பதிவு செய்தல்

அனைத்து தொழிற்சங்கங்களும் தொழில் திணைக்களத்தில் பதிவு செய்ய வேண்டியது கட்டாயமாகும். அதன்படி 2022 ஜனவரி மாதம் தொடக்கம் செப்டெம்பர் மாதம் வரையிலான காலப்பகுதியில் தொழில் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள தொழிற்சங்கங்களின் எண்ணிக்கை 104 ஆகும். 2022.09.30 ஆம் திகதியில் காணப்பட்ட சட்டபூர்வமான மொத்த தொழிற்சங்கங்களின் எண்ணிக்கை 2,026 ஆகும்.

## 2.7 தொழில் நியமங்களைப் பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துதல்

தனியார் துறை ஊழியர்களின் தொழில் பாதுகாப்பு மற்றும் நலனோம்பல் தொடர்பில் தாக்கம் செலுத்துகின்ற சம்பளம், சேவை நிலைமைகள் மற்றும் நிபந்தனைகள் தொடர்பாக நியமங்களைத் தயாரித்தல், இற்றைப்படுத்துதல் மற்றும் அவற்றுக்கு


சட்ட அந்தஸ்தினை வழங்குதல் தொழில் திணைக்களத்தின் முதன்மையான பணியாகும். அதன்படி 2022 ஜனவரி மாதம் தொடக்கம் செப்டம்பர் மாதம் வரையிலான காலப்பகுதியில் பின்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### 2.7.1 சம்பளச் சபைகளின் குறைந்தபட்ச சம்பளங்களை இற்றைப்படுத்துதல்

அட்டவணை 2.5: ஆகக் குறைந்த சம்பளங்களை இற்றைப்படுத்திய சம்பளச் சபைகள் - தொ.திணை


| தொ.இ | சம்பளச் சபை | முதலாவது கூட்டம் நடத்தப்பட்டுள்ளது. | ஆட்சேபனைகள் கோரப்பட்டுள்ளன. | சம்பளங்கள் திருத்தப்பட்டுள்ளன | திருத்தப்பட்ட சம்பளத்தை வர்த்தமானியில் வெளியிடுதல் |
|---|---|---|---|---|---|
| 01 | கட்டிடக் கைத்தொழில் | | ✓ | | |
| 02 | பேக்கரி கைத்தொழில் | | | ✓ | 4 ஆவது காலாண்டில் மேற்கொள்ளப்படவுள்ளது. |
| 03 | *குதரி* தும்பு மற்றும் நார்த் தும்பு வெளிநாடுகளுக்கு அனுப்பும் கைத்தொழில் | | | ✓ | 4 ஆவது காலாண்டில் மேற்கொள்ளப்படவுள்ளது. |
| 04 | ஆடை உற்பத்தி கைத்தொழில் | | ✓ | | |
| 05 | ஹொசியர்(மேஸ் பொருட்கள்) உற்பத்திக் கைத்தொழில் | ✓ | | | |
| 06 | பீங்கான் பொருள் உற்பத்திக் கைத்தொழில் | | ✓ | | |
| 07 | கற் குவாரி மற்றும் கருங்கல் உடைத்தல் கைத்தொழில் | | ✓ | | |
| 08 | கருவா கைத்தொழில் | | ✓ | | |
| 09 | மோட்டார் வாகன போக்குவரத்து கைத்தொழில் | | ✓ | | |
| 10 | சினிமாக் கைத்தொழில் | | ✓ | | |
| 11 | கப்பற் போக்குவரத்து மற்றும் தொழிற்பாட்டு சேவைகள் கைத்தொழில் | | | ✓ | 4 ஆவது காலாண்டில் மேற்கொள்ளப்படவுள்ளது. |
| 12 | பத்திக் கைத்தொழில் | | | ✓ | |
| 13 | முன்பள்ளிக் கைத்தொழில் | | | ✓ | |
| 14 | பீடி உற்பத்திக் கைத்தொழில் | | | ✓ | |
| 15 | அலங்கார பூக்கள், மரக்கறி மற்றும் பழச் செய்கை மற்றும் ஏற்றுமதிக் கைத்தொழில் | | | ✓ | |

### 2.7.2. 05 நாள் வேலை வாரத்திற்கான அங்கீகாரம் வழங்கப்படுதல்





விளக்கப்படம் 2.4: 05 நாள் வேலை வாரத்திற்காக அங்கீகாரம் வழங்கப்படுதல் – தொ.திணை

### 2.7.3 கூட்டு ஒப்பந்தங்களின் சட்ட ரீதியான செல்லுபடித் தன்மையை பரிசோதித்தல்





விளக்கப்படம் 2.5: கூட்டு ஒப்பந்தங்களின் சட்ட ரீதியான செல்லுப்படித் தன்மையை பரிசோதித்தல் – தொ.திணை

### 2.7.4 சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம், கடைகள் மற்றும் அலுவலக ஊழியர்கள் சட்டத்தின் கீழ் சம்பளத்திலிருந்து கழிப்பதற்காக கிடைக்கும் கோரிக்கைகளுக்காக அனுமதி வழங்குதல்




விளக்கப்படம் 2.6: சம்பளத்திலிருந்து கழிப்பதற்காக கிடைக்கும் கோரிக்கைகளுக்கு அனுமதியளிக்கப்படுதல் – தொ.திணை

### 2.7.5 சட்டங்கள் தொடர்பாக மக்களாலும் பல்வேறுபட்ட நிறுவனங்களாலும் மேற்கொள்ளப்படுகின்ற விசாரணைகளுக்கு தெளிவுபடுத்தல்களையும் பொருள்கோடல்களையும் வழங்குதல்




விளக்கப்படம் 2.7: சட்டங்கள் தொடர்பில் பொது மக்கள் மற்றும் பல்வேறுபட்ட நிறுவனங்களால் மேற்கொள்ளப்படுகின்ற விசாரணைகளுக்கு தெளிவுபடுத்தல்களையும் பொருள்கோடல்களையும் வழங்குதல் – தொ.திணை

## 2.8 தொழிலாளர்களின் தொழில்சார் பாதுகாப்பிற்காக கண்ணியமான பணிச்சூழலை உறுதிப்படுத்துதல்

கைத்தொழிற்சாலைகளில் சேவையில் ஈடுபட்டுள்ள ஊழியர்களுக்கு பௌதீக ரீதியில் உடல்ரீதியான சேதங்கள், மின்சாரம், வெப்பம், காற்றழுத்தம், அதிக ஒளி மற்றும் இறைச்சல் என்பன மூலம் உடல்ரீதியான சேதங்கள் ஏற்படுவதற்கான அல்லது மரணங்கள்கூட சம்பவிப்பதற்கான அச்சுறுத்தல் உள்ளது. எனவே விபத்துக்கள் ஏற்படுவதைக் குறைப்பது தொழில் திணைக்களத்தின் பொறுப்பாகும். இலங்கையில் கைத்தொழிற்சாலைகளில் பணியாற்றுகின்ற தொழிலாளர்களின் தொழில்சார் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் நலனோம்பல் தொடர்பான பிரதான சட்டரீதியான சாதனம் 1942 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க தொழிற்சாலை கட்டளைச்சட்டம் மற்றும் அதற்கு அமைவாக நிறைவேற்றிக் கொள்ளப்பட்டுள்ள ஒழுங்குவிதிகள் என்பனவாகும். ஆபத்துக்களற்ற பணிச் சூழலை உறுதிப்படுத்துவதற்காக தொழில் திணைக்களம் பிரதானமாக பின்வரும் செயற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

| | **2022.01.01** முதல் **2022.09.30** வரையான காலப்பகுதியில் நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகள் |
|---|---|
| <br> | புதிதாக பதிவு செய்யப்பட்ட புதிய கைத்தொழிற் சாலைகளின் எண்ணிக்கை = 631<br>(2022.09.30 ஆம் திகதியில் தொழில் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள மொத்த தொழிற்சாலைகளின் எண்ணிக்கை = 32,887) |
| <br> | பரிசோதித்த அங்கீகரிக்கப்பட்ட கட்டிடத் திட்டங்களின் எண்ணிக்கை = 194 |

| | |
|---|---|
|  | பரிசோதித்த கைத்தொழிற்சாலைகளின் எண்ணிக்கை = 2,377 |
|  | **பதிவாகியுள்ள மரணத்தை ஏற்படுத்தக்கூடிய விபத்துகளின் எண்ணிக்கை = 49**<br>**பதிவாகியுள்ள மரணத்தை ஏற்படுத்தாத விபத்துகளின் எண்ணிக்கை = 898** |
|  | அதி அபாயமிகு இயந்திர பரிசோதனை/ ஒழுங்குபடுத்தல்களின் எண்ணிக்கை = 8,768 |

விளக்கப்படம் 2.8: ஆபத்து அற்ற பணிச் சூழலை உறுதிப்படுத்துவதற்கான செயற்பாடுகளின் முன்னேற்றம் – தொ.திணை

## 2.9 தொழிலாளர்களின் தொழில்சார் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள்

சேவை நிலையங்களில் சுகாதார பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்காக சேவை நிலையங்களில் சுகாதாரப் பிரச்சினைகள் அல்லது விபத்துக்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளனவா என்பதை விஞ்ஞானரீதியான வழிமுறைகளின் கீழ் கண்டறிதல் மற்றும் அவ் விபத்துகளைத் தவிர்ப்பதற்காக நடவடிக்கை எடுத்தல் மற்றும் அவற்றைத் தடுப்பதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக விழிப்புணர்வூட்டல் என்பன தொழில் திணைக்களத்தின் பொறுப்புகளாகும். அதன் பிரகாரம் 2022.01.01 ஆம் திகதி தொடக்கம் 2022.09.30 ஆம் திகதி வரை பின்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

சுற்றாடல் அளவீடுகளின் எண்ணிக்கை - 83

உயிரியல் ரீதியான பரிசோதனைகளின் எண்ணிக்கை - 850



தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு கணக்காய்வுகளின் எண்ணிக்கை - 106

மருத்துவ காரணங்களின் அடிப்படையில் ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதி அனுகூலங்களைக் கோருகின்ற விண்ணப்பதாரர்கள் சார்பில் மருத்துவச் சபைகள் நடத்தப்பட்டு வழங்கப்பட்டுள்ள தீர்மானங்களின் எண்ணிக்கை = 15


விளக்கப்படம் 2.9 தொழில்சார் நலவியல் செயற்பாடுகளின் முன்னேற்றம் – தொ.திணை

## 2.10 சேவையில் ஈடுபடும் பெண்களினதும் இளம் ஆட்களினதும் உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் குழந்தைத் தொழிலாளர் முறையை மறுதலித்தல்

வேலைத்தளத்தில் பெண்களின் தொழில் உரிமைகளைப் பாதுகாக்கின்றதான தொழில் சட்டங்களை நடைமுறைப்படுத்துதல், அச் சட்டங்களை கால ரீதியில் மீளாய்வு செய்து தேவையான திருத்தங்களை விதப்புரை செய்வதனூடாக ஆக்கவிளைவுடன் கூடிய மகளிர் உழைப்புப் பங்களிப்பினை நாட்டுக்கு பெற்றுக்கொடுப்பது தொழில் திணைக்களத்தின் முதன்மைப் பொறுப்புகளில் ஒன்றாகும்.


அத்தோடு அனைத்துத் தரப்பினர்களினதும் பங்களிப்பின் ஊடாக இலங்கையில் குழந்தை தொழிலாளர் முறையை இல்லாதொழிக்கும் செயல்முறையில் முக்கியமான பணியினை நிறைவேற்றுவது மட்டுமன்றி 18 வயதுக்குக் குறைந்த சிறுவர்களுக்கான சட்டங்களை நடைமுறைப்படுத்துவதும் பெண்கள், இளம் ஆட்கள் மற்றும் சிறுவர்களை சேவையில் அமர்த்துதல் பற்றிய சட்டவிதிகளை காலத்துக்கு ஏற்ற வகையில் திருத்துவதற்கு விதப்புரைகளை முன்வைத்து அவற்றை நடைமுறைப்படுத்துவதும் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது.

அதன்படி 2022.01.01 முதல் 2022.09.30 ஆம் திகதி வரை பின்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.





விளக்கப்படம் 2.10 :குழந்தைத் தொழிலாளர்கள் பற்றிய முறைப்பாடுகளை விசாரித்தல் – தொ.திணை

**2.10.2 பெண்களை இரவு நேர சேவையில் ஈடுபடுத்துதல் பற்றிய சேவை நிபந்தனைகள் மீறப்படுதல் தொடர்பில் கிடைத்த முறைப்பாடுகள் பற்றிய விசாரணைகள்**




விளக்கப்படம் 2.11: பெண்களை இரவு நேர சேவையில் ஈடுபடுத்துதல் சம்பந்தமான முறைப்பாடுகள் மீதான விசாரணைகள் – தொ.திணை

**2.10.3 பெண்களை இரவுநேர சேவையில் ஈடுபடுத்துவதற்காக அனுமதி வழங்கப்படுதல்**




விளக்கப்படம் 2.12: பெண்களை இரவு நேர சேவையில் ஈடுபடுத்துவதற்காக அனுமதி வழங்குதல் – தொ.திணை

**2.10.4 கம்பஹா, களுத்துறை, பதுளை மற்றும் காலி ஆகிய மாவட்டங்களை "குழந்தைத் தொழிலாளர்கள் இல்லாத வலயங்கள்" ஆக பிரகடனப்படுத்துவதற்கு அந்த மாவட்டங்களுக்கு உரிய குழுக்களை நியமித்தல் மற்றும் செயற்பாட்டு திட்டங்களைத் தயாரித்தல்.**

காலி, பதுளை மற்றும் கம்பஹா மாவட்டங்களுக்கான பிரதேச குழுக் கூட்டங்களை நடாத்தி ஒருங்கிணைந்த செயற்பாட்டு திட்டத்தைத் தயாரிப்பதற்காக பூர்வாங்க கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன. அதன் பின்னர் கிராம அலுவலர் மற்றும் பிரதேச செயலகங்கள் ஊடாக மாவட்டத்தில் 18 வயதுக்குக் குறைந்த சிறுவர்கள் பற்றிய தகவல்களை ஒன்று திரட்டுதல் இரண்டாம் கட்டமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

**2.10.5 குழந்தைத் தொழிலாளர்களாக ஆளாகிய மற்றும் குழந்தைத் தொழிலாளர்களாக ஆளாவதற்கான ஆபத்தினைக் கொண்டுள்ள குடும்பங்களைச் சேர்ந்த சிறுவர்களின் எதிர்கால பாதுகாப்பினை மேம்படுத்துதல்.**

மெலிபன் பிஸ்கட் மெனுபெக்சரின் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துடன் தொழில் திணைக்களம் கையெழுத்திட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி. நாடு முழுவதிலும் குழந்தைத் தொழிலாளர்களாக ஆளாகிய மற்றும் குழந்தைத் தொழிலாளர்களாக ஆளாவதற்கான ஆபத்தினைக் கொண்டுள்ள பிள்ளைகள் உள்ள 50 குடும்பங்களைத் தெரிவுசெய்து அக்குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளின் எதிர்கால பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்காக அக் குடும்பங்களின் பொருளாதாரத்தைக் கட்டியயெழுப்புவதற்காக “*நிதஹஸே ரன் தருவோ நிதியம்*” ஊடாக தேவையான உபகரணங்கள் மற்றும் நிதி ஆதரவு வழங்கும் கருத்திட்டத்தின் ஆரம்பக் கட்ட நடவடிக்கையாக 2022.05.05 ஆம் திகதி மாத்தறை மாவட்டத்தில் நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. இதன்போது 04 குடும்பங்களுக்கு தேவையின் அடிப்படையில் அனுகூலங்கள் வழங்கப்பட்டன. இக்கருத்திட்டத்தின் நிகழ்ச்சித்திட்டம் அநுராதபுரம் மற்றும் பொலன்னறுவை ஆகிய மாவட்டங்களில் நடத்தப்பட்டது. அதன்போது பொருளாதார சிரமங்களைக் கொண்டுள்ள 06 குடும்பங்களைச் சேர்ந்த சிறுவர்களுக்கு தேவையான அனுகூலங்கள் வழங்கப்பட்டன.

“

**2.10.6 பிரதான கொண்டாட்ட தினங்கள்**

- **சர்வதேச மளிர் தினம் - 2022**

“நாடும் தேசமும் உலகமும் அவளே”என்பதனைக் கருப்பொருளாகக் கொண்டு 2022.03.08 ஆம் திகதி கொண்டாடப்பட்ட சர்வதேச மகளிர் தினத்திற்கு ஒருங்கமைவாக தொழில் திணைக்களத்தின் மகளிர் தின கொண்டாட்டம் கட்டுநாயக்க ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயத்தைச் சேர்ந்த 100 பெண் தொழிலாளர்களுக்காக தொழில் அமைச்சரின் தலைமையில் 2022.03.09 ஆம் திகதி கட்டுநாயக்க முதலீட்டுச் சபையின் கேட்போர் கூடத்தில் நடத்தப்பட்டது.

- **சர்வதேச குழந்தைத் தொழிலாளர் எதிர்ப்பு தின நிகழ்ச்சி - 2022**

சர்வதேச குழந்தைத் தொழிலாளர் எதிர்ப்பு தினத்திற்கு ஒருங்கமைவாக குழந்தைத் தொழிலாளர் முறையை இல்லாதொழித்தல் பற்றிய செய்தியை சமூகமயப்படுத்துவதற்காக 2022.06.12 ஆம் திகதி சிங்கள மற்றும் ஆங்கில மொழிகளில் Mobitel, Dialog, Hutch மற்றும் Airtel ஆகிய சேவை வலையமைப்புகள் ஊடாக பாவனையாளர்களுக்கு குறும் செய்தி சமூகமயப்படுத்தப்பட்டது.

இதற்கு மேலதிகமாக சர்வதேச குழந்தைத் தொழிலாளர் எதிர்ப்பு தினத்திற்கு ஒருங்கமைவாக 2022.06.12 ஆம் திகதி தேசிய ரூபவாஹினி அலைவரிசை ஊடாக ஒளிபரப்பப்படும் ”இரிதா ஆயுபோவன்” நிகழ்ச்சியின் ஊடாக குழந்தைத் தொழிலாளர் தொடர்பில் விழிப்பூட்டல் வழங்கப்பட்டது.

**2.11. தொழிலாளர்களின் சமூகப் பாதுகாப்பு**

**ஊழியர் சேமலாப நிதியப் பிரிவு**

இலங்கையின் தனியார் துறை மற்றும் பகுதியளவு அரச துறையில் சேவையில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு ஆரோக்கியமான பொருளாதார நிலைமையுடன் கூடிய இளைப்பாறல்

வாழ்க்கைக் காலத்தை பெற்றுக்கொடுக்கும் அடிப்படை நோக்கத்தை முதலாகக் கொண்டு 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின் மூலம் ஊழியர் சேமலாப நிதியம் தாபிக்கப்பட்டுள்ளது. இந்த நிதியத்திற்கான நிர்வாகம் தொழில் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுவதோடு அதன் நிதி முகாமைத்துவம் இலங்கை மத்திய வங்கியின் நிதிச் சபையினால் மேற்கொள்ளப்படுகின்றது. இடைக்கிடை திருத்தப்பட்ட இச் சட்டத்தின்கீழ் இன்றளவில் திணைக்களத்தினால் நிறைவேற்றப்படுகின்ற செயற்பாடுகள் பின்வருமாறு அமைகின்றன.

- ✓ ஊழியர் சேமலாப நிதியத்திற்காக தொழில்தருநர்களைப் பதிவு செய்தல்
- ✓ ஊழியர் சேமலாப நிதியத்திற்காக அங்கத்தவர்களைப் பதிவுசெய்தல்
- ✓ பங்களிப்புத் தொகை செலுத்தாத தொழில்தருநர்களிடமிருந்து பங்களிப்புத் தொகைகளை அறவிடுதல்.
- ✓ அங்கத்தவர்களுக்கு அனுகூலத் தொகைகளை செலுத்துவதற்கு செலுத்தல் கட்டளைகளை வழங்குதல்.
- ✓ அங்கீகரிக்கப்பட்ட சேமலாப நிதிக்கான மேற்பார்வை.

### 2.11.1 ஊழியர் சேமலாப நிதியத்திற்காக நிறுவனங்களையும் அங்கத்தவர்களையும் பதிவு செய்தல்


ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின் கீழ் உள்வாங்கப்படுகின்ற சகல தொழில் கொள்வோரும் நிதியத்தில் தம்மை பதிவு செய்து கொள்ளல் வேண்டும். அத்தோடு, ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின் மூலம் உள்வாங்கப்படுகின்ற சகல தொழிலாளர்களுக்கும் அங்கத்தவ இலக்கங்களை வழங்கி அவர்களை நிதியத்தில் பதிவு செய்ய வேண்டியது தொழில் கொள்வோரின் பொறுப்பு என்பதோடு அது தொழில் திணைக்களத்தினால் மேற்பார்வை செய்யப்படும்.

அதன்படி, பதிவு செய்து கொள்வதற்காக வருகை தருகின்ற சேவை பெறுநர்களின் அலுவல்களை மிகவும் இலகுபடுத்துவதற்காகற்காக தொழில் திணைக்களத்தினால் ஊழியர் சேமலாப நிதி விண்ணப்பபடிவங்களைக் கையளிப்படுவதற்கு நேரத்தை ஒதுக்கிகொள்ளும் முறைமை 2022.09.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டது.

அத்துடன், ஊழியர் சேமலாப நிதியம் அங்கத்தவர்களை பதிவுசெய்கின்ற A, B மற்றும் H ஆகிய படிவங்களை தொழில் கொள்வோர், தொழில் திணைக்களத்தின் இணையத்தளத்திலிருந்து பெற்றுக்கொள்வதற்கான வழிமுறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதன் மூலம் தொழில்கொள்வோரின் நடவடிக்கைகள் மிகவும் இலகுபடுத்தப்பட்டுள்ளன.


### 2.11.2 ஊழியர் சேமலாப நிதியத்தின் அனுகூலங்களைச் செலுத்துதல்

ஊழியர் சேமலாப நிதியத்தின் அனுகூலங்களைப் பெற்றுக்கொள்வதற்காக வருகை தருகின்ற சேவைபெறுநர்களுக்காகவும் "ஊழியர் சேமலாப நிதி விண்ணப்பப்படிவங்களைக் கையளிப்பதற்கு நேரத்தை ஒதுக்கிகொள்ளும் முறைமை"(EPF Appointment Management System) ஊடாக நேரத்தை ஒதுக்கி கொள்ளும் வசதி 2022.09.01 ஆம் திகதி தொடக்கம் வழங்கப்பட்டுள்ளது.





விளக்கப்படம் 2.13: ஊழியர் சேமலாப நிதியத்திற்கான விண்ணப்பப்படிவங்களை ஒப்படைக்கும் நடவடிக்கைகள் – தொ.திணை

2022.01.01 ஆம் திகதி தொடக்கம் 2022.09.30 ஆம் திகதி வரை ஊழியர் சேமலாப நிதியத்தின் அனுகூலங்களைப் பெற்றுள்ள மொத்த பயனாளிகளின் எண்ணிக்கை 119,037 என்பதோடு அது பற்றிய வகைப்பாடு கீழே தரப்பட்டுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.




வரைபடம் 2.4: 2022.01.01. முதல் 2022.09.30 வரை ஊழியர் சேமலாப நிதியத்தின் அனுகூலங்களைப் பெற்றவர்களின் எண்ணிக்கை – தொ.திணை

கடந்த ஆறு வருட காலப்பகுதியில் தொழில் திணைக்களம் ஊழியர் சேமலாப நிதியத்தின் அனுகூலங்கள் செலுத்தப்படும் நடவடிக்கைகளை வினைத்திறன்மிக்கதாக ஆக்குவதற்கு மேற்கொண்ட நடவடிக்கைகளின் பெறுபேறாக ஊழியர் சேமலாப நிதி அனுகூலங்கள் செலுத்தப்படும் நடவடிக்கைகளில் முறையான முன்னேற்றம் காணப்படுவதோடு 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2022 ஆம் ஆண்டின் மூன்றாவது காலாண்டின் முடிவில் 14 நாட்களுக்குள் அனுகூலம் செலுத்தப்பட்ட சதவீதம் 43% தொடக்கம் 65% வரை அதிகரித்துள்ளது. அதன்படி அனுகூலம் செலுத்தப்படும் வினைத்திறன் வளர்ச்சியடைந்துள்ளது.




வரைபடம் 2.5: ஊழியர் சேமலாப நிதியத்தின் அனுகூலங்களைச் செலுத்துவதற்காக எடுக்கப்பட்ட காலம் – 2017 ஆம் ஆண்டு தொடக்கம் 2022 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டு வரை – தொ.திணை

### 2.11.3 பங்களிப்புத் தொகை செலுத்தத் தவறுகின்ற தொழில் கொள்வோரிடமிருந்து பணம் அறவிடுவதற்காக அறிவித்தல்களை அனுப்புதல்

பங்களிப்புத் தொகை செலுத்தத் தவறுகின்ற தொழில் கொள்வோரிடமிருந்து அப்பணத்தை அறவிடுவதற்காக திணைக்களத்தினால் முதல் அறிவித்தல்களும் சிகப்பு அறிவித்தல்களும் அனுப்பப்படுவதோடு அவற்றுக்குப் பதிற் செயற்பாடு காட்டப்படாத பட்சத்தில் சட்ட நடவடிக்கை மேற்கொண்டு அப் பங்களிப்புத் தொகைகளையும் மிகைத் தொகைகளையும் அறவிட்டு கணக்குகளில் வைப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**2022.01.01 முதல் 2022.09.30 வரை அறிவித்தல்களை அனுப்பியதன் முன்னேற்றம்**

| **அனுப்பிய முதல் அறிவித்தல்களின் எண்ணிக்கை** | முதல் அறிவித்தல்களின் மூலம் அறவிடப்பட்ட தொகை ரூ. | அனுப்பிய சிவப்பு அறிவித்தல்களின் எண்ணிக்கை | சிவப்பு அறிவித்தல்களின் மூலம் அறவிடப்பட்ட தொகை ரூ. |
|---|---|---|---|
| **8,132** | **266,708,845** | **5,655** | **255,574,586** |










விளக்கப்படம் 2.14: அறிவித்தல்களை அனுப்புவதன் முன்னேற்றம் – ஊ.சே.நி

### 2.11.4 அங்கீகரிக்கப்பட்ட சேமலாப நிதி மேற்பார்வை

2022 செப்டெம்பர் மாதம் 30 ஆம் திகதி அளவில் ஊழியர் சேமலாப நிதியத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் சேமலாப நிதி காணப்படுகின்ற 117 நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதோடு அன்றைய தினத்தில் காணப்பட்ட மொத்த அங்கத்தவர்களின் எண்ணிக்கை 72,633 ஆகும்.

## 2.12 தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான சட்டப் பாதுகாப்பு


தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக தொழில் திணைக்களத்தினால் பல சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. அதன்படி தொழில் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய மேற்படி கட்டளைச் சட்டங்களின் ஏற்பாடுகள் நாடு முழுவதும் ஒரே விதமாக நடைமுறைப்படுத்தப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காக அச் சட்டங்களை மீறுகின்றவர்களுக்கு எதிராக நீதிமன்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதும் அதனூடாக தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதும் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன. அதன் பிரகாரம் 2022.01.01 ஆம் திகதி தொடக்கம் 2022.09.30 ஆம் திகதி வரை தொழில் திணைக்களத்தின் சட்ட நடவடிக்கைகளின் முன்னேற்றம் பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

அட்டவணை 2.6: நீதிமன்றங்களின் பிரகாரம் வழக்குகளின் செயலாற்றுகை – 2022.01.01 முதல் 2022.09.30 வரை –தொ.திணை

| **நீதி மன்றங்களின் பிரகாரம் வழக்குகளின் செயலாற்றுகை** | | | |
|---|---|---|---|
| நீதிமன்றம் | **2022 ஆண்டுக்கு முன்கொண்டு வரப்பட்ட நிலுவை** | **2022 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட வழக்குகள்** | **2022.09.30ஆம் திகதியில் முடிக்கப்பட்ட வழக்குகள்** |
| உயர் நீதிமன்றம் | 119 | 15 | 18 |
| மேன்முறையீட்டு நீதிமன்றம் | 252 | 94 | 21 |
| மேல் நீதிமன்றம் | 110 | 21 | 37 |
| மாவட்ட நீதிமன்றம் மற்றும் வணிக மேல் நீதிமன்றம் | 216 | 6 | 15 |
| நீதவான் நீதிமன்றம் | 16,891 | 2,694 | 2,185 |

பின்வரும் வகையில் சட்டத் திருத்தங்களை மேற்கொள்வதற்கும் புதிய சட்டங்களை வகுப்பதற்கும் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சிற்கு ஆதரவளித்தல்.

- புதிய சட்டங்களையும் ஒழுங்கு விதிகளையும் வரைவு செய்தல்
- இன்றைய சட்ட நிலைமையை பகுப்பாய்வு செய்தல் மற்றும் உரிய அவதானிப்புகளை வழங்குதல்
- இன்றைய நிலைமை மற்றும் தேவையை ஆராய்ந்ததன் பின்னர் புதிய சட்டங்களை வகுப்பதற்காக அவதானிப்புகளை வழங்குதல்.




வரைபடம் 2.6: 2022.01.01 முதல் 2022.09.30 வரை நீதிவான் நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழங்குகள் மற்றும் தீர்க்கப்பட்டுள்ள வழக்குகள் – தொ.திணை

## 2.13 தகவல் தொடர்பாடல் நடவடிக்கைகள்

### 2.13.1 வெளியீட்டு நடவடிக்கைகள்

தொழில்துறை தொடர்பில் மக்களின் விழிப்புணர்வை மேம்படுத்துவதற்கு தொழில் திணைக்களத்தினால் பின்வரும் வெளியீடுகள் வெளியிடப்பட்டுள்ளன.

- **Prime Work சஞ்சிகை**

நிறுவனங்களில் தொழிலாளர்கள் மற்றும் தொழில்கொள்வோர் ஆகியோருக்கிடையில் தொழில்துறை பற்றிய அறிவினையும் சொல்லாடலையும் மேம்படுத்தி தொழில்துறை அமைதியை ஏற்படுத்தும் நோக்கத்துடன் 2021 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இந்த சஞ்சிகையின் மூன்றாம் இதழ் 2022 ஜூன் மாதம் Attitude எனும் கருப்பொருளின் கீழ் இலத்திரனியல் இதழாக (e-version) திணைக்களத்தின் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளக்கூடிய வகையில் வெளியிடப்பட்டது.

- **தொழில் புள்ளிவிவர வருடாந்த அறிக்கை - 2020**

தொழில் துறைக்கான கொள்கைத் திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான தரவுகளை வெளியிடுதல் மற்றும் தரவுப் பரிசீலகர்களுக்குத் தேவையான தரவுகளை வழங்கும் நோக்கத்துடன் தயாரிக்கப்படுகின்ற தொழில் புள்ளிவிவர வருடாந்த அறிக்கை - 2020 வெளியிடப்பட்டது.

### 2.13.2 திணைக்களத்தின் உத்தியோகபூர்வ சமூக ஊடக நடவடிக்கைகள்

திணைக்களத்தினால் உத்தியோகபூர்வ யூடியுப் அலைவரிசையொன்றும், முகப்புத்தக பக்கம் ஒன்றும் ட்விட்டர் கணக்கொன்றும் பேணப்பட்டு வருவதுடன் இற்றைப்படுத்தப்பட்ட தகவல்களை மக்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

| | |
|---|---|
| YouTube Channel | Subscribers: 760<br>Number of Videos included : 118 |
| Facebook Page | Followers: 2,800 |
| Twitter | Followers: 50 |

### 2.13.3 திணைக்களத்தின் இணையத்தளம்

பொதுமக்களுக்கு சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான விண்ணப்பபடிவங்கள், மாதிரி படிவங்கள் மற்றும் தொழில் கட்டளைச் சட்டங்கள், தொழில் கொள்வோரால் கவனம் செலுத்தப்பட வேண்டிய சம்பள சபை தீர்மானங்கள் போன்ற அவசியமான ஆவணங்களை பதிவிறக்கம் செய்துகொள்ளக்கூடிய வகையில் மற்றும் திணைக்களத்தின் புதிய சேவைகள், ஊடக அறிவித்தல்கள், விலைமனுக் கோரல்கள் போன்ற தகவல்களை பெற்றுக்கொள்ளக் கூடிய வகையில் labourdept.gov.lk என்னும் திணைக்கள இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளதோடு

இத்தகவல்களை நிதமும் இற்றைப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அத்துடன் திணைக்களத்திற்கென புதிய உத்தியோகபூர்வ இணையத்தளம் ஒன்றை உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு 2022 செப்டம்பர் மாதம் இறுதியில் இந்த இணையத்தளத்தின் பிரதான இடைமுகத்தின் அமைப்பினைத் தயாரிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

### 2.13.4 ஊடக நிறுவனங்களினால் ஒழுங்கு செய்யப்பட்ட பல்வேறுபட்ட நிகழ்ச்சிகளுக்காக திணைக்களத்தின் பங்கேற்பினை வழங்குதல்.

சரண டிவி ஊடகத்தின் மூலம் ஒழுங்கு செய்யப்பட்ட *காலத்ரயே கத்தாபஹ* கருத்தாடல் நிகழ்ச்சியில் 2022.07.11 ஆம் திகதி "நிர்வாக பொறுப்புகளும் தொழிலாளர் தொழில்கொள்வோரின் கடமைகளும்" என்ற தலைப்பின் கீழ் இடம்பெற்ற நிகழ்ச்சிக்கு தொழில் ஆணையாளர் நாயகத்தின் பங்கேற்பு வழங்கப்பட்டது.

உலக குழந்தை தொழிலாளர் எதிர்ப்பு தினத்திற்கு ஒருங்கமைவாக 2022.06.12 ஆம் திகதி தேசிய ரூபவாஹினி அலைவரிசையின் ஊடாக ஒளிபரப்பப்பட்ட "இரிதா ஆயுபோவன்" நிகழ்ச்சிக்கு தொழில் ஆணையாளர் நாயகம் மற்றும் தொழில் ஆணையாளர் (மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள்) ஆகியோரின் பங்கேற்பு வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியின் மூலம் குழந்தைத் தொழிலாளர்கள் தொடர்பாக விழிப்புணர்வு வழங்கப்பட்டது.

வெகுசன ஊடக அமைச்சு, தேசிய அபிவிருத்தி ஊடக நிலையத்தின் *எசதிசி பெரமக* குழு மற்றும் அரசாங்க தகவல் திணைக்களம் ஒன்றிணைந்து ஒழுங்கு செய்கின்ற *எசதிசி பெரமக* கருத்தாடல் நிகழ்ச்சியின் 2022.09.26 ஆம் திகதிய நிகழ்ச்சி "பொதுமக்கள் சேவைகளை முறைப்படுத்துவதற்காக தொழில் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ள புதிய நடவடிக்கை" என்னும் தலைப்பின் கீழ் தொழில் ஆணையாளர் (கைத்தொழில் பாதுகாப்பு) மற்றும் தொழில் ஆணையாளர் (ஊழியர் சேமலாப நிதி) ஆகியோரின் பங்கேற்பில் நடத்தப்பட்டது.

## 2.14 தொழில் திணைக்களத்தின் மனித வள அபிவிருத்தி

திணைக்களத்தின் பணியாளர்களின் தேவைகளைக் கண்டறிதல், தேவைக்கேற்ப ஆட்சேர்ப்புச் செய்தல், உத்தியோகத்தர்களின் பதவி உயர்வுகள், வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சைகளை நடத்துதல், செயலாற்றுகையை மதிப்பீடு செய்தல், சம்பள ஏற்றங்களை வழங்குதல், இடமாற்றம், உத்தியோகத்தர்களின் ஓய்வு, உத்தியோகத்தர்களின் விடுப்பு மற்றும் ஊழியர்களின் ஒழுக்க நடவடிக்கைகள் ஆகிய நாளாந்த பதவியணியின் நிர்வாகப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

மேலும், திணைக்களத்தின் முழு ஊழியர்களினதும் பயிற்சித் தேவைகளைக் கண்டறிந்து உள்ளக பயிற்சித் திட்டங்களை ஒழுங்கு செய்து நடாத்துதல், வெளி நிறுவனங்களால் நடத்தப்படும் பயிற்சிப் பாடநெறிகளுக்கு உத்தியோகத்தர்களை ஆற்றுப்படுத்துதல், சேவையின் தேவைக்கு ஏற்ப பல்கலைக்கழக பட்டங்கள் மற்றும் பட்டப்பின் படிப்புகளைப் பயில்வதற்குத் தேவையான நிதி ஒதுக்கீடுகளை வழங்குதல் மற்றும் வெளிநாட்டு பயிற்சிகளுக்கான இணைப்பாக்க நடவடிக்கைகள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. உள்ளக பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்கமைக்கும்போது, சுகாதாரப் பாதுகாப்புத் தொடர்பில் கவனம் செலுத்துதல் மற்றும் எரிபொருள் பயன்பாட்டைக் குறைப்பதற்காக Zoom ஊடகத்தின் மூலம் அந்த நிகழ்ச்சிகளை நடத்துதல் குறித்து அதிக கவனம் செலுத்தப்பட்டது.

அட்டவணை 2.7: 2022.01.01 முதல் 2022.09.30 வரை தொழில் திணைக்களத்தினால் அலுவலர்களுக்காக ஒழுங்கு செய்யப்பட்டு நடத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

| தொ. இ. | நிகழ்ச்சித்திட்டத்தின் தன்மை | நடத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கஎின் எண்ணிக்கை | பங்கேற்ற உத்தியோகத்தர் களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | வெளி தலைமைத்துவ பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | 02 | 176 |
| 2 | சேவை ஆரம்ப பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | 01 | 07 |
| 3 | விடய ரீதியான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | 06 | 409 |
| 4 | இணையவழி(Online) முறையில் நடத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | 10 | 805 |
| | **மொத்தம்** | **19** | **1,397** |

அட்டவணை 2.8: 2022.01.01 முதல் 2022.09.30 வரை தொழில் திணைக்களத்தினால் வெளி பயிற்சி நிறுவனங்களின் பயிற்சிகளுக்காக அலுவலர்களுக்கு நிதி ஒதுக்கீடுகள் வழங்கப்படுதல்

| தொ.இ. | நிகழ்ச்சித்திட்டம் | **ஒதுக்கீடுகள் வழங்கப்பட்ட உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை** |
|---|---|---|
| 1 | பட்டப்பின் படிப்பு | 05 |
| 2 | டிப்ளோமா பாடநெறிகள் | 01 |
| | **மொத்தம்** | **06** |

இதற்கு மேலதிகமாக 2022.01.01 முதல் 2022.09.30 வரை இணையவழி முறையில் (Online) பல்வேறு வெளிநாட்டு நிறுவனங்களால் ஏற்பாடு செய்யப்பட்டு நடத்தப்பட்ட 23 வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சிகளில் 45 திணைக்கள அதிகாரிகள் பங்கேற்றுள்ளனர். நீண்ட கால வெளிநாட்டு புலமைப்பரிசில்களுக்காக இரண்டு அதிகாரிகள் வெளியேறியுள்ளனர்.

## 2.15 தொழில் திணைக்களத்தின் உட்கட்டமைப்பு வசதி அபிவிருத்தி

நாடளாவிய ரீதியில் பரந்து வாழும் உழைக்கும் மக்களுக்கு மிகவும் வினைத்திறனான சேவையை வழங்குவதை நோக்கமாகக் கொண்டு, திணைக்களமானது தொழில் திணைக்களத்தின் பிரதான அலுவலகத்திலும், நாடளாவிய ரீதியில் உள்ள பிராந்திய தொழில் அலுவலகங்களிலும் உட்கட்டமைப்புகளை மேம்படுத்தும் பணியை மேற்கொண்டது. இதன்படி, புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பதுளை மற்றும் ஹட்டன் தொழில் அலுவலக கட்டிடங்கள் 2022 ஆம் ஆண்டு திறந்து வைக்கப்பட்டு அலுவலக பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

## 2.16 திணைக்களத்தின் பணிகளை மேற்பார்வையின் மூலம் இலக்குகளை நோக்கி வழிநடாத்துதல்

திணைக்களத்தின் 2022 ஆம் ஆண்டுக்கான வருடாந்த செயற்திட்டம் தயாரிக்கப்பட்டு அதன் கீழ் இலக்குகளை அடைவதற்காக திணைக்களத்தின் அனைத்து பிரிவுகள் மற்றும் பிராந்திய அலுவலகங்கள் பணியாற்றும் விதம் மற்றும் முன்னேற்றம் ஆராயப்பட்டது. அதன்படி, ஒவ்வொரு மாதமும் தொழில் ஆணையர்களின் மாதாந்தக் கூட்டம் நடத்தப்பட்டு, ஒவ்வொரு பிரிவின் முன்னேற்றம்

மற்றும் பிரிவுகளின் பணிகளை மேற்கொள்வதில் எழும் பிரச்சினைகள் குறித்து எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

மேலும், மாவட்ட மற்றும் உப தொழில் அலுவலகங்கள் அந்தந்த வருடாந்த இலக்குகளை அடைவது கண்காணிக்கப்பட்டது. இந்த பிராந்திய தொழில் அலுவலகங்களின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்வதற்கான கூட்டம் 2022.03.30 ஆம் திகதி முன்னாள் தொழில் அமைச்சர் தலைமையில் நடைபெற்றது.

## 2.17 வெளிநாட்டு வேலைவாய்ப்புத் துறையின் நிர்வாகம் மற்றும் ஒழுங்குபடுத்தல்

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் இலங்கையில் தொழிலாளர் புலம்பெயர்வுக்கான முதன்மை ஒழுங்குறுத்தல் நிறுவனமாகும். வெளிநாட்டில் வேலை தேடும் இலங்கையர்களின் அபிமானம், பாதுகாப்பு மற்றும் சமத்துவம் ஆகிய நிபந்தனைகளின் கீழ் புலம்பெயர்வை உறுதிப்படுத்துகின்ற, தொழிலாளர் புலம்பெயர்வு செயல்முறையை ஒழுங்குபடுத்துவதற்கான சட்டக் கட்டமைப்பின் கீழ் நிறுவப்பட்ட ஒரு பரந்த விடயப்பரப்பைக் கொண்ட நிறுவனமாகும்.

அட்டவணை 2.9: உரிமம் பெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கான அனுமதிப்பத்திரங்களை வழங்குதல், வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்கான கோரிக்கைகள் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்காக பதிவு செய்தல் - இ.வெ.வே.ப

| **விபரம்** | | **இலக்கு அளவு** | **உண்மையான அளவு** |
|---|---|---|---|
| வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனங்களுக்கு உரிமம் வழங்குதல் | வழங்கப்பட்ட புதிய உரிமங்களின் எண்ணிக்கை | 60 | 67 |
| | புதுப்பிக்கப்பட்ட உரிமங்களின் எண்ணிக்கை(வருடாந்த புதுப்பித்தல்கள்) | 750 | 967 |
| இலங்கையர்களை ஆட்சேர்ப்பு செய்யும் வெளிநாட்டில் அமைந்துள்ள வேலைவாய்ப்பு முகவர் மற்றும் நிறுவனங்களை பணியகத்தில் பதிவு செய்தல்/புதுப்பித்தல் | பதிவு செய்யப்பட்ட/புதுப்பிக்கப்பட்ட வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவராலயங்கள்/நிறுவனங்களின் எண்ணிக்கை(உபசரணை நாடுகளில்) | 825 | 848 |
| வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனங்களால் சமர்ப்பிக்கப்படும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஓடர்கள் மற்றும் விளம்பரங்களுக்காக அனுமதி வழங்குதல் | அங்கீகரிக்கப்பட்ட வேலைவாய்ப்பு ஓடர்களின் எண்ணிக்கை | 2,049 | 2,256 |
| | அங்கீகரிக்கப்பட்ட அறிவித்தல் ஓடர்களின் எண்ணிக்கை | 914 | 730 |
| வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்காக பதிவு செய்தல் | உரிமம் கொண்ட வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனங்களால் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பதவி வெற்றிடங்களுக்கு இலங்கையர்களை ஆட்சேர்ப்பு செய்து வெளிநாடு அனுப்புவதற்காக வழங்கப்பட்ட அனுமதிகளின் எண்ணிக்கை | 50,000 | 86,513 |
| | தனிப்பட்ட வழிகளின் மூலம் வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்காக வெளியேற பதிவு செய்யப்பட்ட புலம்பெயர் தொழிலாளர்களின் எண்ணிக்கை | 47,604 | 78,537 |

| | | | |
|---|---|---|---|
| | தனிப்பட்ட வழிகளின் மூலம் வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்காக வெளியேற பதிவினைப் புதுப்பித்த புலம்பெயர் தொழிலாளர்களின் எண்ணிக்கை | 62,800 | 62,056 |
| | வெளிநாட்டில் உள்ள தூதுக் குழு அலுவலகங்கள் ஊடாக பதிவு செய்யப்பட்ட புலம்பெயர் தொழிலாளர்களின் எண்ணிக்கை | 2,050 | 2,914 |
| | வெளிநாட்டில் உள்ள தூதுக் குழு அலுவலகங்கள் ஊடாக பதிவினை புதுப்பித்த புலம்பெயர் தொழிலாளர்களின் எண்ணிக்கை | 6,000 | 5,026 |

அட்டவணை 2.10: உரிமம் பெற்ற முகவர் நிறுவனங்கள்/ உரிமம் பெற்றிராத ஏனைய தரப்பினர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் -இ.வெ.வே.ப

| விபரம் | இலக்கு அளவு | உண்மையான அளவு |
|---|---|---|
| மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டு விசாரணைகளின் எண்ணிக்கை | 1,330 | 569 |
| தீர்க்கப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை | 800 | 733 |
| சட்ட விரோத ஆட்சேர்ப்புகள் தொடர்பில் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்ட முற்றுகைகளின் எண்ணிக்கை | 165 | 15 |
| சட்டத்தை மீறிய உரிமப்பத்திரதாரர்/ உரிமப்பத்திரதாரர் அல்லாத தரப்பினருக்கு எதிராக நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குளின் எண்ணிக்கை | 200 | 126 |
| சட்டத்தை மீறிய உரிமப்பத்திரதாரர்/ உரிமப்பத்திரதாரர் அல்லாத தரப்பினருக்கு எதிராக நீதிமன்றத்தில் தொழில் நியாய சபையில் முன்னிலையான தவணைகளின் எண்ணிக்கை | 3,000 | 2,714 |

அட்டவணை 2.11: மனித வியாபாரத்திற்கு எதிரான செயற்பாடுகள் மற்றும் புலம்பெயர் தொழிலாளர்களிடமிருந்து அல்லது அவர்கள் சார்பாக கிடைக்கும் முறைப்பாடுகளை தீர்த்தல் - இ.வெ.வே.ப

| விபரம் | | இலக்கு அளவு | உண்மையான அளவு |
|---|---|---|---|
| புலம்பெயர் தொழிலாளர்களிடமிருந்து அல்லது அவர்களின் சார்பாக கிடைத்துள்ள முறைப்பாடுகளை விசாரித்தல் | கிடைத்துள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை | 8,475 | 3,274 |
| | தீர்க்கப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை | 5,905 | 3,195 |
| தொழில்முயற்சி பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குரியதாக கிடைத்த முறைப்பாடுகளைத் தீர்த்தல் | கிடைத்துள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை | 433 | 552 |
| | தீர்க்கப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை | 433 | 119 |
| மனித வியாபாரத்திற்குரிய முறைப்பாடுகள் | கிடைத்துள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை | 15 | 14 |

## 2.18 வெளிநாட்டு வேலைவாய்ப்புத் துறையின் மேம்பாடு

### 2.18.1 இணையவழி தொழில் வங்கி

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தால் பேணப்பட்டு வருகின்ற இணையவழி தொழில் வங்கியில் பதிவு செய்துகொள்வதற்கு வெளிநாட்டு வேலைவாய்ப்புகளை எதிர்பார்க்கும் நபர்களுக்கு வசதி செய்யப்பட்டுள்ளது. வெளிநாட்டு வேலை தேடுபவர்கள் பணியகத்தின் இணையத்தளத்தின் ஊடாக நேரில் பதிவு செய்துகொள்ளலாம் என்பதோடு தலைமை அலுவலகம் மற்றும் மாகாண அலுவலகங்கள் மூலமாகவும் பதிவு செய்துகொள்ளலாம். தொழில் வங்கிக்கு விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்ட நாளிலிருந்து அதிகபட்சமாக 2 ஆண்டுகளுக்கு இது செல்லுபடியாகும். இந்த தொழில் வங்கியின் மூலம், வெளிநாட்டு வேலைவாய்ப்புகளை வழங்குபவர்கள் மற்றும் உரிமம் பெற்ற வேலைவாய்ப்பு முகவர்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அபேட்சகர்களைக் கண்டறிய வசதி வழங்கப்படுகிறது.



புகைப்படம் 2-4 புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் குழந்தைகளுக்கான பகல்நேர பராமரிப்பு நிலையங்களை நிறுவுவது பற்றிய கலந்துரையாடல்

அட்டவணை 2.12: தொழில் வங்கி ஊடாக தொழில் அபேட்சகர்களைப் பதிவு செய்தல் -இ.வெ.வே.ப

| விபரம் | இலக்கு அளவு | உண்மையான அளவு |
|---|---|---|
| பதிவு செய்யப்பட்ட அபேட்சகர்களின் எண்ணிக்கை | 4,500 | 27,506 |
| பதிவு செய்யப்பட்ட அபேட்சகர்களுக்கு மத்தியில் வேலைக்காக வெளிநாடு சென்ற எண்ணிக்கை | - | 3,994 |

அட்டவணை 2.13: இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தினால் வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்காக ஆட்சேர்க்கப்படுதல் -இ.வெ.வே.ப

| நாடு | விபரம் | இலக்கு அளவு | உண்மையான அளவு |
|---|---|---|---|
| தென் கொரியா | சாதாரண உரிம முறையின் கீழ் வெளிநாடு சென்ற நபர்களின் எண்ணிக்கை | 2,250 | 2,572 |
| | தங்கள் முந்தைய பணியிடத்திற்கே மீண்டும் சென்றவர்களின் எண்ணிக்கை | 750 | 612 |
| | விசேட உரிம முறையின் கீழ் வெளிநாடு சென்ற நபர்களின் எண்ணிக்கை | 567 | 275 |
| ஜப்பான் | தொழில்நுட்ப பயிலுநர் பாடநெறியின் (TITP) கீழ் வேலைக்குச் சென்ற நபர்களின் எண்ணிக்கை. | 150 | 123 |
| இஸ்ரேல் | பராமரிப்பாளர் வேலைவாய்ப்புகளுக்காக சென்ற நபர்களின் எண்ணிக்கை | 350 | 135 |

அட்டவணை 2.14: வெளிநாட்டு வேலைவாய்ப்பு மேம்பாட்டு நிகழ்ச்சிகளை நடாத்துதல் -இ.வெ.வே.ப

| விபரம் | | இலக்கு அளவு | உண்மையான அளவு |
|---|---|---|---|
| வெளிநாட்டு வேலைவாய்ப்பு அபேட்சகர்களையும் பொது மக்களையும் விழிப்பூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் | பங்கேற்றவர்களின் எண்ணிக்கை | 7,515 | 9,263 |
| | நடத்தப்பட்ட விழிப்பூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | 135 | 126 |
| வெளிநாட்டு வேலைவாய்ப்பு அபேட்சகர்களையும் பொது மக்களையும் விழிப்பூட்டும் நடமாடும் சேவைகளை நடாத்துதல் | பங்கேற்றவர்களின் எண்ணிக்கை | 1,800 | 26,583 |
| | நடத்தப்பட்ட நடமாடும் சேவைகளின் எண்ணிக்கை | 18 | 99 |

### 2.18.2 வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கான அழைப்புகள்/வெற்றிடங்கள் மற்றும் விளம்பரங்களை பணியகத்தின் இணையத்தளத்தின் வெளியிடுதல்

உரிமம் கொண்டுள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனங்களுக்கு கிடைத்துள்ள அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஓடர்கள் மற்றும் அது பற்றிய வர்த்தக விளம்பரங்களை இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில்(www.slbfe.lk) வெளியிடுவதற்கு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

### 2.19. தொழில்சார் வழிகாட்டல், உழைப்புச் சந்தை பற்றிய தகவல்களைப் பேணிவருதல் மற்றும் பொது வேலைவாய்ப்பு சேவை நடவடிக்கைகள்

நாட்டின் மனித வள அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவம் என்பவற்றுக்காக மனிதவலு மற்றும் வேலைவாய்ப்பு திணைக்களத்தினால் பல்வேறுபட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

**2.19.1 தொழில்சார் வழிகாட்டல் நடவடிக்கைகள்**

நாட்டின் மனித வளத்தின் முழுமையான பலத்தினை வினைத்திறன் மிக்க வகையிலும் ஆக்க விளைவுடனும் பயன்படுத்தி உள்நாட்டு வெளிநாட்டு தொழில் சந்தைக்கு ஏற்ற மனித வளத்தை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டு தொழில்சார் வழிகாட்டல் சேவைகள் வழங்கப்படுகின்றன. இந்த தொழில்சார் வழிகாட்டல் நிகழ்ச்சித் திட்டங்களுக்கு உற்றறி பண்பாற்றல் பரீட்சைகள், உளச்சார்பு பரீட்சைகள், எழுத்துமூல மற்றும் செய்முறை பரீட்சைகள், நேர்முகப் பரீட்சைகள், பல்வேறான அவதானிப்பு பரீட்சைகள் ஆகிய கருவிகள் பயன்படுத்தப்படும். இந்த தொழில்சார் வழிகாட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் தனிநபர், குழுக்கள் மற்றும் குழுமங்கள் என்ற வகையில்கொண்டு தனிநபர் ஆலோசனை மற்றும் வழிகாட்டல், அடிப்படை விழிப்பூட்டல், செயலமர்வுகள், செய்முறை செயற்பாடுகள் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன.

அட்டவணை 2.15: தொழில்சார் வழிகாட்டல் நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம் - மனி.மற்றும் வே.திணை

| | நிகழ்ச்சித்திட்டம் | நேருக்கு நேர் (பௌதீக) நடத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களி எண்ணிக்கை | இணையவழி ஊடாக நடத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களி எண்ணிக்கை | பங்கேற்ற மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 01 | 9 ஆம் வகுப்பு பாடசாலை மாணவர்களை விழிப்பூட்டுதல் | 1,134 | 42 | 31,587 |
| 02 | சாதாரண தர பாடசாலை மாணவர்களை விழிப்பூட்டுதல் | 1,631 | 103 | 43,353 |
| 03 | உயர்தர பாடசாலை மாணவர்களை விழிப்பூட்டுதல் | 713 | 28 | 21,913 |
| | மொத்தம் | **3,478** | **173** | **96,853** |

**Life Talk நிகழ்ச்சி**

Life Talk நிகழ்ச்சி என்பது Zoom தொழில்நுட்பத்தையும் சமூக ஊடகங்களையும் பயன்படுத்தி பெற்றோர், ஆசிரியர்கள், இளைஞர் யுவதிகள், சுய தொழிலாளர்களை விழிப்பூட்டல் மற்றும் தொழில்சார் வழிகாட்டல் பற்றிய அறிவினை வழங்கும் இணையவழி மூலமான நிகழ்ச்சியாகும். இந்த நிகழ்ச்சியானது 2022 ஜனவரி மாதம் தொடக்கம் வாரத்தின் ஒவ்வொரு தினமும் மு.ப. 8.00 மணி தொடக்கம் 9.00 மணி வரை தேசிய மட்டத்தில் பிரசித்தமான துறை சார்ந்த வல்லுநர்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டது. 2022 செப்டம்பர் மாதத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்ட தமிழ் மொழிமூல நிகழ்ச்சிகள் டிசம்பர் மாதம் இறுதிவரை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதோடு 2022 செப்டெம்பர் 30 ஆம் திகதியில் 23,688 பயனாளிகளை இணைத்துக்கொண்டு 70 நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளன.

**2.19.2 தொழில் சந்தை பற்றிய தகவல்களை சேகரித்தல், பகுப்பாய்வு செய்தல் மற்றும் விநியோகித்தல்**

இலங்கையில் சமகால மற்றும் அபிவிருத்தி தேவைகளுக்கு ஏற்றவகையில் தொழில் சந்தை ஆராய்ச்சிகளையும் ஆய்வுகளையும் நடாத்துதல், சந்தை வாய்ப்புகளை அறிமுகப்படுத்துதல், தொழிலாளர்களுக்கான கேள்வி மற்றும் நிரம்பல் தொடர்பாக பயில்தல் மற்றும் அத் தகவல்களை விநியோகித்தல் இதன் நோக்கமாகும். தேசிய தொழில் சந்தை தொடர்பில் வினைத்திறன்மிக்கதும் ஆக்கவிளைவுடன்கூடியதுமான தீர்மானங்களை மேற்கொள்வதற்காகவும், கொள்கை வகுத்தல் நடவடிக்கைகளுக்காகவும், கல்வித்துறையின் கல்வி நிகழ்ச்சித் திட்டங்கள், பயிற்சி மற்றும் திறன் மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்ட வகுப்பாளர்களுக்கும் தேவையான தொழில் சந்தை பற்றிய தகவல்களைப் பயன்படுத்துவதற்கு இலகுவான வகையில் சகல தரப்பினருக்கும் தகவல்கள் வழங்கப்படுகின்றன.

அதன்படி, தொழில் சந்தை தகவல்கள் மற்றும் ஆராய்ச்சி அலகினால் மேற்கொள்ளப்படுகின்ற மூளைச்சலவை அமர்வுகள்/கற்கைகள் கீழே தரப்பட்டுள்ளன.

**I. மூளைச்சலவை அமர்வுகள்**

1. சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகள் - Small and Medium Enterprises
2. தொழில்சார் பயிற்சி - Vocational Training
3. வெளிநாட்டு வேலைவாய்ப்புச் சந்தை - Foreign Job Market
4. சுயதொழில் வாய்ப்புகள் - Self-Employment
5. சுற்றுலாத்துறை அபிவிருத்தி இயலுமைகள்- Tourism Development Possibilities
6. பசுமை தொழில்கள் - Green Jobs
7. இளைஞர் வேலைவாய்ப்புகள் மீது மனோபாவ விடயங்களின் தாக்கம் - Attitudinal Context of Youth and Employability in Sri Lanka

**II. சம்பவக் கற்கைகள்**

1. திசு வளர்ப்பு மற்றும் மலர்கள் வியாபாரமாக
2. மெல்லிழை பீர்க்கங்காய் சார்ந்த உற்பத்திகள்
3. துரியன் சார்ந்த உற்பத்திகள்
4. நீல காக்கணம் சார்ந்த உற்பத்திகள்
5. அலங்கார செடிகள் உற்பத்தி
6. யோகா கல்வி ஒரு வணிகமாக
7. இணையவழி வணிகம் (ஆடை உற்பத்தி)

**2.19.3 பொது வேலைாவய்ப்புச் சேவை நடவடிக்கைகள்**

இலங்கை தொழிற் படைக்கு தனியார் துறையில் பயனுள்ள தொழில் வாய்ப்புகளை வினைத்திறன் மிக்க வகையில் வழங்குவதை நோக்கமாகக் கொண்டு மாவட்ட மற்றும் பிரதேச செயலக பிரிவு மட்டங்களில் தொழில் அபேட்சகர்களைப் பதிவு செய்தல் (நேரடியாகவும் இணையவழி ஊடாகவும்), தனியார் துறை நிறுவனங்களைப் பதிவுசெய்தல் மற்றும் அதன்மூலம் அந்த நிறுவனங்களில் காணப்படுகின்ற வெற்றிடங்களுக்கு தொழில் அபேட்சகர்களை ஆற்றுப்படுத்துதல் மேற்கொள்ளப்படுகின்றது. 2022.01.01 ஆம் திகதி தொடக்கம் 2022.09.30 தாம் திகதிவரை மேற்கொள்ளப்பட்ட சேவைகளின் முன்னேற்றம் கீழே தரப்பட்டுள்ளது.

அட்டவணை 2.16: பொது வேலைவாய்ப்புச் சேவை நடவடிக்கைகளின் முன்னேற்றம் - மனி.மற்றும் வே.திணை

| | | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | தொழில் அபேட்சகர்களைப் பதிவு செய்தல் | 41,780 |
| 2 | பதவி வெற்றிடங்களைப் பதிவு செய்தல் | 25,781 |
| 3 | தொழில் அபேட்சகர்களை தொழில்வாய்ப்புகளுக்காக ஆற்றுப்படுத்துதல் | 25,803 |
| 4 | தொழில் அபேட்சகர்களை தொழில்களில் ஈடுபடுத்துதல் | 7,445 |
| 5 | தொழில்முயற்சியாளர்களையும் சுயதொழிலாளர்களையும் உருவாக்குதல் | 1,774 |

### 2.19.4 ஏனைய நிகழ்ச்சித்திட்டங்கள்

1. 2022 ஆம் ஆண்டில் சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ILO) நிறுவனத்துடன் 02 கருத்திட்டங்களும், தென்கொரிய அரசின் KEIS நிறுவனத்துடன் ஒரு கருத்திட்டமும் இணைப்பாக்கம் செய்யப்பட்டு வருகின்றன. இதற்கு மேலதிகமாக உலகளாவிய ரீதியில் காணப்படுகின்ற தொழில் சந்தை மற்றும் எதிர்கால தொழில் வாய்ப்புகள் தொடர்பாக தொழில்சார் வழிகாட்டல் உத்தியோகத்தர்களை விழிப்பூட்டுவதும் ஜப்பான் நாட்டின் தொழில் வாய்ப்புகளுக்கு இளைஞர் யுவதிகளை ஆற்றுப்படுத்துவது தொடர்பில் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்துடன் தொடர்புகள் பேணப்படுவதும் மேற்கொள்ளப்படுகின்றது.

2. இலங்கையில் மனிதவள அபிவிருத்தி நடவடிக்கைகளையும் இலங்கையர்களுக்கு கண்ணியமான மற்றும் பயனுள்ள தொழில் வாய்ப்புகளை வழங்குவதற்கு அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகளையும் கட்டுப்படுத்தும் முழுமையான கொள்கைச் சட்டகமாகிய தேசிய மனித வள மற்றும் வேலைவாய்ப்புக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட பணிகள்,

   I. தற்போது அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ள தேசிய மனித வளங்கள் மற்றும் வேலைவாய்ப்புக் கொள்கையை நடைமுறைப்படுத்துதல் மற்றும் தேவையான திருத்தங்களை மேற்கொள்வதற்காக மனிதவள அபிவிருத்தி தேசியப் பேரவையுடன் ஒன்றிணைந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. (இதற்கு உரியதாக தற்போது 12 அமைச்சுகள் மற்றும் நிறுவனங்களுடன் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு நேர்கோட்டு அமைச்சு மற்றும் பொதுநிர்வாக அமைச்சிற்கு 2 எண்ணக்கரு பத்திரங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.)

   II. மனிதவள வேலைவாய்ப்புக் கொள்கையின் கீழ் ஒவ்வொரு துறைகளின் மேம்பாட்டுடன் தொடர்புடைய ஏனைய நிறுவனங்களுக்கு விதப்புரைகளையும் முன்மொழிவுகளையும் சமர்ப்பித்தல். (அரச ஊழியர்களை சம்பளமற்ற விடுமுறையின் அடிப்படையில் வெளிநாடுகளுக்கு அனுப்புதல், அலுவலக நடவடிக்கைகளுக்காக கடதாசி பாவிப்பதை குறைத்தல், வலுசக்தி பாதுகாப்புக்குரிய அரச நிறுவனங்களில் கலப்பு வேலை முறையைப் பயன்படுத்துதல் போன்ற பல முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.


   III. இலங்கையில் மகளிர் உழைப்பாளர் படையின் பங்களிப்பினை உயர்த்துவதற்காக சம்பந்தப்பட்ட நிறுவனங்களோடு கலந்துரையாடல்கள் நடத்தப்படுதல் மற்றும் உயிரோட்டமான வகையில் பங்களிப்பு நல்குதல்.

## 2.20 மிகச் சிறந்த தொழில் உறவுகளுக்காக முத்தரப்பு பங்காளர்களை விழிப்புணர்வூட்டுதல்

### 2.20.1 தொழில் சட்டம், தொழில் உறவுகள் மற்றும் மனித வள அபிவிருத்தி பற்றிய கல்வி


தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம் அதன் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக தொழில் சட்டம், தொழில் உறவுகள், மனிதவள முகாமைத்துவம் மற்றும் வேலைத்தள ஆக்கத்திறன் ஆகிய மூன்று பிரதான துறைகளின் ஊடாக பாடநெறிகளை நடத்துகின்றது. அத்தோடு தரமான சேவையை அரச மற்றும் தனியார் துறை தொழிலாளர்களுக்கு வழங்குவதற்காக மேற்படி பாடநெறிகளை மூன்று மொழி மூலங்களிலும் மேற்கொள்வதற்கு நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது. டிப்ளோமோ மற்றும் குறுகியகால பாடநெறிகள், சான்றிதல் பாடநெறிகள், பயிற்சிகள் மற்றும் செயலமர்வுகள் என்ற வகையில் இப் பாடநெறிகள் நடாத்தப்படுகின்றன.

2022 ஜனவரி மாதம் தொடக்கம் செப்டெம்பர் மாதம் வரை பயிற்சி நடவடிக்கைகளின் மூலமான வருமானம்




வரைபடம் 2.7: தேசிய தொழில் கற்கைகள் நிறுவகத்தின் பயிற்சி நடவடிக்கைகளின் வருமானம்

2022 ஜனவரி மாதம் தொடக்கம் செப்டெம்பர் மாதம் வரை மேற்கொள்ளப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் பிரகாரம் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கான மொத்த வருமானம்




வரைபடம் 2.8: நடத்தப்பட்ட பாடநெறிகளின் பிரகாரம் பயிற்சி நடவடிக்கைகளின் மொத்த வருமானம் தே.தொ.க.நி

அட்டவணை 2.17 : தேசிய தொழில் கற்கைகள் நிறுவகத்தின் முன்னேற்றம்

| விபரம் | மதிப்பீடு செய்யப்பட்ட தொகை (ரூ. 000') | | | 2022.09.30 திகதியில் உண்மையான பெறுமதி (ரூ. 000') |
|---|---|---|---|---|
| | ஆண்டுக்காக | | 2022.09.30 ஆம் திகதியில் | |
| வருமானம் | | **35,641** | **28,633** | **17,683** |
| **NILS** ஈட்டல்கள் | | | | |
| பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | 23,141 | | 19,508 | 11,898 |
| பரீட்சைகள் | 9,000 | | 6,500 | 2,725 |
| முதலீட்டு வருமானம் | 3,500 | | 2,625 | 3,060 |
| | | | | |
| திறைசேரி ஒதுக்கீடுகள் | | **20,100** | **16,350** | **9,189** |
| மீண்டெழும் | 15,000 | | 11,250 | 6,918 |
| மூலதன | 5,100 | | 5,100 | 2,271 |
| | | | | |
| மொத்த வருமானம் | | **55,741** | **44,983** | **26,872** |
| | | | | |
| செலவினம் | | **31,470** | **20,980** | **16,926** |
| | | | | |
| மிகை / பற்றாக்குறை | | **24,271** | **24,003** | **9,946** |

### 2.20.2 தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தை முன்னேற்றுதல்

சேவை நிலையங்களில் இடம்பெறுகின்ற தொழில்சார் விபத்துகளைக் குறைப்பதற்காக தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவனம் (NIOSH) தொழில்சார் பாதுகாப்பு உத்தியோகத்தர்களை பயிற்றுவிப்பதற்காக டிப்ளோமா பாடநெறிகள், சான்றிதழ் பாடநெறிகள் மற்றும் தொழில்சார்பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு தொடர்பில் பல்வேறுபட்ட பாடநெறிகளை நடத்துவதோடு வேலைத்தளத்தில் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பில் சுற்றாடல் அளவீடுகளைப் பெற்றுக்கொள்வதோடு ஆபத்துகளை இனங்காண்பதற்காக மதிப்பீடுகளை மேற்கொள்கின்றது. நிறுவனத்தினால் 2022 செப்டம்பர் மாதம் 30ஆம் திகதி வரை மேற்கொள்ளப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்றம் கீழே தரப்பட்டுள்ளது.

அட்டவணை 2.18 : தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் - தே.தொ.பா. மற்றும் சு.நி

| | பாடநெறி | நடத்தப்பட்ட பாடநெறிகளின் எண்ணிக்கை | பங்கேற்வர்களின் எண்ணிக்கை | நிதி முன்னேற்றம் (ரூ.மி) |
|---|---|---|---|---|
| 01 | தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய டிப்ளோமா பாடநெறி (சிங்கள மற்றும் ஆங்கில மொழி மூலம்) | 5 | 117 | 9.15 |
| 02 | தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய சான்றிதழ் பாடநெறி | 4 | 52 | 2.42 |
| 03 | தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய அடிப்படை பாடநெறி | 2 | 20 | 0.30 |
| 04 | நிறைவேற்றுத் துறை அலுவலர்களுக்கான பாடநெறி | 1 | 10 | 0.21 |
| 05 | கொழும்பு மாநகர சபை ஊழியர்களுக்கான ஒரு நாள் பயிற்சி | 6 | 600 | 3.00 |
| 06 | ப்ரென்டிக்ஸ் நிறுவனத்தின் தாதியர்களுக்கான மூன்றுநாள் பயிற்சி | 1 | 31 | 0.32 |
| 07 | உயரமான இடங்களில் பணியாற்றுதல் சம்பந்தமான பயிற்சி | 1 | 25 | 0.30 |

மீளாய்வு ஆண்டில் நிறுவனத்தினால் 127 சுற்றாடல் அளவீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு 10 மருத்துவ கிளினிக்குள் நடத்தப்பட்டுள்ளன என்பதுடன் 0.85 மி.ரூபா வருமானம் ஈட்டப்பட்டுள்ளது.


### 2.21 நிருவாக மற்றும் தாபன செயற்பாடுகள்

வேலையாளர் நட்டஈட்டு ஆணையாளர் அலுவலகம், பணியின் போது காயமடையும் தொழிலாளர்கள், தொழில் சார்ந்த நோய்களால் பாதிக்கப்படுபவர்கள் மற்றும் பணியிட விபத்துகளால் இறக்கும் தொழிலாளர்களை சார்ந்திருப்பவர்களுக்கு இழப்பீடு வழங்குகிறது. பதிவாகியுள்ள விபத்துகளின் எண்ணிக்கை மற்றும் இழப்பீடுகள் செலுத்தப்பட்டுள்ள எண்ணிக்கை பின்வருமாறு.




புகைப்படம் 2-5 தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய தேசிய மாநாடு

### 2.21.1 பதிவாகியுள்ள மரணத்தை ஏற்படுத்தும் மற்றும் மரணத்தை ஏற்படுத்தாத விபத்துக்களின் எண்ணிக்கை




வரைபடம் 2.9: பதிவாகிய மரணத்தை ஏற்படுத்தும் விபத்துகளின் எண்ணிக்கை




வரைபடம் 2.10: பதிவாகிய மரணத்தை ஏற்படுத்தாத விபத்துகளின் எண்ணிக்கை

### 2.21.1 நட்டஈடு செலுத்தும் நடவடிக்கைகளின் முன்னேற்றம்

அட்டவணை 2.19 : நட்டஈடு செலுத்தல் நடவடிக்கைகளின் முன்னேற்றம் -வே.நட்டஈட்டு.ஆணை.அலு

| பணி | முன்னேற்றம் |
|---|---|
| முறையாக பதிவு செய்யப்பட்ட விபத்தக்களின் எண்ணிக்கை | 243 |
| விசாரணைக்கு எடுக்கப்பட்ட கடிதக்கோப்புகளின் எண்ணிக்கை | 1,373 |
| நடவடிக்கைகள் முடிக்கப்பட்ட நட்டஈட்டு விண்ணப்பப்படிவங்களின் எண்ணிக்கை | 262 |
| பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தங்களின் எண்ணிக்கை | 55 |
| உயிர்ச் சேத விபத்துக்கள் தொடர்பில் நட்டஈடாக அறவிடப்பட்ட தொகை(ரூ.மி) | 100.43 |
| மரணத்தை ஏற்படுத்தாத விபத்துகளுக்காக நீதிமன்ற கட்டளைகளின் பிரகாரம் தொழில்கொள்வோர் தொழிலாளர்களுக்குச் செலுத்தியுள்ள நட்டஈட்டுத் தொகையின் அளவு (ரூ.மி) | 26.40 |
| பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தங்களின் பிரகாரம் மரணத்தை ஏற்படுத்தாத விபத்துகளுக்காக தொழிலாளர்களுக்குச் செலுத்தப்பட்டுள்ள நட்டஈட்டுத் தொகையின் அளவு (ரூ.மி) | 7.70 |
| உயிர்ச் சேத விபத்துக்கள் தொடர்பில் நட்டஈடாக அறவிடப்பட்டு பராய வயதை அடையாத தங்கிவாழ்வோரின் சேமிப்புக் கணக்குகளில் வைப்புச் செய்யப்பட்டுள்ள பணத் தொகைகள் (ரூ.மி) | 14.85 |
| பராய வயதை அடையாதவர்கள் சார்பாக திறக்கப்பட்டுள்ள கணக்குகளின் எண்ணிக்கை | 82 |
| பராயமடையாதோர் 18 வயதைப் பூர்த்தி செய்ததன் பின்னர் விடுவிக்கப்பட்ட கணக்குகளின் எண்ணிக்கை | 139 |
| விடுவிக்கப்பட்ட பராயமடையாதோர் கணக்குகளிலிருந்து செலுத்தப்பட்ட தொகை (ரூ.மி) | 23.61 |

## 2.22 அரச மற்றும் தனியார் துறையின் உற்பத்தித்திறனை மேம்படுத்துதல்

இலங்கையின் அரச மற்றும் தனியார் துறைகளில் மிகவும் திறமையான மற்றும் தரமான சேவைகளை வழங்குவதற்காக தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தினால் உற்பத்தித்திறன் ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. ஆண்டுதோறும், அரச, கல்வி, சேவைகள் மற்றும் உற்பத்தி, சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகள் மற்றும் சமுதாயத் துறைகளை உற்பத்தித்திறன் எண்ணக்கருக்களின் மூலம் வளர்ப்பதற்காக பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் நாடு முழுவதும் செயல்படுத்தப்படுவதோடு ஆசிய உற்பத்தித்திறன் அமைப்பின் (APO) நிலையான ஒத்துழைப்பின் மூலம் ”அறிவை மையமாகக் கொண்ட சமூகத்தை” உருவாக்கத் தேவையான சூழல் உருவாகியுள்ளது.

சேவைபெறுநர்கள் நிறுவன வளாகத்தில் தங்கியிருக்கும் காலப்பகுதியை குறைப்பதற்காக பொருத்தமான வழிமுறைகளை உருவாக்குவதும் அதனூடாக நிறுவனம்சார் வினைத்திறன் மற்றும் ஆக்க விளைவினை மேம்படுத்துவதும், மகிழ்ச்சிகரமான மற்றும் வினைத்திறன் மிக்க பாவனையாளர் சேவை செயல்முறைகளை மேம்படுத்துவதற்காக தற்போது பயன்படுத்தப்படுகின்ற பாவனையாளர் சேவைகள் செய்முறைகளை பகுப்பாய்வு செய்தல், பாவனையாளர்களினதும் ஊழியர்களினதும் திருப்தி பற்றிய கணக்கெடுப்பினை மேற்கொள்ளல், மேல்மட்ட முகாமைத்துவம் மற்றும் பணியாட்டொகுதியுடன் கலந்துரையாடல் மற்றும் செயன்முறை திருத்தங்கள் உள்ளடங்கிய அறிக்கை ஒன்றை மேல்மட்ட முகாமைத்துவத்திற்கு சமர்ப்பிப்பதன் மூலம் உரிய முன்னேற்றங்கள் மேற்கொள்ளப்படும். 2021.01.01 தொடக்கம் 2021.09.30 வரையான காலப்பகுதியில் நிறுவனத்தின் முன்னேற்றம் பின்வருமாறு அமைகின்றது.

2.22.1 செயற்பாட்டுத் திட்டத்தின் நடவடிக்கைகளுக்கான முன்னேற்றம்.

அட்டவணை 2.20: நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம் - தே.உ.செ

| பிரதான செயற்பாடுகள் | **நிதி(ரூ.மி)** | | | பௌதீக | | |
|---|---|---|---|---|---|---|
| | மதிப். | உண்மையான செலவு | % | இலக்கு | முன்னேற்றம் | % |
| பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | | | | | | |
| • உற்பத்தித்திறன் டிப்ளொமா பாடநெறிகள் | 0.29 | 0.29 | 100% | 10 | 10 | 100% |
| ஏனைய பயிற்சி நிகழ்ச்சிதிட்டங்கள் | 1.21 | 0.8 | 66% | 45 | 45 | 100% |
| 5S சான்றிதழ் நிகழ்சித்திட்டம் | 0.15 | 0.053 | 34.7% | 31 | 25 | 81% |
| உற்பத்தித்திறன் மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் • அரச, கல்வி, சேவைகள் மற்றும் உற்பத்தித் துறைகள் • அறநெறி பாடசாலைகள் மற்றும் பிரிவேனாக்கல் | 0.42 | 0.38 | 90% | 407 | 375 | 92% |
| சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் | 3.6 | 2.6 | 72% | 86 | 36 | 42% |
| ஆசிய உற்பத்தித்திறன் அமைப்புடன் இணைந்து நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் - ஆற்றல் விருத்தி தொடர்பான நிகழ்ச்சித்திட்டங்கள் | 0 | 0 | 0% | 85 | 108 | 127% |

### 2.22.2 தேசிய உற்பத்தித்திறன் போட்டி மற்றும் விருது வழங்கும் விழா

1,252 நிறுவனங்கள் தேசிய உற்பத்தித்திறன் போட்டி - 2020ஐ வென்றுள்ளதோடு விருது வழங்கும் விழா 2022 ஆம் ஆண்டின் 4வது காலாண்டில் நடைபெற உள்ளது.



புகைப்படம் 2-6 தேசிய உற்பத்தித்திறன் விருது வழங்கும் விழா - தென் மாகாணம்

## 2.23 தொழிலாளர் சமுதாயத்தினருக்கு நலனோம்பல் நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்

### 2.23. தொழிலாளர்களின் நலனோம்பல்

தொழிலாளர் சமூகத்தின் வாழ்க்கை நிலைமைகளை மேம்படுத்துவதற்காக சிரம வாசனா நிதியம் நலனோம்பல் நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துகிறது. இதன் கீழ், சிரம வாசனா நிதியம் நாடு முழுவதும் கண் சிகிச்சை முகாம்கள், மருத்துவ முகாம்கள், இறந்த ஊழியர்களின் குடும்பங்களின் பாடசாலை மாணவர்களுக்கு புலமைப்பரிசில்கள், பாடசாலை உபகரணங்கள், வாழ்வாதாரத்திற்கான தொழில்நுட்பக் கல்வி மற்றும் பிற நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துகிறது.

**I. விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள்**

தொழிலாளர்கள், பணிப்பெண்கள் மற்றும் நிறுவன உரிமையாளர்களுக்கு தொழில் சட்டங்கள் தொடர்பில் எழும் சிக்கல்கள் சம்பந்தமாக தெளிவுபடுத்தும் நோக்கத்துடன் துறையில் அனுபவம் வாய்ந்த வளவாளர்கள் மூலம் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. இந்தத் திட்டங்களின் மூலம் நிறுவனங்களில் தொழில்துறை அமைதியை உருவாக்கவும், தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மூலம் தொழிற்சாலை விபத்துகளைக் குறைக்கவும் முடிந்தது. அதன்படி, 2022 ஜனவரி முதல் செப்டெம்பர் மாதம் வரையான காலப்பகுதியில் இலங்கையின் பல்வேறு பகுதிகளில் 23

விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு, சுமார் 970 ஊழியர்கள் அறிவூட்டப்பட்டுள்ளதோடு இதற்காக சுமார் 500,000.00 ரூபாய் செலவிடப்பட்டது.

**II. புலமைப் பரிசில் நிகழ்ச்சித்திட்டம்**

இலங்கையில் தொழிற்சாலைகளில் விபத்துக்களால் இறந்த அல்லது முற்றாக ஊனமுற்ற பாட்டாளி மக்களின் குழந்தைகளுக்காக இந்த நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. முன்பள்ளிக் கல்வி முதல் பல்கலைக்கழகக் கல்வி வரை அதாவது 3-25 வயதிற்குட்பட்ட பிள்ளைகள் இதற்குத் தகுதியுடையவர்களாக இருப்பதோடு அந்தப் பிள்ளைகளுக்கு நிலையான வைப்புத் தொகையாக ரூ.50,000.00 மற்றும் கல்வி உபகரணங்கள் வழங்கப்படுகின்றன. நாட்டில் தற்போது நிலவும் சூழ்நிலை காரணமாக புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்ச்சியொன்றாக நடத்தவில்லை என்பதோடு பயனாளிகளுக்கு பாடசாலை உபகரணத் தொகுதிகளைக் கொள்வனவு செய்வதற்கான பணம் கணக்குகளில் வரவு வைக்கப்பட்டு அவர்களுக்கு நிலையான வைப்புச் சான்றிதழ் வழங்கப்பட்டது. மீளாய்வுக் காலப்பகுதியில் 51 பயனாளிகளுக்கு ரூ.2,761,232.00 செலவில் மரண விபத்து புலமைப்பரிசில் நிகழ்ச்சித்திட்டம் நடத்தப்பட்டுள்ளது.

**III. நலனோம்பல் நிகழ்ச்சித்திட்டங்கள்**

- **பாடசாலைப் புத்தகங்கள் மற்றும் உபகரணங்களை வழங்குதல்**

தொழிலாளர் நலனை மேம்படுத்தும் நோக்கத்துடன், குறைந்த வருமானம் கொண்ட உழைக்கும் குடும்பங்களின் குழந்தைகளுக்கு பாடசாலைப் புத்தகங்கள் மற்றும் உபகரணங்கள் விநியோகிக்கப்படுகின்றன.

அட்டவணை 2.21 சிரம வாசனா நிதியத்தினால் பாடசாலைப் புத்தகங்களும் உபகரணங்களும் வழங்கப்படுதல்

| விபரம் | பயனாளிகளின் எண்ணிக்கை | மொத்த செலவு ரூ. |
|---|---|---|
| வெலிஓயா சம்பத் நுவர (சில பாடசாலைகள்) | 103 | 557,080/= |
| ஹசலக்க மினிப்பே தேவானந்த வித்தியாலயம் | 289 | 1,513,810/= |
| கஹட்டகஸ்திகிலிய மிமின்னாவல வித்தியாலயம் | 97 | 514,192/= |
| மொத்தம் | **489** | **2,585,082** |

- **துப்பரவேற்பாட்டுக் கருத்திட்டங்கள்**

தொழிலாளர் குடும்பங்களின் சுகாதார வசதிகளை மேம்படுத்தும் வகையில் பதுளை பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் புதிதாக 200 துப்பரவேற்பாட்டு மலசலகூடங்களை நிர்மாணிக்க திட்டமிடப்பட்டிருந்ததுடன், இவற்றில் 147 மலசலகூடங்கள் இந்தக் காலப்பகுதியில் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. இதற்காக 2,774,705.00 ரூபா செலவிடப்பட்டுள்ளது.



புகைப்படம் 2-7 குறைந்த வருமானம் கொண்ட ஊழியர்களின் பாடசாலைப் பிள்ளைகளுக்கான பாடசாலை உபகரணங்கள் வழங்கப்படுதல்

**IV. சட்ட உதவி நிகழ்ச்சித்திட்டம்**

தனியார் துறை ஊழியர்களை நியாயமற்ற முறையில் பணிநீக்கம் செய்தல், முன்னறிவிப்பின்றி நிறுவனங்களை மூடுதல் மற்றும் வேலையாட்கள் நட்டஈட்டு ஆணையாளரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ள போது அவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக இந்த நிகழ்ச்சித்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இந்த சலுகைகள் 2022.09.30 வரை 37 பேருக்கு வழங்கப்பட்டுள்ளன.

அட்டவணை 2.22 சிரம வாசனா நிதியத்தினால் வழங்கப்பட்ட சட்ட உதவிகளின் அளவு


| நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர் | பயனாளிகளின் எண்ணிக்கை | மொத்த செலவு ரூ. |
|---|---|---|
| சட்ட உதவிகள் | 32 | 640,000.00 |
| சட்ட உதவி மேன்முறையீடுகள் மற்றும் மறுசீராய்வுகள் | 02 | 100,000.00 |
| சட்ட உதவி புலமைப்பரிசில் | 03 | 30,000.00 |
| மொத்தம் | **37** | **770,000.00** |

**V. மருத்துவ உதவித் திட்டம்**

பணிபுரியும் போது ஏற்பட்ட தொழில்சார் நோய்/தொழில்துறை நோயால் பாதிக்கப்பட்ட ஊழியர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக இத் திட்டம் செயல்படுத்தப்படுவதுடன் மீளாய்வுக் காலப்பகுதியில் இரண்டு பயனாளிகளுக்கு ரூ. 100,000.00 செலவில் மருத்துவ உதவிகள் வழங்கப்பட்டன.

## 2.24 வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்காக தொழிலாளர்களை ஆற்றுப்படுத்துதல்

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் (பிரைவேட்) நிறுவனம் வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்காக ஆட்களை ஆற்றுப்படுத்துகின்றது. அதன்படி, 2022 ஜனவரி முதல் செப்டெம்பர் வரை வெளிநாடு சென்ற தொழிலாளர்களின் எண்ணிக்கை 170 ஆகும்.




வரைபடம் 2.11: வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட நபர்களின் எண்ணிக்கை – இ.வெ.வே.மு.த.நி

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் (பிரைவேட்) நிறுவனத்திற்குக் கிடைத்துள்ள தொழில் வாய்ப்புகள்

அட்டவணை 2.23: கண்ணியமான பணி நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்துதல்

| நாடு | நிறுவனம் / பதவி | வெற்றிடங்களின் எண்ணிக்கை | நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றிய அபேட்சகர்களின் எண்ணிக்கை | நேர்முகப் பரீட்சையில் தெரிவு செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை | விசா கிடைத்தவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| குவைத் | United Streel நிறுவனம் | 110 | 36 | 20 | 02 |
| | Kuwait Foodstuff Industries Group நிறுவனம் | 25 | 75 | 18 | விசாவிற்கு விண்ணப்பிக் கப்பட்டுள்ளது |
| ருமேனியா | Ceylon Global Recruiter | 100 | 100 | 35 | விசாவிற்கு விண்ணப்பிக் கப்பட்டுள்ளது |
| | Bike Rider | 50 | 123 | 36 | 36 |
| டுபாய் | Al Najah Human Resources | 150 | 160 | 20 | |
| கொரியா | Kang Youngchuls | 500 | வெளிநாட்டு முகவரிடம் ஆற்றுப்படுத்தப்பட்ட விண்ணிப்பப்படிவங்களின் எண்ணிக்கை- 117 | வெளிநாட்டு முகவரால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளவர்கள் எண்ணிக்கை - 105 | |
| ஓமான் | BADR Al Samaa | 50 | வெளிநாட்டு முகவரிடம் ஆற்றுப்படுத்தப்பட்ட விண்ணிப்பப்படிவங்களின் எண்ணிக்கை - 104 | வெளிநாட்டு முகவரால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள விண்ணபங்களின் எண்ணிக்கை - 07 | |
| சிங்கப்பூர் | People Wordwilde Consulting | 55 | வெளிநாட்டு முகவரிடம் ஆற்றுப்படுத்தப்பட்ட விண்ணிப்பப்படிவங்களின் எண்ணிக்கை - 90 | நேர்முகப் பரீட்சைக்கு தோற்றியுள்ள அபேட்சகர்களின் எண்ணிக்கை - 05 | |

## 2.25 கண்ணியமான பணி நிகழ்ச்சித்திட்டம்

இலங்கை அபிவிருத்தி பாதையில் பிரவேசிப்பதற்கு ஆரோக்கியமான வேலை வாய்ப்புகள் ஊக்குவிக்கப்பட வேண்டும். இதன் மூலம் சுதந்திரம், நீதி, பாதுகாப்பு மற்றும் மனித மாண்பு ஆகிய நிலைமைகளில் பயனுள்ள வேலைகளைப் பெறுவதற்கு பெண்களுக்கும் ஆண்களுக்கும் சம வாய்ப்புகளை மேம்படுத்த எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், வேலைவாய்ப்பு உருவாக்கம் மட்டும் எதிர்பார்க்கப்படவில்லை உருவாக்கப்படும் வேலைவாய்ப்புகள் ஏற்றுக்கொள்ளக்கூடிய தரத்தில் இருக்க வேண்டும் என்பது சிறப்பு. கண்ணியமான பணி நிகழ்ச்சித்திட்டம் நான்கு முக்கிய தூண்களுக்குள் செயல்படுகிறது. அதாவது, வேலை உருவாக்கம், மேம்பாடு மற்றும் தேசிய உற்பத்தித்திறன், பணியிடத்தின் உரிமை, சமூக பாதுகாப்பு மற்றும் சமூக உரையாடல் அவையாகும். இந்த 4 முக்கிய தூண்களுக்கு மேலதிகமாக, உற்பத்தித்திறனை மேம்படுத்துதல் மற்றும் பால்நிலை உறுதிப்படுத்தப்படுதல் ஆகிய விடயத் துறைகள் உள்வாங்கப்படும் வகையில் நிகழ்ச்சித்திட்டங்களை செயல்படுத்துவதன் மூலம் அனைத்துத் துறைகளும் ஒருங்கிணைக்கப்படுகின்றன.

கண்ணியமான பணி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பல்வேறு வேலைத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு பின்வரும் நிறுவனங்களுக்கு 12.81 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டு பல்வேறு வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

அட்டவணை 2.24:கண்ணியமான பணி நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்துதல்

| நிறுவனம் | தேறிய ஒதுக்கீடு(ரூ.மி) | 2022.09.30 ஆம் திகதியில் நிதி முன்னெற்றம் (ரூ.மி) | செலவு சதவீதம் |
|---|---|---|---|
| தொழில் திணைக்களம் | 8.17 | 1.62 | 20% |
| தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம் | 1.14 | 0.49 | 43% |
| தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம் | 3.5 | - | - |
| முழு மொத்தம் | **12.81** | **2.11** | **16%** |

## 2.26 திட்டமிடல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகள்

I. இந்த அமைச்சு ஆண்டுதோறும் தொழில் துறையில் காலத்திற்கேற்ற பல்வேறு கருப்பொருள்களை அடிப்படையாகக் கொண்ட ஆய்வுக் கட்டுரைகளைக் கொண்ட ஒரு இதழை வெளியிடுகிறது. அதன்படி, 2022 ஆம் ஆண்டில் " Dawn for Informal Sector Workers" என்ற கருப்பொருளின் அடிப்படையிலான ஆய்வுக் கட்டுரைகளுக்கான அழைப்பு விடுக்கப்பட்டு நிறைவடைந்துள்ளதோடு அவை தொழில் என்னும் விடயம் பற்றிய பரந்த அறிவைக் கொண்ட நிபுணர் குழுவால் மதிப்பீடு செய்யப்பட்டு ஒரு இதழாக வெளியிடப்பட உள்ளன.

Iii. இலங்கைத் தொழிலாளர்கள் இதழின் வெளியீடு தொடர்பான அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுத்தல். தற்போது அரை வருடாந்தம் வெளியாகும் இலங்கை தொழிலாளர்கள் சஞ்சிகையின் மீளாய்வுக்கு உட்பட்ட காலப்பகுதிக்குரியதாக தொகுதி இலக்கம் 72 இன் வெளியீடு 1 வெளியிடப்பட்டுள்ளதோடு தொகுதி இலக்கம் 72 இன் வெளியீடு 2 பதிப்பு செய்யப்பட்டு வருகிறது.

2.27 **நிருவாக மற்றும் தாபன செயற்பாடுகள்**

I. 2022 ஜனவரி முதல் செப்டெம்பர் வரை இந்த அமைச்சு 28 அமைச்சரவைப் பத்திரங்களை அமைச்சரவைக்கு சமர்ப்பித்துள்ளதுடன் அவற்றில் 12க்கான அமைச்சரவை தீர்மானங்கள் கிடைத்துள்ளன.

II. ஜூலை வேலை பகிஷ்கரிப்பாளர்களு நிவாரணமளித்தலின் கீழ், 65 வயதை நிறைவு செய்கின்ற 38 வேலைநிறுத்தக்காரர்களுக்கு ஒருமுறை மட்டும் செலுத்தப்படும் நிவாரண உதவித்தொகைக்கான செலுத்தலுக்காக தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு விதப்புரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

III. மீளாய்வுக்குட்பட்ட காலப்பகுதியில் 389 பொதுமக்கள் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதுடன், அனைத்தும் மேலதிக நடவடிக்கைகளுக்காக சம்பந்தப்பட்ட துறைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அத் துறைகளிலிருந்து 237 பதில் அறிக்கைகள் கிடைத்துள்ளன.

IV. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் 07 கோரிக்கைகள் கிடைத்துள்ளதோடு அனைத்து கோரிக்கைகள் தொடர்பிலும் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன.

V. மீளாய்வுக்கு உட்பட்ட காலப்பகுதியில் பல்வேறு நிறுவனங்களால் நடத்தப்பட்ட பயிற்சி பாடநெறிகளில் 86 அமைச்சு அதிகாரிகள் பங்கேற்றுள்ளனர். இந்த அதிகாரிகள் தனிப்பட்ட கோப்பு முகாமை, கருத்திட்ட அறிக்கைகளைத் தயாரித்தல், வெளிப்புற தலைமை மற்றும் ஆளுமை விருத்தி செயலமர்வுகள் மற்றும் பட்டப்பின் படிப்புகள் போன்ற பாடநெறிகளுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டள்ளனர். அமைச்சின் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பிரிவில் பணியாற்றும் 769 அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்காக பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. தற்போதைய வெளிநாட்டு வேலை வாய்ப்புகள் பற்றிய விழிப்புணர்வு, புதிய குடும்பப் பின்னணி அறிக்கை சுற்றறிக்கை பற்றிய விழிப்புணர்வு மற்றும் பயிற்றுவிப்பாளர்களைப் பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித்திட்டங்களாக இந்தப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.

VI. வெளிநாட்டு புலமைப்பரிசில் செயலமர்வுகள் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்காக இந்த அமைச்சுக்குரிய ஏனைய நிறுவனங்கள் மற்றும் தொழில் திணைக்களத்தின் அதிகாரிகளை ஈடுபடுத்த நடவடிக்கை எடுத்தல். 2022 ஜனவரி முதல் செப்டெம்பர் வரையிலான காலகட்டத்தில், 25 அதிகாரிகள் வெளிநாட்டு பயிற்சிப் பாடநெறிகள் மற்றும் செயலமர்வுகளுக்காக அனுப்பப்பட்டுள்ளனர்.

VII. இதற்கு மேலதிகமாக, மீளாய்வுக்கு உட்பட்ட காலகட்டத்தில் பின்வரும் நிறுவன செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

அட்டவணை 2.25: நிறுவன செயற்பாடுகளின் முன்னேற்றம்

| தொ. இ. | செயற்பாடுகள் | முன்னேற்றம் |
|---|---|---|
| 01 | பாராளுமன்ற வாய்மூல வினாக்களுக்கான பதில்கள் | 15 |
| 02 | பொது மனுக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட அறிக்கைகள் | 14 |
| 03 | அமைச்சரவையின் அங்கீகாரத்திற்காக வருடாந்த அறிக்கைகளைச் சமர்ப்பித்தல் | 07 |
| 04 | வருடாந்த அறிக்கைகளை பாராளுமன்றத்தில் முன்வைத்தல் | 03 |
| 05 | அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கான அவதானிப்புகள் | 10 |

## 2.28 அமைச்சின் நிதிசார் முன்னேற்றம்

2022 வரவு செலவுத் திட்டத்தின் மூலம் அமைச்சு மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடுகளை அரசாங்கக் கொள்கைகளுக்கு இணங்க திறமையான, பயனுள்ள மற்றும் பொருளாதார நிர்வாகத்திற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

அட்டவணை 2.26 திறைசேரி ஒதுக்கீடுகளைப் பயன்படுத்துவதன் முன்னேற்றம்

| | நிறுவனம் / பிரிவு | செலவு விடயம் | | தேறிய ஏற்பாடு (ரூ. 000') | செலவு (ரூ.000') | எஞ்சிய ஒதுக்கீடு (ரூ. 000') | செலவு சதவீதம் (%) |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | அமைச்சு அலுவலகம் - தொழில் பிரிவு | **193** | **மீண்டெழும்** | 216,100 | 89,357 | 126,743 | 41.34 |
| | | | **மூலதன** | 62,100 | 4,187 | 57,913 | 6.74 |
| | அமைச்சு அலுவலகம –வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பரிவு | | **மீண்டெழும்** | 719,000 | 511,882 | 207,118 | 71 |
| | | | **மூலதன** | 189,750 | 11,553 | 178,197 | 6 |
| 2 | தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம் | | **மீண்டெழும்** | 15,000 | 7,814 | 7,186 | 52 |
| | | | **மூலதன** | 7,000 | 2,271 | 4,729 | 32 |
| 3 | தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம் | | **மீண்டெழும்** | 9,000 | 4,489 | 4,511 | 50 |
| | | | **மூலதன** | 7,000 | 1,605 | 5,395 | 23 |
| 4 | தேசிய உற்பத்தித் திறன் செயலகம் | | **மீண்டெழும்** | 480,900 | 372,066 | 108,834 | 77 |
| | | | **மூலதன** | 32,100 | 6,924 | 25,176 | 22 |
| 5 | வேலையாட்கள் நட்டஈட்டு ஆணையாளர் அலுவலகம் | | **மீண்டெழும்** | 34,000 | 26,555 | 7,445 | 78 |
| | | | **மூலதன** | 2,800 | 26 | 2,774 | 1 |
| | **உப மொத்தம்** | | **மீண்டெழும்** | **1,474,000** | **1,012,163** | **461,837** | **69** |
| | | | **மூலதன** | **300,750** | **26,566** | **274,184** | **9** |
| 6 | தொழில் திணைக்களம் | **221** | **மீண்டெழும்** | 1,836,470 | 1,633,793 | 202,677 | 89 |
| | | | **மூலதன** | 477,680 | 256,868 | 220,811 | 54 |
| | **முழு மொத்தம்** | | **மீண்டெழும்** | **3,310,470** | **2,645,956** | **664,514** | **80** |
| | | | **மூலதன** | **778,430** | **283,434** | **494,995** | **36** |

### 2.29 விசேட வெற்றிகள்

பாட்டாளி மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட்டு எதிர்கால சவால்களை வெற்றிகரமாக எதிர்கொள்ளும் வகையில் காலாவதியான தொழில் கட்டளைச் சட்டங்களை இன்றைய காலத்திற்கு ஏற்றவாறு திருத்துவதற்கு ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும், நாட்டிற்குள் முதலீடுகள் வருவதற்கு சாதகமான சூழலை உருவாக்குவதற்கும், தற்போதுள்ள சிக்கல்களை நீக்கி, மாறாமை பாதுகாக்கப்படும் வகையில் அவற்றை எளிமையாக்கி, அனைத்து தரப்பினருக்கும் நன்மை பயக்கும் வகையில், அத்துடன் சர்வதேச தொழில் நியமங்களை மதித்து தொழில் சட்டங்களைத் திருத்துவதற்குத் தேவையான பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. தொழில் திணைக்களம் மற்றும் அனைத்து தொடர்புடைய தரப்பினரின் பங்கேற்புடன் மேற்கொள்ளப்பட்ட இந்த நடவடிக்கைகளின் முன்னேற்றம் இலக்கம் 2.1 இன் கீழ் காட்டப்பட்டுள்ளது.

மேலும், தற்போதைய பொருளாதார சவால்களைப் போக்க வெளிநாட்டுப் பணவனுப்பல்களை அதிகரிப்பதற்காக, புதிய தொழில்நுட்ப அறிவு மற்றும் திறன்களைக் கொண்ட திறமையான தொழிலாளர்களை வெளிநாட்டுத் தொழில் சந்தைக்கு அனுப்பும் முக்கிய நோக்கத்துடன், பாரம்பரிய வெளிநாட்டு தொழில் சந்தைகளைக் கொண்ட நாடுகளுக்கு மேலதிகமாக, புதிய தொழில் சந்தைக்கு தொழிலாளர்களை அனுப்புதல் மற்றும் இதுவரை இலங்கைத் தொழிலாளர்களைக் கொண்டிராத நாடுகளுக்கு தொழிலாளர்களை அனுப்பும் நோக்கத்துடன் பல நிகழ்ச்சித்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் மற்றும் சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரின் பங்களிப்புடன் மேற்கொள்ளப்பட்ட இந்த நடவடிக்கைகளின் முன்னேற்றம் இலக்கம் 2.2 இன் கீழ் காட்டப்பட்டுள்ளது.

1. **தொழில் திணைக்களம்**

I. ஊழியர் சேமலாப நிதி அனுகூலங்களைப் பெறுவதற்கும் பதிவு செய்வதற்கும் வரும் வாடிக்கையாளர்களின் வசதிக்காக தயாரிக்கப்பட்ட ஊழியர் சேமலாப நிதி விண்ணப்பப்படிவங்கைக் கையளிப்பதற்காக நேரத்தை ஒதுக்கிக்கொள்ளும் முறைமை (EPF Appointment Management System) 2022.0901 ஆம் திகதி முதல் செயல்படுத்தப்பட்டது. அதன்படி, 1958 என்ற இலக்கத்திற்கு அழைப்பதன் மூலம் அல்லது appointment.labourdept.gov.lk இணைப்பின் மூலம் அந்தந்த தொழில் அலுவலகங்களில் இருந்து தேவையான சேவையைப் பெறுவதற்கு திகதி மற்றும் நேரத்தை ஒதுக்கிக்கொள்ளலாம். இதன் மூலம் வாடிக்கையாளர்கள் நேரத்தை வீணடிக்காமல் குறிப்பிட்ட நேரத்தில் சேவையைப்பெற வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.




புகைப்படம் 2-8 ஊழியர் சேமலாப நிதி விண்ணப்பங்களைக் கையளிப்பதற்காக நேரத்தை ஒதுக்கிக்கொள்ளும் முறைமையைத் தொடங்குதல்

II. தொழில்கொள்வோரின் பணிகளை எளிதாக்கும் நடவடிக்கையாக, ஊழியர் சேமலாப நிதியம் அங்கத்தவர்களைப் பதிவு செய்யும் ஏ, பி மற்றும் எச் படிவங்களை தொழில் திணைக்களத்தின் இணையதளத்தில் (www.labourdept.gov.lk) இருந்து பெறுவதற்கான புதிய முறை அறிமுகப்படுத்தப்பட்டது. அதன்படி, இந்த ஏ, பி மற்றும் எச் படிவங்களை தொழில் திணைக்களத்தின் இணையதளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்து தொழில் திணைக்களத்திற்கு அனுப்புவதன் மூலம் தொழில்கொள்வோர் ஊழியர்களைப் பதிவு செய்யலாம்.

III. முறைப்பாட்டு முகாமை முறைமையொன்றை (Complaint Management System) நிறுவும் பணி இலங்கையின் தகவல் அறியும் உரிமை பற்றிய ஆணைக்குழுவின் இணைப்பாக்கத்தில் ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டத்தின் அனுசரணையில் தொழில் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டதோடு அவ்வாறு உருவாக்கப்பட்ட முறைப்பாடு முகாமைத்துவ முறைமையானது 2022.03.15 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டது. தொழில் திணைக்களத்திற்கு முறைப்பாடு செய்ய விரும்பும் தனியார் அல்லது பகுதியளவு அரச துறையைச் சேர்ந்த ஊழியர்கள் தமது தொழில் சம்பந்தமான எந்தவொரு முறைப்பாட்டையும் தொழில் அலுவலகங்களுக்கு வருகை தராமல் https://cms.labourdept.gov.lk என்ற இணையவழி சேவையின் ஊடாக சமர்ப்பிக்க வசதி வழங்கப்பட்டுள்ளது.

IV. தொழில்கொள்வோர்/தொழிலாளர் பாதுகாப்பை மேம்படுத்த முறையான பாதுகாப்பு குழுக்களை உருவாக்குதல். தொழில் திணைக்களத்தின் ஒருங்கிணைப்புடன், அவிசாவளை முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்தில் தொழில்கொள்வோர்/தொழிலாளர் பாதுகாப்பை அதிகரிப்பதற்காக பாதுகாப்பு மற்றும் சுகாதார குழுக்களை மேம்படுத்துவதற்கான முன்னோடித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. அவிசாவளை முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்தில் முறையான பாதுகாப்புக் குழுக்கள் இல்லாதமை அவதானிக்கப்பட்டதால், ஒவ்வொரு தொழிற்சாலையும் ஆய்வு செய்யப்பட்டு, பணியிடத்தின் ஒத்துழைப்புடன் பாதுகாப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டன. 2022.09.30 ஆம் திகதியாகும்போது 29 தொழிற்சாலைகளில் முறையான குழுக்கள் அமைக்கப்பட்டன.

V. தொழில் துறையுடன் தொடர்புடைய சர்வதேச நிறுவனங்கள் மற்றும் நாடுகளுடன் உறவுகளை வளர்த்தல்.

- "தொழில் ஆய்வுக்கான வழிகாட்டிக் கோவை" (Field Guide to Labour Inspection) யை திருத்துவதற்கும், "தொழில் சட்டத் தொகுப்பை"(Labour Code) புதிய திருத்தங்களை உள்ளடக்கி மறுபதிப்பு செய்வதற்கும் சர்வதேச தொழிலாளர் அமைப்பின் கீழ் இரண்டு குழுக்கள் அமைக்கப்பட்டன.
- சர்வதேச தொழிலாளர் அமைப்பின் பங்களிப்பின் கீழ் நடைமுறைப்படுத்தப்படவுள்ள "சிறிய அளவிலான தோட்டத்துறையில் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதற்கான கருத்திட்டம்" சார்பாக சர்வதேச தொழிலாளர் அமைப்பினதும் திணைக்களதினதும் உத்தியோகத்தர்கள் மற்றும் அத்துறையின் தொழிலாளர் தொழில்கொள்வோரது பிரதிநிதிகளைக் கொண்டமைந்த பொருத்தமான குழுவொன்று நியமிக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டன.
- சர்வதேச தொழிலாளர் அமைப்பின் நிதிப் பங்களிப்பின் கீழ், திணைக்களத்தின் உத்தியோகபூர்வ யூடியூப் சேனலில் சேர்க்கப்படுவதற்காக, திணைக்களத்தின் பிரதான சேவைகள் பற்றிய 30 சிறு காணொளிகள் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் தயாரிக்கப்பட்டு யூடியூப் சேனலில் சேர்க்கப்பட்டது. இந்த வீடியோக்கள் மூலம் ஊழியர் சேமலாப நிதி, தொழில்துறை உறவுகள் தொடர்பான சட்டங்கள், பெண்கள், இளம்ஆட்கள் மற்றும் சிறுவர்கள் பணியமர்த்தப்படுதல் தொடர்பான சட்ட நிலைமைகள் மற்றும் தொழிலாளர் தரநிலைகள் பற்றிய தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன.
- அமெரிக்க ராஜாங்கத் திணைக்களத்தினால் 2022 ஜூலை மாதம் 19ஆம் தேதி வெளியிடப்பட்ட 2022 ஐக்கிய குடியரசு ஆட்களை வியாபாரம் செய்தல் (மனித வியாபாரம்) பற்றிய அறிக்கைக்குத் (US TIP REPORT 2022) தேவயான தகவல்களை வழங்குவதன் மூலம்

அறிக்கையைத் தயாரிப்பதற்கு அரச தரப்பினராக இணைந்து திணைக்களத்தின் ஆதரவு வழங்கப்பட்டது. அந்த அறிக்கையின்படி 2021 ஆம் ஆண்டு Tire 2 Watch List மட்டத்திலான நாடுகளைக் கொண்ட பட்டியலில் இலங்கை 2022 ஆம் ஆண்டில் Tire 2 மட்ட நாடுகளைக் கொண்ட பட்டியலில் இடம் பெற்றதன் காரணமாக இலங்கையின் மட்டம் உயர்வடைந்து இருப்பது அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் அந்த அறிக்கையை தயாரிப்பதற்குத் தேவையான தகவல்களை வழங்கி ஆதரவளித்த நிறுவனங்களைப் பாராட்டி பாதுகாப்பு அமைச்சினால் ஒழுங்கு செய்யப்பட்ட பாராட்டு விழாவில் தொழில் திணைக்களமும் பாராட்டுக்கு உள்ளானது.

- சேவையில் ஈடுபட்டிருந்தபோது மரணித்த 10 ஊழியர்களின் 10 பிள்ளைகளுக்கு ரஷ்ய கலாசார நிலையத்தின் நிதி அனுசரணையோடு புலமைப்பரிசில் வழங்கப்பட்டது.

**2. இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்**

அந்நியச் செலாவணியை பெற்றுக்கொள்ளும் நோக்கத்துடன் 2022 ஆம் ஆண்டில் 300,000 இலங்கையர்கள் வெளிநாட்டு தொழில் வாய்ப்புகளுக்கு அனுப்புவதற்கு உரிமம் கொண்ட வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர் நிறுவனங்கள் கொண்டுள்ள வெளிநாட்டு வேலை வாய்ப்புகளை ஊக்குவிப்பதற்கு பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

I. வெளிநாட்டில் பணி புரியும் இலங்கையர்கள் ஈட்டுகின்ற பணத்தினை சட்டரீதியான முறையில் இலங்கைக்கு அனுப்புவதனை ஊக்குவிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.

- வெளிநாட்டு வேலை வாய்ப்புகளில் ஈடுபட்டுள்ள இலங்கையர்கள் உழைக்கும் பணத்தினை சட்டரீதியான வழிகளில் இலங்கைக்கு அனுப்புவதை ஊக்குவிப்பதன் பொருட்டு முழுமையான இலத்திரணியல் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு உரிமம் வழங்குதல்.
- வெளிநாட்டு தொழிலுக்குச் செல்வதற்காக பணியகத்தில் பதிவினை பெற்றுக்கொள்ளும் நபர்களிடமிருந்து வெளிநாட்டு தொழில் வாய்ப்பின் மூலம் உழைக்கின்ற பணத்தினை சட்டரீதியான வழிகளில் இலங்கைக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுப்பதாக சுய கூற்றுக்களைப் பெற்றுக்கொள்ளல்.
- தமது வெளிநாட்டு தொழில் மூலம் உழைக்கும் பணத்தை சட்ட ரீதியான முறையில் இலங்கைக்கு அனுப்புவதற்கு வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கை ஊழியர்களை ஊக்குவிப்பதற்காக வெளிநாடுகளில் அமைந்துள்ள இலங்கைத் தூதரகங்கள் மூலம் விழிப்புணர்வு செய்தல்.

II. பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்துதல்

இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தில் பதிவு செய்துகொண்டு வெளிநாட்டில் தொழில் புரியும் ஒருவர் 60 வயதை பூர்த்தி செய்ததன் பின்னர் மாதாந்த ஓய்வூதியம் பெற்றுக்கொள்வதற்காக "மனுசவி" பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தை இலங்கை சமூக பாதுகாப்புச் சபையுடன் இணைந்து நடைமுறைப்படுத்துதல். இந்த பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்திற்கான பங்களிப்புத் தொகை அந்நியச் செலாவணியின் மூலம் செலுத்தப்பட வேண்டும்.

III. இலங்கையர்களை அதிக அளவில் வெளிநாட்டு வேலை வாய்ப்புகளில் ஊக்குவிப்பதற்காக உரிமம் பெற்ற வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர் நிறுவனங்களின் பங்கேற்புடன் தேசிய மற்றும் மாகாண மட்டத்தில் வெளிநாட்டு வேலைவாய்ப்புகளை ஊக்குவிக்கவும் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்.

IV. தொழிலாளர்களுக்கு அதிகூடிய ஈட்டல் வாய்ப்புகள் உள்ள நாடுகளில் இலங்கையர்களுக்கு தொழில் வாய்ப்புகளைப் பெற்றுக்கொள்வதற்காக உடன்படிக்கைகளுக்கு வருதல் (உதாரணமாக- தென் கொரியா, ஜப்பான், இஸ்ரேல்)

V. புலம்பெயர் தொழிலாளர்களின் முறைப்பாடுகளை பணியகத்திற்குச் சமர்ப்பித்தல் மற்றும் அது தொடர்பான முன்னேற்றத்தை ஆராய்தல் உள்ளிட்ட வசதிகளைக் கொண்ட கையடக்கத் தொலைபேசி மென்பொருள் ஒன்றை உருவாக்கி செயற்படுத்துதல்.

VI. உரிமம் பெற்ற வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர் நிறுவனங்களினால் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அபேட்சகர்கள் தொழில்களுக்கு இணைத்துக் கொள்ளப்படுதல் மற்றும் சுயமாக வெளிநாட்டு வேலை வாய்ப்புகளுக்குப் பதிவு செய்து கொள்ளும் நடவடிக்கை முறைகளை இலகுபடுத்துதல்.

VII. இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் மற்றும் குடிவரவு குடியகல்வு திணைக்களம் இணைந்து வெளிநாட்டு வேலை வாய்ப்புகளுக்காகச் செல்கின்ற தொழிலாளர்களுக்கு துரிதமாக வெளிநாட்டு கடவுச்சீட்டுக்களை பெற்றுக்கொள்வதற்காக விசேட கருமபீடம் ஒன்று குடிவரவு குடியகல்வு திணைக்களத்தில் நிறுவப்பட்டது.

VIII. இலங்கை புலம்பெயர் தொழிலாளர்களுக்கு விமான நிலையங்களில் கூடிய வசதிகளை பெற்றுக்கொடுக்கும் நோக்கத்துடன் "எதிர்பார்ப்பின் வாயில்"" (HOPE GATE) திறந்து வைக்கப்படுதல்.




புகைப்படம் 2-9 புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தை ஆரம்பித்தல்

IX. இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் மற்றும் இலங்கை மத்திய வங்கி ஆகியவை இணைந்து வெளிநாட்டு ஊழியர்களின் பணத்தை இலங்கைக்கு சட்டப்பூர்வமாக அனுப்புவதற்காக கையடக்கத் தொலைபேசி செயலியை (Lanka Remit) அறிமுகப்படுத்துதல்.

Lanka Remit கையடக்கத் தொலைபேசி செயலியானது வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்களுக்கு விரைவாகவும், பாதுகாப்பாகவும், வசதியாகவும் இலங்கைக்கு பணம் அனுப்பும் வசதியை வழங்குகிறது.

### 3. மனிதவலு மற்றும் வேலைவாய்ப்பு திணைக்களம்

2021 ஆம் ஆண்டில் திணைக்களத்தின் சேவைகளை மிகவும் வினைத்திறன் மிக்கதாக அமைக்கும் நோக்கத்துடன் திணைக்களத்தை மீளமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. தொழில்சார் வழிகாட்டல் சேவைகள் தேவைப்படும் சகல நபர்களுக்கும் தொழில்சார் வழிகாட்டல் சேவைகளை வழங்குதல் மற்றும் திணைக்களத்தின் சேவைகளை மிகவும் பாராட்டத்தக்க வகையில் நிறைவேற்றுதல் என்பவற்றை நோக்கமாகக் கொண்டு அறிமுகப்படுத்தப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டங்கள் நிதி ஒதுக்கீடுகள் செலவிடப்படாமல் மேற்கொள்ளப்படுகின்றன. 2022 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட புதிய நிகழ்ச்சித்திட்டங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

I. *"சிஹின பலகாய"* உடன் நடத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் - நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை 20

இது தொழில்சார் வழிகாட்டல் சேவைகளை பிரபல்யமடையச் செய்தல், வேலைவாய்ப்பு சந்தர்ப்பங்களை முன்னேற்றுதல், இளம் சமுதாயத்தினரை உள்நாட்டு வெளிநாட்டு தொழில் சந்தையின் தேவைகளை நிறைவேற்றக்கூடிய வகையில் சமூக மயப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு சுய குழுக்களை வலுவூட்டும் ஒரு நிகழ்ச்சித்திட்டமாகும். இதன் கீழ் மனித வலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம் ஆலோசனைச் சேவைகளை வழங்குகின்ற ஒரு தன்னார்வ அமைப்பே "சிஹின பலகாய" ஆகும். இந்த அமைப்பு பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் பாடசாலை மாணவர்களை இலக்காகக் கொண்டு அதன் சேவைகளை விளங்குகின்றது.

#### II. ஸ்ரமாபிமானி நிகழ்ச்சித்திட்டம்

தொழில்சார் வழிகாட்டல் சேவைகளை பிரபல்யமடையச் செய்தல், வேலைவாய்ப்பு சந்தர்ப்பங்களை முன்னேற்றுதல் என்பனவற்றை நோக்கமாகக் கொண்டு அரச ஊழியர்களை வலுவூட்டும் ஒரு நிகழ்ச்சித் திட்டமாகும். இதன் கீழ் மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம் ஆலோசனை சேவைகளை வழங்குகின்ற கிராம உத்தியோகத்தர்களால் ஆரம்பிக்கப்பட்ட தன்னார்வ அமைப்பே ஸ்ரமாபிமானி அமைப்பாகும். இந்த அமைப்பானது கிராம சேவகர் பிரிவு மட்டத்தில் ஒட்டுமொத்த சமுதாயத்தையும் இலக்காகக் கொண்டு அதன் சேவைகளை வழங்குகின்றது.

#### III. சார ஸ்ரீலங்கா நிகழ்ச்சி

பசளைத் தட்டுப்பாடு, பொருளாதார நெருக்கடி காரணமாக ஏற்படக்கூடிய உணவுப்பாதுகாப்பு வீழ்ச்சியைத் தடுப்பதற்காக வீட்டுத்தோட்ட செய்கையை பிரபல்யப்படுத்தும் தரப்பு நிறுவனங்களுடன் சமுதாயத்தை விழிப்பூட்டுவதற்காக ஆரம்பிக்கப்பட்ட ஒரு நிகழ்ச்சித் திட்டமாகும். பிள்ளைகளுக்கு மத்தியில் புரத குறைபாட்டினைத் தடுத்தல், எதிர்கால தொழிலாளர் படையின் போஷாக்குக் குறைபாடுகளைத் தவிர்த்தல், தற்கால தொழில் விளைவுத்திறனைப் பாதுகாத்தல் என்பவற்றை நோக்கமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட ஒரு விழிப்பூட்டல் நிகழ்ச்சித் திட்டம் ஆகும். இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சுமார் 15 இலட்சம் பயனாளிகள் விழிப்பூட்டப்பட்டுள்ளதோடு வீட்டுத் தோட்ட செய்கை நடவடிக்கைகளை மேம்படுத்துதல் மற்றும் சமுதாய இணைப்பாக்க நடவடிக்கைகள் கமநல சேவைத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன.

#### IV. இணையவழி மூலமான தொழில்சார் வழிகாட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் -173

தொழில்சார் வழிகாட்டல் சேவைகளை வழங்கும்போது பயனாளிகளை மதிப்பிடுவதற்காக பயன்படுத்தப்படுகின்ற சில சோதனைக் கருவிகள் காணப்படுகின்றன. திறமை மற்றும் பற்றுறுதி சோதனை, தொழில்சார் திறவுகோல் சோதனை, பலவித நுண்ணறிவு சோதனை மற்றும் தொழில் முயற்சி திறன்கள் சோதனை என்பன அவையாகும். இந்த மதிப்பீட்டுக் கருவிகள் ஆவணக் கருவிகளாக பயன்படுத்தப்படுவதோடு ஆவணக் கருவிகளின் பயன்பாடு இன்றைய சமூக பொருளாதார பின்னணியில் அருகி வரும் காரணத்தினால் இந்த கருவிகளை இணையவழி ஊடாக பயன்படுத்தக்கூடிய டிஜிட்டல்

கருவிகளாக மாற்றியமைக்கும் செய்முறையில் திணைக்களம் ஈடுபட்டுள்ளதோடு ஏற்கெனவே பெருவாரியாக பயன்படுத்தப்படுகின்ற தொழில்சார் திறவுகோல் சோதனை மற்றும் பலவகை நுண்ணறிவு சோதனை என்னும் உற்றறி பண்பாற்றல் சோதனை (Psychometric Test) வகை இரண்டும் இணையவழியை பயன்படுத்தக்கூடிய வகையில் முன்னேற்றபட்டுள்ளன.(https://bit.ly/DOME_SkillTests) 2022.09.30 ஆம் திகதியளவில் இந்த இணைப்புகளைப் பயன்படுத்தி 173 இணையவழி நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளன.

V. தேசிய தொடர்பாடல் ஊடகங்களின் மூலம் திணைக்கள நிகழ்ச்சிகளுக்கு பிரச்சாரம் வழங்குதல். தேசிய ரூபவாஹினி சுயாதீன தொலைக்காட்சி, சிரச தொலைக்காட்சி, சிரச எப்எம், லக்ஹண்ட போன்ற தேசிய மட்ட ஊடகங்கள் வாரந்தோறும் 4 நிமிட நேரத்தை திணைக்கள நிகழ்ச்சித் திட்டங்களுக்கு இலவசமாக பிரச்சாரம் வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளதோடு 2022 ஜனவரி மாதம் தொடக்கம் செப்டெம்பர் மாதம் வரை 144 பிரச்சார நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளன.

VI. Q & A programme

திணைக்களத்தின் இணையத்தள பக்கத்தில் பிரவேசிக்கின்ற பயனாளிகளுக்கு மிகச் சிறந்த அறிவு மற்றும் தொழில்சார் வழிகாட்டல் சேவையை வழங்குவதற்காக இணையத்தளத்தில் நிதமும் கேட்கப்படும் கேள்விகள் (Frequently Ask Questions) என்பதன் கீழ் 1,000 கேள்விகளை உள்ளடக்குவதற்குத திட்டமிடப்பட்டுள்ளதோடு தற்போது ஆயிரம் கேள்விகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

VII. கால ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த பல்வேறுபட்ட தலைப்புகளின் ஊடாக விடய அடிப்படையிலான அடிப்படை கட்டுரைகள் வெளியிடப்படுதல்.

VIII. எண்ணக்கரு பத்திரங்களை முன்வைத்தல்

இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியில் இருந்து விடுபடுவதற்கான தீர்வாக இந்நாட்டு நிதி மற்றும் மனித வளத்தை முறையாகவும் பயனுள்ள வகையிலும் முகாமைத்துவம் செய்வது தொடர்பில் எண்ணக்கரு பத்திரங்கள் தயாரிக்கப்பட்டு தொடர்புடைய நிறுவனங்களுக்கு ஆற்றுப்படுத்தப்படுதல்.

**4. தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம்**

I. பயிற்சி நிறுவனத்திற்கான பதிவு, P01/0717 இலக்கத்தின் கீழ் மூன்றாம் நிலைக் கல்வி ஆணைக்குழுவிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டது.

II. பரீட்சை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள பதவியணி, பரிசோதகர்கள் மற்றும் வினாத்தாள்களை தயாரிப்பவர்களுக்காக விசேட செயலமர்வொன்று பரீட்சைகள் திணைக்களத்தினால் நடத்தப்பட்டது. பரீட்சைகள் திணைக்களம் அத்தகைய நிகழ்ச்சிக்காக வளப் பங்களிப்பினை வழங்கியது.

III. அத்தோடு இதுவரை ஆங்கில மொழி மூலத்தில் மட்டும் NVQ -5 சான்றிதழை வழங்குவதற்கு அனுமதி கிடைத்திருந்ததோடு தொழில் உறவுகள் மற்றும் தொழில் சட்ட டிப்ளமோ பாடநெறியை சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகளில் பயில்கின்றவர்களுக்கும் NVQ -5 சான்றிதழ் வழங்குவதற்கு மூன்றாம் நிலை கல்வி ஆணைக்குழுவிலிருந்து அனுமதி கிடைத்தல்.

IV. விரிவுரை மண்டபங்களில் நடத்தப்படுகின்ற விரிவுரைகளை அதற்கு ஒருங்கமைவாக இணையவழி ஊடாக வழங்குவதற்குத் தேவையான அனைத்து தேவைகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. அதன்படி உயர் தரத்திலான இணையவழி மூலம் அமர்வுகளை நடத்த இயலுமை கிடைக்கின்றது.

**5. தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம்**

I. சர்வதேச தொழிலாளர் அமைப்பின் நிதி அனுசரணையின் கீழ் தேயிலை, இரப்பர், தெங்கு ஆகிய கைத்தொழிற்சாலைகளின் ஊழியர்களின் சுகாதாரம் மற்றும் தொழில்சார் பாதுகாப்பு தொடர்பில் பரிசோதனை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

II. கொழும்பு மாநகர சபையின் பாரிய கொழும்பு நீர், கழிவு நீர் முகாமைத்துவம் மற்றும் மேம்பாட்டு முதலீட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கொழும்பு மாநகர சபையில் சேவையில் ஈடுபட்டுள்ள சுமார் 600 உத்தியோகத்தர்களுக்கு தொழில்சார் பாதுகாப்பு பற்றிய முக்கியத்துவம் மற்றும் அவர்களின் உயிர் பாதுகாப்பு தொடர்பில் 06 ஒரு நாள் பாடநெறிகளும் மத்திய மட்ட முகாமைத்துவம் மற்றும் மேல்மட்ட முகாமைத்துவம், பொறியியலாளர்கள் என்போருக்காகவும் தொழில்சார் பாதுகாப்பு சான்றிதழ் 15 நாள் நிகழ்ச்சித்திட்டம் நடத்தப்பட்டது.

**6. வேலையாட்கள் நட்டஈட்டு ஆணையாளர் அலுவலகம்**

1934 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க வேலையாட்கள் நட்டஈட்டுக் கட்டளைச்சட்டம் 2022.01.21 ஆம் திகதி திருத்தப்பட்டது. இச்சட்டத்தில் கால ரீதியில் மேற்கொள்ளப்பட்ட முக்கியமான சில திருத்தங்கள் உள்ளடங்கியுள்ளன.

I. சேவையில் ஈடுபட்டுள்ளபோது இடம்பெறுகின்ற விபத்துகளுக்காக மட்டும் நட்டஈடு வழங்குவது இதுவரையும் இடம்பெற்று வந்தது. புதிய திருத்தத்தின் மூலம் சேவையில் ஈடுபட்டுள்ள போது அல்லது சேவை நிலையத்திற்கு வருகை தரும்போது அல்லது சேவை நிலையத்திலிருந்து தங்குமிடத்திற்கு மீண்டும் செல்லும்போது இடம்பெறுகின்ற விபத்துகளுக்கு அனுகூலங்கள் உரித்தாகும்.

II. செலுத்தப்பட வேண்டிய உச்சமட்ட நட்டஈட்டுத் தொகை ரூ.550,000/- முதல் ரூ. 2,000,000/- வரை அதிகரிக்கப்படுதல்

17 ஆண்டுகளுக்குப் பின்னர் மேற்கொள்ளப்பட்ட இத் திருத்தத்தின் மூலம் அதிகளவான நட்ட ஈட்டுத் தொகை மரணித்த தொழிலாளரில் தங்கி வாழ்வோருக்கு அல்லது அங்கவீனமுற்ற தொழிலாளருக்கு பெற்றுக்கொள்ள முடியும் என்பதோடு தங்குமிடம் என்பதை பதிலீடு செய்வதன்மூலம் தொழிலாளருக்கு நட்டஈடு பெற்றுக்கொள்வதற்கான இயலுமை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

**7. தேசிய உற்பத்தித்திறன் செயலகம்**

ஆசிய உற்பத்தித்திறன் அமைப்பின் பங்களிப்பின் மீது விசேட கருத்திட்டங்கள் நடைமுறைபடுத்தப்படுதல்

I. மகியங்கனை ஆதார வைத்தியசாலையில் கோவிட் ஆய்வுகூடம் ஒன்றை தாபித்தல் மற்றும் தெல்தெனிய மருத்துவமனையில் தரமான முகாமைத்துவ எண்ணக்கருக்களை உருவாக்குதல்.

II. பதுளை மாவட்டத்தில் தரமான கம்போஸ்ட் உற்பத்தி மற்றும் பயன்பாடு

III. கம்பஹ மாவட்டத்தில் நிலைபேறான உணவுப் பெறுமதியை சேர்க்கும் சங்கிலி (Sustainable food value chain) ஊடாக உணவுப் பாதுகாப்பினை மேம்படுத்துதல்.

இந்த மூன்று கருத்திட்டங்களினதும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு மேற்படி முதலாம் மற்றும் இரண்டாம் கருத்திட்டங்கள் 2022 ஆம் ஆண்டிலும் மூன்றாம் கருத்திட்டம் 2023 ஆம் ஆண்டிலும் பூர்த்தி செய்யப்பட உள்ளது.

# மூன்றாம் அத்தியாயம்

# அமைச்சின் எதிர்காலத் திட்டங்கள் மற்றும் செயற்பாடுகள்

# அமைச்சின் எதிர்காலத் திட்டங்கள் மற்றும் செயற்பாடுகள்

தற்போதைய தேசிய மற்றும் சர்வதேச சமூக-பொருளாதார நிலைமைகளுக்கு ஏற்ப இலங்கையில் முதலீட்டுக்கு உகந்த சூழலை உருவாக்குவதற்கான சட்ட ஏற்பாடுகளை உருவாக்குவது அமைச்சின் காலரீதியான பொறுப்பாகும். அதன்போது தற்போதுள்ள கட்டளைச் சட்டங்கள் மற்றும் சட்டவிதிகளை தற்போதைய வேலை உலகிற்கு ஏற்றவாறு திருத்தும் அதே வேளையில் உழைக்கும் மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கவும் இந்த அமைச்சு கடமைப்பட்டுள்ளது. மேலும், வெளிநாட்டு வேலைவாய்ப்புச் சந்தைக்கு புதிய தொழில்நுட்ப அறிவு மற்றும் திறன்களைக் கொண்ட திறமையான தொழிலாளர்களை அனுப்புவதை பிரதான நோக்கமாகக் கொண்டு பாரம்பரிய வெளிநாட்டு தொழில் சந்தைகள் உள்ள நாடுகளுக்கு மேலதிகமாக, புதிய தொழில் சந்தைக்கு ஊழியர்களை அனுப்புதல் மற்றும் இலங்கை தொழிலாளர்கள் இல்லாத நாடுகளுக்கு தொழிலாளர்களை அனுப்புவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதற்காக, எதிர்காலத் திட்டங்களையும் செயற்பாடுகளையும் தயாரிப்பதில் பின்வரும் விடயங்களில் அமைச்சு கவனம் செலுத்தியுள்ளது.

- அமைச்சின் தொலைநோக்கு, செயற்பணி மற்றும் குறிக்கோள்கள்
- 22/07/2022 ஆம் திகதிய 2289/43 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட பணிகள் மற்றும் கடமைகள்
- அமைச்சின் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்
- தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புத் துறைகள் தொடர்பாக இலங்கை ஒப்புக்கொண்டுள்ள சர்வதேச சமவாயங்கள் மற்றும் ஒப்பந்தங்களில் உள்ளடங்கிய விடயங்கள்.

### 3.1 தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு

தொழிலாளர் சமூகத்தின் உரிமைகள் மற்றும் நலன்களை உறுதி செய்வதற்காக, தொழில் திணைக்களத்தின் தொடக்கத்திலிருந்து இயற்றப்பட்ட 50 கட்டளைச் சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் வலுவிலுள்ளன. காலாவதியான தொழில் சட்டங்களை இன்றைய காலகட்டத்திற்குப் பொருந்தும் வகையில் கொண்டு வரவும், சட்டங்களுக்கு இடையே உள்ள சிக்கல்களை நீக்கி எளிதாக்குவதன் மூலம் அனைத்து தரப்பினருக்கும் அனுகூலங்களை உறுதிப்படுத்தவும் சட்டங்களைத் திருத்த வேண்டியது அவசியமாகும். இதற்குத் தேவையான நடவடிக்கைகள் ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ளதோடு 2023-ம் ஆண்டு அப் பணிகளைப் பூர்த்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், தற்போது சுகாதாரம் மற்றும் தொழில்சார் பாதுகாப்பு அனுகூலங்கள், மகப்பேறு அனுகூலங்கள், வேலையில்லாத் திண்டாட்டம், தொழிலாளர்களின் இழப்பீட்டு அனுகூலங்கள் ஆகியவற்றை முதலாளியே ஏற்க வேண்டும். அந்தச் சலுகைகளை முதலாளிக்கு மேலதிக சுமையாக இல்லாமல் வழங்க புதிய முறைகள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும்.

வெளிநாட்டு வேலைவாய்ப்புத் துறையானது நாட்டின் அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல்/பேரண்டப் பொருளாதாரக் கட்டமைப்பில் முன்னணி மற்றும் பயனுள்ள துறையாக நிலைநிறுத்தப்பட வேண்டும் மற்றும் தேசிய அபிவிருத்திக்காக வெளிநாட்டு வேலைவாய்ப்புத் துறையிலிருந்து கிடைக்கும் பங்களிப்பினை பிரதான தேசிய அபிவிருத்திக் கொள்கைத் திட்டங்கள் மற்றும் வரவு செலவுத் திட்டங்களில் அங்கீகரிக்கப்பட்டு மதிக்கப்பட வேண்டும். வெளிநாட்டு வேலைவாய்ப்புத் துறையை பணவனுப்பல்களுக்கு அப்பாற்பட்ட எதிர்கால சமூகத்திற்கான முதலீடாகவும், வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்களின் திறனைப் பயன்படுத்துவதற்கு உதவும் ஒரு துறையாகவும் நாம் பார்க்க வேண்டும். எனவே, சம்பந்தப்பட்ட ஒவ்வொரு அமைச்சும் தமது வருடாந்த திட்டங்களில் இது தொடர்பான ஏற்பாடுகளை உள்ளடக்குவது பொருத்தமானது என்பதோடு இது தொடர்பில் அடுத்தகட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. மேலும், வெளிநாட்டு வேலைவாய்ப்புத் துறையை மேம்படுத்த பின்வரும் நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டுள்ளன.

- மத்திய கிழக்கு பிராந்தியத்தில் தங்கியிருப்பதற்குப் பதிலாக, வேலைவாய்ப்பிற்காக மாற்று நாடுகளைத் தேட வேண்டிய கட்டாயம் உள்ளது. வயதான மக்கள்தொகை அதிகரிப்பு மற்றும்

பெண் தொழிலாளர் பங்கேற்பு அதிகரிப்பு ஆகியவற்றின் காரணமாக, வளர்ந்த நாடுகளில் தாதியர் சேவை மற்றும் முதியோர் பராமரிப்பு சேவைகள் போன்ற விசேட சேவைகளுக்கு பெரும் தேவை உருவாகி வருகின்றது. அதன்படி, புதிய நாடுகளையும் புதிய துறைகளையும் அடையாளம் காணும் பணியை மேற்கொள்ள வேண்டும்.

- வெளிநாட்டு வேலை வாய்ப்புகளைத் தேடுபவர்களுக்கு மிகவும் பயனுள்ள வெளிநாட்டு வேலை வாய்ப்புகளை மேம்படுத்துவது வெளிநாட்டு வேலைவாய்ப்பு மேம்பாட்டின் போது முக்கியமாக கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய ஒரு விடயமாகும். இதன்போது உலகளாவிய ரீதியில் தற்போது காணப்படுகின்ற தொழில் வாய்ப்புகளின் பிரகாரம் இத்துறையில் மிகவும் போட்டித்தன்மையுடன் நன்மைகளை பெற்றுக் கொள்வதற்கு இலங்கைக்குள்ள வாய்ப்புகளை இனங்காண்பதும் குறிப்பிட்ட தொழில் வாய்ப்புகளுக்கு பொருத்தமான அல்லது உசிதமான திறன்களுக்காக பயிற்சி வழங்குவதும் ஊடாக பயிற்சி பெற்ற தொழிலாளர்களுக்கு கூடிய வாய்ப்புகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- தொழில் வாய்ப்புகளுக்காக புலம்பெயர்கின்ற தொழிலாளர்களினதும் அவர்களது குடும்ப அங்கத்தவர்களினதும் பாதுகாப்பு மற்றும் நலனுக்காக அமைச்சினால் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற குடும்ப அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் பாதுகாப்புத் திட்டங்கள் போன்ற நிகழ்ச்சித் திட்டங்களை மேற்கொண்டும் வலுப்படுத்தி தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்துதல் மற்றும் பயனுள்ள பாதுகாப்பான புலம்பெயர்வு தொடர்பாக பிராந்திய ரீதியில் விழிப்புணர்வூட்டும் நடவடிக்கைகளை விரிவுபடுத்தல்.
- வேலை வாய்ப்புகளுக்காக புலம்பெயர்தல் பற்றிய இலங்கையின் தேசியக் கொள்கை மற்றும் செயற்பாட்டுத் திட்டத்தை நடைமுறைப்படுத்துதல்.
- புலம்பெயர் தொழிலாளர்களினதும் அவர்களின் குடும்பங்களினதும் உரிமைகள் மற்றும் நல்வாழ்வினைப் பாதுகாப்பதற்காக அபிவிருத்திப் பங்காளர்களுடன் இணைந்து நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.
  இதன் கீழ் அபிவிருத்தி மற்றும் ஒத்துழைப்புக்கான சுவிஸ் முகவராலயத்தினதும் சர்வதேச தொழிலாளர் அமைப்பினதும் பங்களிப்போடு உபசரணை வழங்குதல் மற்றும் உபசார பிரிவுகளில் தொழில் வாய்ப்புகளை அதிகரிப்பதற்காக தொழில் புலம்பெயர்வு மூலோபாயங்களை அபிவிருத்தி செய்யும் கருத்திட்டத்துடன் பாதுகாப்பான மற்றும் பொறுப்புடன்கூடிய தொழில் புலம்பெயர்வு நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.
- வெளிநாடு செல்ல எதிர்பார்க்கும் அரச ஊழியர்களுக்கும் ஏனைய ஊழியர்களுக்கும் பாதுகாப்பான தொழில் வாய்ப்புகளை வழங்குவது தொடர்பாக உதவியளிப்பதற்கான விசேட கருத்திட்டம் ஒன்று வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பிரிவின் இணைப்பாக்கத்தில் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சும் கல்வி அமைச்சும் இணைந்து நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளன.
- இதற்காக ஒருங்கிணைந்த வழிகாட்டல்கள் மற்றும் பரிந்துரை முறைமை (Integrated Guidance and Referral System –IGRS) நிறுவப்படும். இதன் முன்னோடிக் கருத்திட்டத்திற்காக நிதி மற்றும் தொழில்நுட்ப ஆதரவு புலம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பினால் (IOM) வழங்கப்படுகின்றது.
- சம்பந்தப்பட்ட ஏனைய அமைச்சுகள் மற்றும் நிறுவனங்களின் ஆதரவினைப் பெற்றுக்கொண்டு மீண்டும் திரும்பி வருகின்ற புலம்பெயர் தொழிலாளர்களை உள்நாட்டு தொழில் சந்தையில் இணைப்பதற்கு தற்போது உள்ள முறையியலை பலப்படுத்துதல்.

## 3.2 தொழில் திணைக்களம்

I. தொழில் திணைக்களத்தின் டிஜிட்டல்மயமாக்க நடவடிக்கைகளை 2023 ஆம் ஆண்டில் ஆரம்பித்து 2026 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் தனியார் மற்றும் பகுதியளவு அரச துறையின் சகல ஊழியர்களும் சேவையில் இணைத்துக்கொள்ளப்பட்ட திகதி தொடக்கம் ஓய்வு பெறும் திகதிவரை தொழில் திணைக்களத்தினால் வழங்கப்படுகின்ற சகல சேவைகளையும் டிஜிட்டல்

மயமாக்குவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. சேவை பெறுநர் திணைக்களத்திற்கு வருகை தருவதை இயன்றளவிற்குக் குறைத்து இணையத்தளத்தின் ஊடாக சேவைகளை வழங்குவதன் மூலம் தாமதங்களைத் தவிர்த்து வினைத்திறனை மேம்படுத்துவதற்கு வாய்ப்பு கிடைக்கின்றது.

II. சமூக உரையாடலுக்குரிய தர நியமங்களைப் பேணி வருகின்ற நிறுவனங்களுக்கு "சமூக உரையாடல் தரச் சான்றிதழ்கள்"(Social Dialogue Certificate for Quality) 2023 ஆம் ஆண்டு தொடக்கம் வழங்கப்படுதல்.

தனியார்துறை மற்றும் பகுதியளவான அரசதுறை நிறுவனங்களுக்கு தரச் சான்றிதழை பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பப்படிவங்களை முன்வைப்பதற்கு வாய்ப்புக் கிடைப்பதோடு குழு ஒன்றின் ஊடாக களப் பரிசோதனைகளை மேற்கொண்டதன் பின்னர் மதிப்பீட்டுப் பத்திரத்திற்கு குறிப்பிட்ட நிறுவனங்கள் பெற்றுக்கொள்ளும் புள்ளிகளின் மீது குறிப்பிட்ட நிறுவனத்தின் சமூக உரையாடல் மற்றும் வேலைத்தள ஒத்துழைப்பு எந்த மட்டத்தில் உள்ளது என்பது தொடர்பில் சான்றிதழ் ஒன்றை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

III. கண்டி, நுவரெலியா, புத்தளம், மட்டக்களப்பு மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்கள் 2023 ஆம் ஆண்டிலும் 2025 ஆம் ஆண்டளவில் சகல மாவட்டங்களும் "குழந்தை தொழிலாளர்கள் இல்லாத வலயங்கள்" ஆக உறுதிப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

IV. தொழில் வழக்குகள் தொடர்பாக ஏற்படுகின்ற தாமதங்களைக் குறைப்பதற்கு 2022 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க கைத்தொழில் பிணக்குகள்(சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தின் மூலம் நீதவான் நீதிமன்றங்களுக்கு ஒருங்கிய நியாயாதிக்கம் தொழில் நியாய சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

V. திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளம் 2023 முதல் காலாண்டில் அபிவிருத்தி செய்து முடித்தல்.

VI. தனியார் துறையுடன் இணைந்து மெஹெவர பியச கட்டிடத்தில் பொது வசதிகள் வழங்கப்படுவதை முன்னேற்றுதல்.

### 3.3 இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்

I. வெளிநாட்டிலிருந்து மீண்டும் நாட்டுக்கு வருகின்ற இலங்கையர்களுக்கு அவர்கள் வெளிநாட்டில் இருந்த காலப்பகுதியை அடிப்படையாகக்கொண்டு இலங்கையில் தீர்வை வரியற்ற வர்த்தக நிலையங்களில் இருந்து பொருட்களை கொள்வனவு செய்வதற்கு வழங்கப்படுகின்ற சுங்கவரி விலக்களிப்பு கொடுப்பனவிற்கு மேலதிகமாக தமது வெளிநாட்டுத் தொழிலின் மூலம் ஈட்டும் பணத்தை சட்டரீதியான முறைகளின் ஊடாக இலங்கைக்கு அனுப்புகின்ற இலங்கையர்களுக்கு மேலதிக சுங்கவரி விலக்களிப்பு கொடுப்பனவு வழங்கப்படுதல்.

II. குறைந்த வட்டி பல்தொழிற்பாட்டு கடன் திட்டம் ஒன்றை இலங்கை மத்திய வங்கி மற்றும் உரிமம் பெற்ற வங்கிகளுடன் ஒருங்கமைவாக நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

III. உரிமம் பெற்ற வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர் நிறுவனங்கள் தரப்படுத்தலின் ஊடாக அவர்களின் தொழில்சார் தன்மையை உயர்த்துதல் மற்றும் மிகவும் நம்பகமான மற்றும் பயனுள்ள சேவைகள் வழங்கப்படுவதை ஊக்குவித்தல்.

IV. வெளிநாட்டு வேலைவாய்ப்புத் துறையை முறைமைப்படுத்துதல், நடைமுறையிலுள்ள சட்டக் கட்டமைப்புகளை பலப்படுத்துதல் மற்றும் சர்வதேச கடப்பாடுகளுக்கு இசைவாக்கம் அடைவதற்காக உள்நாட்டு ரீதியில் சட்டங்களை அமுல்படுத்துவதனை இலகுபடுத்துவதற்காக பணியக சட்டத்தைத் திருத்துதல்.

V. ஜப்பான், ருமேனியா மற்றும் சிசெல்ஸ் நாடுகளில் அமைந்துள்ள இலங்கை தூதரகங்களில் தொழில் மற்றும் நலனோம்பல் பிரிவுகளைத் தாபிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.

VI. புதிய தொழில் சந்தை வாய்ப்புகளை இனங்கண்டு குறிப்பிட்ட தொழில் வாய்ப்புகளுக்காக பயிற்சிபெற்ற தொழிலாளர்களை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

VII. வெளிநாட்டு தொழில் சந்தையில் காணப்படுகின்ற உபசார சேவை தொழில் வாய்ப்புகளை இலக்காகக் கொண்டு பணியகத்தினால் நடத்தப்பட்டு வருகின்ற தேசிய தொழில்சார் தகைமைகள் மூன்றாம் மட்டம் (NVQ Level III) பயிற்சிப் பாடநெறிகளை பேணி வருவதற்கு ஸ்ரீ ஜெயவர்தனபுர வைத்தியசாலைக்கு மேலதிகமாக வேறு பொருத்தமான நிறுவனங்களுக்கு வாய்ப்பு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

VIII. வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவராலயங்களுக்கு வழங்கப்பட்டுள்ள உரிமங்களின் வருடாந்த புதுப்பித்தலில், மனித கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் காணும் நோக்கில் அறிமுகப்படுத்தப்பட்ட புள்ளி அட்டை முறை (Score Card System) நடைமுறைப்படுத்தப்பட்டது.

### 3.4 மனிதவலு மற்றும் வேலைவாய்ப்பு திணைக்களம்

I. தொழில்முயற்சி மேம்பாட்டுக்காக ஒருங்கிணைந்த அணுகுமுறையில் பங்குதாரர்களுடன் இணைந்து பணியாற்றுதல்.

II. தொழில் அபேட்சகர்களையும் தொழில் வழங்குநர்களையும் இணையவழி மூலம் பதிவு செய்தல்

III. திணைக்கள சேவைகளை இணையவழி ஊடாக மேற்கொள்ளல்

IV. ஏனைய உற்றறி பண்பாற்றல் சோதனைகளை (தொழில்சார் திறவுகோல், பலவித நுண்ணறிவு கோட்பாடு தவிர) தன்னியக்கமாக்கல் (Automation)

V. YouTube, FB, Twitter, LinkedIn, TikTok, WhatsApp, Instagram போன்ற சமூக ஊடகங்களைப் பயன்படுத்தி பல்வேறு சமூக அடுக்குகளை விளித்தல்.

VI. திணைக்களத்தின் YouTube அலைவரிசையில் தொழில் வழிகாட்டல் சேவைகளை வழங்குதல் மற்றும் வெற்றிகரமான தொழில்முயற்சியாளர்கள் குறித்த வீடியோக்களை பதிவேற்றுதல்

VI. கடதாசி பாவனை இல்லாத அலுவலகமாக மாறுதல்

### 3.5 தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம்

I. தொழில் உறவுகள் மற்றும் தொழில் சட்டங்கள் மற்றும் மனித வள முகாமைத்தவம் ஆகியவற்றில் பட்டதாரி மற்றும் முதுகலை தொழில்வாண்மையாளர்களை உருவாக்க இயலுமான வகையில் தேசிய தொழில் கற்கைகள் நிறுவகத்தை அபிவிருத்தி செய்தல்.

II. தேயிலை தோட்ட நிறுவனங்கள் மற்றும் தேயிலை தொழிற்சாலைகளில் தரமான பணிச்சூழலை உருவாக்கத் தேவையான பயிற்சி மற்றும் வழிகாட்டுதல்களை வழங்குவதன் மூலம் ஆரோக்கியமான தொழில்துறை உறவுகளை மேம்படுத்துதல்.

III. சிறிய மற்றும் நடுத்தர அளவான தொழில்முயற்சியாளர்களுக்கு வழிகாட்டும் அரசாங்க அதிகாரிகளுக்கு தொழில்துறை உறவுகள் மற்றும் தொழில் சட்டம் பற்றிய நல்ல அறிவை வழங்குவதன் மூலம் ஆரோக்கியமான தொழில்துறை உறவுகளுடன்கூடிய தொழில்முயற்சியாளர்களை உருவாக்குதல்.

IV. திறைசேரியிலிருந்து பெற்றுக்கொள்ளப்படும் நிதி ஏற்பாடுகள் பெரும்பாலும் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளுக்கு மட்டுமே வரையறுக்கப்படுகின்றது. 2023 ஆம் ஆண்டில், 06 மாதங்களுக்குப் போதுமான ஒதுக்கீடுகள் கோரப்பட்டுள்ளதுடன் 2024 ஆம் ஆண்டிலிருந்து, திறைசேரியின் ஒதுக்கீடுகளின் மீது தங்கியிருக்காது சுயநிதி நிறுவனமாக மாறுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

V. தொழில் உறவுகள் மற்றும் தொழில் சட்ட டிப்ளோமா பாடநெறி NVQ - 5 மட்டத்தைப் பெற்றுள்ளதோடு NVQ - 6 மட்டத்தில் உயர் டிப்ளோமா பாடநெறியொன்றை அறிமுகப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. தற்போதுள்ள மனித வள முகாமைத்துவ டிப்ளோமா பாடநெறி NVQ – 5 பாடத்திட்டத்திற்கு அமைவாக இற்றைப்படுத்தவதற்கும் NVQ – 6 மட்டத்திலான உயர் டிப்ளோமாவை அறிமுகப்படுத்துவதற்கும் தேவையான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

VI. பல புதிய தொழில் கற்கைகள் டிப்ளோமோ, சான்றிதழ் பாடநெறிகள் அறிமுகப்படுத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

- நிறுவன நடைமுறைகள் பற்றிய சான்றிதழ் பாடநெறி
- செயலாற்றுகை அளவீடு மற்றும் செயலாற்றுகை முகாமைத்துவம் பற்றிய நிறைவேற்றுச் சான்றிதழ் பாடநெறி
- நிறுவன உளவியலில் சான்றிதழ் பாடநெறி
- ஆய்வு முறையியல்கள் பற்றிய சான்றிதழ் பாடநெறி போன்றவை அவற்றில் சில ஆகும்.

VII. பல்வேறு பல்கலைக்கழகங்கள் மற்றும் தனியார் துறை நிறுவனங்களுடன் இணைந்து தொழில் கற்கை பாடநெறிகள், கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகளை நடத்துவதும் நிறுவன நோக்கங்களில் ஒன்றாகும். இதன்படி மனித வள முகாமைத்துவ டிப்ளோமா பாடநெறி எதிர்காலத்தில் கேகாலையில் உள்ள சனச வளாகத்துடன் இணைந்து நடத்தப்படும். மேலும், அரச சேவை பயிற்சியை மேலும் விரிவுபடுத்தும் வகையில், மாகாண சபைகளின் கீழ் உள்ள முகாமைத்துவ மற்றும் அபிவிருத்தி பயிற்சி நிறுவனங்களுடன் (MDTU) இணைந்து பயிற்சி நிகழ்ச்சிகளை நடத்துவதற்கான சாத்தியக்கூறுகள் ஆராயப்பட்டு வருகின்றன.

VIII. இந்த ஆண்டு தமிழில் நடத்தப்படும் பயிற்சி வகுப்புகளின் எண்ணிக்கையும், பங்கேற்பவர்களின் எண்ணிக்கையும் கணிசமாக அதிகரித்துள்ளது. அதன்படி, தமிழில் நடத்தப்படும் பாடநெறிகளை மேலும் விரிவுபடுத்தவும், வடக்கு மற்றும் கிழக்குப் பிரதேசங்களில் பிரதேச பயிற்சிச் செயலமர்வுகளை நடத்தவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

IX. தேசிய தொழில் கற்கைகள் நிறுவகத்தின் செயற்பாடுகளை அபிவிருத்தி செய்வதற்கு துரிதமாக நடைமுறைப்படுத்த வேண்டிய பல திட்டங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அதன்படி, ISO 9001 தர முகாமைத்துவ முறைமை சான்றிதழைப் பெறுவதற்கும், டிஜிட்டல் முறைகள் மூலம் முடிந்தவரை காகிதமில்லா நிறுவன செயல்பாடுகளைச் செயல்படுத்துவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. மேலும் சமூக ஊடக பயன்பாட்டினை விரிவுபடுத்தியும் பிற விளம்பர முறைகள் மூலமும் NILS குறியீட்டுப் பெயரை பிரபலப்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

### 3.6 தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம்

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம் 2023 ஆம் ஆண்டு முதல் திறைசேரியிலிருந்து நிதியைப் பெறாமல் சுயநிதி நிறுவனமாக நிலையாக பேணிவரப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். உழைக்கும் மக்களின் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு தொடர்பாக, தற்போது மேற்கொள்ளப்படும் வேலைகளினால் ஏற்படும் விபத்துகள் மற்றும் நோய்களைத் தடுப்பதன் மூலம் பாதுகாப்பான பணியிடத்தையும் ஆரோக்கியமான பணியாளர்களையும் உருவாக்கும் பணியை மேலும் விரிவுபடுத்தவும், தேசிய நிறுவனத்தை விரிவுபடுத்தவும் எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், 2023 ஆம் ஆண்டில் இந்த நிறுவனத்தை தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தில் சர்வதேச அளவிலான நிறுவனமாக மாற்ற தேவையான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும்.

### 3.7 வேலையாளர் நட்டஈட்டு ஆணையாளர் அலுவலகம்

தொழிலாளர் நட்டஈடு வழங்கப்படுதல் தொடர்பான பணிகளை விரைவுபடுத்துவதற்காக வேலையாளர் நட்டஈட்டு ஆணையாளர்கள் மற்றும் தொழில் நியாய சபைகளுக்கு ஒழுங்கியலும் நியாயாதிக்கம் வழங்கப்படுதல். சேவை நிலையங்களில் ஏற்படும் விபத்துக்களுக்கு நட்டஈடு வழங்கும் செயன்முறையை துரிதப்படுத்துவதற்காக அது சம்பந்தப்பட்ட வழக்குகளை விசாரிக்க வேலையாளர் நட்டஈட்டு ஆணையாளர் மற்றும் தொழில் நியாய சபைகளுக்கு ஒருங்கிய நியாயாத்திக்க அதிகாரம் அளிக்கும் வகையில், 1934 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க வேலையாளர் நட்டஈட்டு கட்டளைச் சட்டம் மற்றும் 1950 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க தொழில் பிணக்குகள் கட்டளைச் சட்டம் ஆகியவற்றைத் திருத்த எதிர்பார்க்கப்படுகின்றது.

### 3.8. தேசிய உற்பத்தித்திறன் செயலகம்

I. நிலையான உணவுச் சங்கிலிகள் மூலம் உணவுப் பாதுகாப்பு மற்றும் தர மேம்பாடு மூலம் உணவு உற்பத்தியில் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர்களை வலுவூட்டுதல்.

ஆசிய உற்பத்தித்திறன் அமைப்பின் (Asian Productivity Organization) நிதி மற்றும் ஆலோசனை சேவைகளின் அடிப்படையில், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தைகளை இலக்காகக் கொண்ட சுகாதாரமான உணவு உற்பத்தி பிரச்சனைகளுக்குத் தீர்வு காண எதிர்பார்க்கப்படுகிறது. இந்தத் திட்டம் சர்வதேச சந்தை தேவைக்கேற்ப தரமான சுகாதாரமான உணவை சந்தைக்கு வழங்கும். பால் மற்றும் இறைச்சி, மரக்கறிகள் மற்றும் பழங்கள், மீன்பிடி, சிறு ஏற்றுமதி பயிர்கள் மற்றும் தென்னை உற்பத்திகள் ஆகிய துறைகளை அடிப்படையாகக் கொண்டு இந்த திட்டத்தை நாடளாவிய ரீதியில் நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் 10 சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களைக் கொண்டு 240 தொழில்முயற்சியாளர்களை வலுவூட்ட எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் பயிற்சி மற்றும் ஆலோசனைச் சேவைகள் மூலம் தொழில் முயற்சியாளர்களின் பலத்தை வளர்த்து, ஏற்றுமதி வர்த்தகத்துடன் தொடர்புடைய வலுவான பொருளாதார வடிவத்தை உருவாக்க முடியும்.

II. பொதுத்துறையில் நடுத்தர அளவிலான முகாமையாளர்களை (Middle Level Managers) உற்பத்தித்திறன் நிபுணர்களாக உருவாக்குதல்

அரச துறையில் பல்வேறு உற்பத்தித்திறன் ஊக்குவிப்புத் திட்டங்கள் தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தப்படுகின்ற போதிலும், பல்வேறு காரணங்களால் குறுகிய காலத்தில் அதுனது நிலைத்தன்மை இல்லாது செல்வதாக பல்வேறு மூலங்கள் மூலம் பதிவாகியுள்ளது. இது ஒவ்வொரு நிறுவனத்திற்கும் தனித்துவமான வெளிப்புற மற்றும் உள் காரணிகளால் நடந்தாலும், நாட்டின் உயிர்நாடியாக இருக்கும் பொதுத்துறையுடன் இந்த பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டியது அவசியம். அதற்காக பல்வேறு உத்திகள் பின்பற்றப்பட வேண்டியதுடன், நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து அரச நிறுவனங்களிலும் ஒருங்கிணைந்த சேவையுடன் தொடர்புடைய அனைத்து நடுத்தர முகாமையாளர்களையும் ”உற்பத்தித்திறன் நிபுணர்களாக” பயிற்றுவிப்பது காலோசிதமானது. தேசிய உற்பத்தித்திறன் செயலகம், ஆசிய உற்பத்தித்திறன் அமைப்பின்

உற்பத்தித்திறன் நிபுணர்களை ஒரு சான்றளிப்பு அமைப்பாக (Asian Productivity Organization Certification Body) மேம்படுத்தி அதனூடாக இந்த அதிகாரிகளை மேம்படுத்தவும், ஒவ்வொரு இரண்டு வருடங்களுக்கும் இந்த அதிகாரிகளை மதிப்பீடு செய்து சான்றளிக்கவும் முன்மொழியப்பட்டுள்ளது.

III. ஆசிய உற்பத்தித்திறன் அமைப்பின் ஒத்தழைப்புடன் நிகழ்ச்சித்திட்டங்களை செயல்படுத்துதல்

IV. பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பான பாடத்திட்டங்களை மதிப்பாய்வு செய்வதன் மூலம் தற்போதைய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை வகுத்தல்.

## 3.9 வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனம்

I. பணியாட்டொகுதியின் ஆற்றல் விருத்திக்காக மனித வள மேம்பாட்டுப் பயிற்சியை வழங்குதல்

II. வெற்றிடமாகவுள்ள பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்தல்

III. உத்தியோகத்தர்களை மதிப்பீடு செய்வதற்கான முறையியலொன்றை உருவாக்குதல்

IV. தூதரகங்களிலிருந்து கிடைக்கின்ற வெற்றிடங்களுக்கு செயற்றிறன்மிகு ஆட்சேர்ப்பு முறையை உருவாக்குதல்

இந்த ஆண்டில் பெறப்படவுள்ள வேலைவாய்ப்பு கோரிக்கைகளின் விவரங்கள் பின்வருமாறு,

| நாடு | தொழில் வகுதி | வேலைவாய்ப்பு கோரிக்கைகளின் அளவு |
|---|---|---|
| கொரியா | ஒட்டுநர் | 140 |
| சவுதி ஆரேபியா | பராமரிப்பு தொழில்நுட்பர்கள் | 01 |
| | CNC தொழில்நுட்பர்கள் | 01 |
| | பிரதான தொழில்நுட்ப பொறியியலாளர் | 01 |
| | QA கணக்காய்வாளர் | 01 |
| | QA/QC அத்தியட்சகர் | 01 |
| | சிரேஸ்ட அளவு மதிப்பீட்டாளர் | 04 |
| | அளவு மதிப்பீட்டாளர் | 02 |
| | உதவி அளவு மதிப்பீட்டாளர் | 03 |
| | ஜுக்கி மெஷின் இயக்குநர் | 350 |
| ரஷ்யா | ஜுக்கி மெஷின் இயக்குநர் | 100 |
| சிங்கப்பூர் | தாதி (RN), தாதி (EN), பராமரிப்பு ஊழியர் | 50 |